விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வமதத் திருமண சேவை)
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2048 மார்கழி 12 புதன்கிழமை (27.12.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 008

## 2,300 ஆண்டுகள் பழைமையான கல்வெட்டு கண்டுபிடிப்பு

(பொலன்னறுவை)

பொலன்னறுவை மாவட்டத்தின் திம்புலாகல பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சிறிபுர கிராமத்தில் 2,300 ஆண்டுகள் பழைமையான கல்வெட்டொன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. 23

## ஊழல் குற்றவாளிகளுக்கு தண்டனை நிச்சயம் - ஜனாதிபதி

(கொழும்பு)

அடுத்த ஆண்டு நடைபெறும் உள்ளூராட்சி தேர்தலுக்கு முன்னர் மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரத்தில் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப் படும் என ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாகவும் அரசாங்க... தகவல் ஏடு 23

# உள்ளூராட்சி மன்ற தேர்தலை நீதியாக நடத்த சகலரும் ஒத்துழையுங்கள்

### தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் மஹிந்த தேசப்பிரிய வலியுறுத்தல்



(கொழும்பு) உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நீதியாகவும், நேர்மையாகவும் நடத்தச் சகல தரப்புக்களும் தமது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய வலியுறுத்தியுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## சுகாதார பரிசோதகர் போன்று வேடமிட்டு சங்கிலி அறுப்பு

### பருத்தித்துறையில் நேற்று சம்பவம்

(தும்பளை)

சுகாதார பரிசோதகர் போன்று வேடமிட்டு சங்கிலியை அபகரித்த சம்பவம் ஒன்று நேற்று பருத்தித்துறையில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது, பருத்தித்துறை வி.எம். வீதியில் உள்ள வீடொன்றில் நேற்றுக் காலை 10 மணியளவில் சுகாதாரப் பரிசோதகர் போன்று உடை அணிந்தவர்கள் டெங்கு பார்வையிடப் போகின்றோம் என தெரிவித்து குறித்த வீட்டின் பெண் அமர்ந்தவாறு இருக்கும் சமயம் 23

## தபால் மூலமான முடிவுகள் தனியாக வெளியிடப்படாது

### தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது தபால் மூல வாக்களிப்பு தொடர்பான முடிவுகள் தனியாக வெளியிடப்படமாட்டாது என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தபால் மூல வாக்களிப்பு செய்யப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் அனைத்தும் தேர்தல் நடைபெறும் தினம் அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களின் வாக்கு எண்ணும் நிலையங்களில் ஒப்படைக்கப்படும் 23

## மர்மக் காய்ச்சலால் எட்டு வயது சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

மர்மக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட எட்டு வயது சிறுவன் ஒருவன் நான்கு நாட்களின் பின்னர் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளான். உடுப்பிட்டி நாவலடியை 24

## சட்டங்களை மீறினால் பதவி பறிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது சட்டதிட்டங்களுக்கு புறம்பாக செயற்படும் சிறிலங்கா சுதந்திர கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வேட்பாளர்களின் உறுப்பினர் பதவியும் பறிக்கப்படும் என கட்சித் தலைமை எச்சரித்துள்ளது. 23



## ஆழிப் பேரலையால் உயிர் நீத்தவர்களுக்கு வடக்கில் உணர்ச்சியுடன் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தின் 13 ஆம் ஆண்டு நினைவுகள் நேற்றைய தினம் உலகெங்கும் நினைவுகூரப்பட்டன. தாயகப் பகுதிகளிலும் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இந்த நினைவுதினம் உணர்ச்சி பூர்வமாக நடைபெற்றது. பேரலை கொண்டு சென்ற தமது உறவுகளை நினைந்து 13 ஆண்டுகள் கடந்தும் உறவுகள் கதறி அழுதனர்.

2004 ஆம் ஆண்டு நேற்றைய நாளில் ஏற்பட்ட சுனாமி அலையால் பல இலட்சம் மக்கள் கொல்லப்பட்டிருந்தனர். இதே போன்று இலங்கையிலும் 40 ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டிருந்தனர். வடக்கில் யாழ்ப்பாணத்தில் 1256 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 2902 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 32 பேரும் 23

## புலம்பெயர் உறவுகள் உதவியுடன் வடக்கில் பாரிய அபிவிருத்தி

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் வடகிழக்கின் தமிழ் பிரதேசங்களின் பாரிய அபிவிருத்தியை முன்னெடுக்க உத்தேசித்துள்ளோம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் தமது கட்சி வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வை தொடர்ந்து யாழில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். 23

## விசேட அதிரடிப்படையினரால் கிளிநொச்சி கனகபுர பகுதியில் கஞ்சாவுடன் இருவர் கைது



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனகபுரம் பகுதியில் நேற்று விசேட அதிரடிப் படையினரால் 10.645 கிலோ கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. 24

## வவுனியா பேருந்து நிலையத்தில் தனியார் - இ.போ.ச. முறுகல்

### 6 பேருக்கு நீதிமன்றம் அழைப்பாணை

(வவுனியா)

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான வவுனியா பேருந்து நிலையத்தில் இருந்து வவுனியா தனியார் பஸ்கள் உள்ளூர் சேவைகளை நேற்று (செவ்வாய்க்கிழமை) முன்னெடுக்கச் சென்ற போது இ.போ.சபை 24

## வாக்காளர் அட்டைகள் விநியோகிப்பதில் தடை ஏற்பட்டுள்ளது

(கொழும்பு)

இன்று நாடு பூராகவும் நேரான நகரங்களில் ஏற்பட்ட அசௌகரியம் போன்றவை காரணமாக தபால் திணைக்களம் ... 23

# நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

காரைநகர் கிழவன்காடு
கலாமன்றம் நடத்தும்
**தெய்வீகக் கலையரங்கு**

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.
காலம் : 27.12.2017 புதன்கிழமை மாலை 5 மணி

**நிகழ்ச்சி நிரல்**

- சுழத்து பிரபல வேத விற்பன்னர்கள் வழங்கும் **வேதபாராயணம்**
- காரை லீலாவதி இராசரத்தினம் வழங்கும் **திருவாசகம் ஓதல்** (கலாமன்ற பண்ணிசை ஆசிரியர்)
- கலாமன்ற நடனத்துறையினர் வழங்கும் **புஸ்பாஞ்சலி**
- கலாமன்ற மிருதங்கத்துறையினர் வழங்கும் **மிருதங்க இசை**
- செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்கள் வழங்கும் "எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" **சொற்பொழிவு**

**சிறப்பு நிகழ்ச்சி**

கோண்டாவிலூர் பஞ்சமூர்த்தி குமரன் குழுவினர் வழங்கும் "நாதசங்கமம்"

+ நாதஸ்வரம் : திரு.பஞ்சமூர்த்தி குமரன்
+ இணை நாதஸ்வரம் : திரு.இ.பாலுசந்தர்
+ தவில் : திரு.K.T.விபூர்ணன்
+ தபேலா : திரு.S.விமலசங்கர்
+ கீபோட் : திரு.மைக்கல் சாள்ஸ்
+ ரிதம் பாற் : திரு.S.பானுதீபன்
+ பேஸ் கிற்றார் : திரு.S.மயூரன்
+ டொல்க்கி : திரு.R.சுபாஷ்

குறிப்பு : நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை கலாமன்ற யாழ். கிளையிலிருந்து (இல.11, 1-வது கஸ்தூரியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம்) பிற்பகல் 4.15 மணிக்கு ஆரம்பமாகும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(C-942) கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.


# அரியாலையில் இளைஞன் சுட்டுக்கொலை

# புலனாய்வு உத்தியோகத்தர்களின் விளக்கமறியல் ஜனவரி 9 வரை

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்கு பகுதியில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கின் சந்தேக நபர்களான விசேட அதிரடிப்படை புலனாய்வு உத்தியோகத்தர்கள் இருவரையும் எதிர்வரும் ஜனவரி மாதம் 9 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ் நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ்.சதீஸ்தரன் உத்தர விட்டுள்ளார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 22 ஆம் திகதி அரியாலை கிழக்கு பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 24 வயதுடைய டொன் பொஸ்கோ ரிக்மன் என்ற இளைஞர் உயிரிழந்திருந்தார்.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பான விசாரணைகளின் அடிப்படையில் இச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் விசேட அதிரடிப் படையின் புலனாய்வு அதிகாரி உட்பட இருவர் குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வழக்கு விசாரணை நேற்று யாழ் நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகள் தொடர்வதாக மன்றில் தெரிவிக்கப்பட்டதையடுத்து சந்தேகநபர்கள் இருவரையும் எதிர்வரும் ஜனவரி 9 ஆம் திகதிவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ம-9)

# சம்பந்தனிடம் நலம் விசாரித்தார் விக்னேஸ்வரன்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று முன்தினம் சந்தித்து நலம் விசாரித்துள்ளார்.

உடல்நலக் குறைவினால், இரா.சம்பந்தன் கடந்த வியாழக்கிழமை கொழும்பு தனியார் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டார். நேற்று முன்தினம் அவர், சிகிச்சைகள் முடிந்து முழுமையாக குணமடைந்த நிலையில் வீடு திரும்பினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அதிகாரபூர்வ இல்லத்தில் தங்கியிருந்த இரா.சம்பந்தனை நேற்று முன்தினம் பிற்பகல் வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் சந்தித்து நலம் விசாரித்தார்.

சுமார் 30 நிமிடங்கள் வரை இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.(ம)


**விற்பனைக்கு**

ஊரெழுவில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு, அறைகள் வாடகைக்கு உண்டு. மற்றும் நீர் இறைக்க பயன்படும் பைப் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
0770098336, 0779384243



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



# யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

**வரவு செலவு திட்டம் - 2018**

1987ஆம் ஆண்டு மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் (252), (212) பி பிரிவின் பிரகாரம் 2018ஆம் ஆண்டிற்கு கிடைக்கக்கூடிய வருமான மதிப்பீட்டினையும் உத்தேச செலவின விபரங்களையும் உள்ளடக்கிய, யாழ் மாநகராட்சி மன்றத்தின் 2018ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 27.12.2017ஆம் திகதி தொடக்கம் இல.585/5 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மாநகரசபை அலுவலகம், இல.15, முற்றவெளி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரதான பொது நூலகம் மற்றும் மாநகரசபை கிளை நூலகங்களிலும் அலுவலக நேரத்தின் போது பார்வைக்கு வைக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்

திரு.இ.த.ஜெயசீலன்
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம். (P-147)



# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
# மானிப்பாய் கிராம உப அலுவலகம்
# ஆனைக்கோட்டை
# ஆதன பெயர் மாற்ற அறிவித்தல்

**வட்டாரம் :- 05**
**ஆதன இல. :- 30/6**
**வீதி :- குளப்பிட்டி வீதி**
**கிராம சேவையாளர் பிரிவு :- J/132**

வட்டாரம் 05, குளப்பிட்டி வீதி, ஆதன இல 30/6 இல் அமைந்துள்ள உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் தென்மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று ஆனைக்கோட்டை இறை "ஊமைக்காடு கிழக்கு" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 03 குளி 00.12 கொண்ட இவ்வாதனம் கொழும்பு 13, கினிறஸ்ட் தொடர்மாடி மகா வித்தியாலய வீதி இல.189/L 6/ச் சேர்ந்த சிவசாமி இராசசிங்கம் பெண் தங்கா ஆகிய அவர்களால் ஆனைக்கோட்டை ஆலடியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் கைம்பெண் ஜெகதீஸ்வரிக்கு பிரசித்த நொத்தாரிஸ் சி.வீரகத்திப்பிள்ளை அவர்கள் முகதாவில் நிறைவேறிய 11684ம் இலக்க 2011.11.06ம் திகதிய அறுதி உறுதி மூலம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாதனத்திற்கான தாயுறுதி பிரசித்த நொத்தாரிஸ் சோ.தேவராஜா அவர்கள் முகதாவில் நிறைவேறிய 278ம் இலக்க 2011.11.15ம் திகதிய பிரகடனப்படுத்தல் சாதன உறுதியாகும். இப்பிரகடனப்படுத்தல் சாதன உரிமையாளர் சிவசாமி இராசசிங்கம் பெண் தங்கா அவர்களால் பாலசுப்பிரமணியம் கைம்பெண் ஜெகதீஸ்வரி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது . எனவே குறித்த உரிமையாளர் பாலசுப்பிரமணியம் கைம்பெண் ஜெகதீஸ்வரி என்பவர் இவ்வாதனம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதன பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையாளர் திரு.K.A.இளையதம்பி அவர்களால் வரையப்பட்ட 396ம் இலக்க 26.06.2011ம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது "ஊமைக்காடு கிழக்கு" நிலப்பரப்பு 03 குளி 00.12 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பாலசுப்பிரமணியம் கைம்பெண் ஜெகதீஸ்வரி என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். குறித்த பெயர்மாற்றம் தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படின் அதற்கு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பொறுப்பேற்காது என்பதை அறிய தருகின்றேன்.



செயலாளர்,
வலி தென்மேற்கு
பிரதேச சபை,
மானிப்பாய். (1987)



# 08-ம் ஆண்டு நினைவலைகள்

திருமதி
**விஜயகுமார் சர்வேஸ்வரி**



காலனவன் உங்கள்
உயிரைக் கவர்ந்து
சோகத்தைத் தந்து இன்றுடன்
ஆண்டுகள் எட்டு ஆனாலும்
உங்கள் நினைவுகள்
எங்கள் மனதில் என்றும்
பசுமையாக உள்ளது

பிறப்பு: 27.02.1969
இறப்பு: 25.12.2009

ஆவரங்கால், மேற்கு. (C-948)

என்றும் நினைவுகளுடன்
மகள் - ராஜராஜன் யர்த்திகா,
பேர்த்திகள் - அக்ஷிரா, அஸ்மிரா,
மகன் : யதீபன், தாய் - சிதம்பரம்

# உடுத்துறையில் சுனாமி நினைவேந்தல் நிகழ்வு



சுனாமி பேரலையால் காவுகொள்ளப்பட்டவர்களின் 13 ஆவது நினைவுதினம் வடமராட்சி உடுத்துறையில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி சுனாமி பேரலையால் இலங்கையில் மட்டும் சுமார் 40 ஆயிரம் பேர் உயிரிழந்திருந்தனர். இந்த அனர்த்தத்தின் 13 ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று தமிழர் தாயகத்தில் பல இடங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டன.
(படங்கள்:-உ.சாளின், கரணவாய்.பொற்பதி செய்தியாளர்கள்)

## இலங்கைத் தேயிலை ஏற்றுமதிக்கு
## ரஷ்யா விதித்திருந்த தடை நீக்கப்பட்டமை
## நட்புறவை வெளிக்காட்டும் ஒரு உதாரணம்
# ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும் ரஷ்யா வுக்கும் இடையிலான முன்மாதிரியான இராஜதந்திர உறவுகள் என்றும் தொடரும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிபால தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தேயிலை ஏற்றுமதிக்கு ரஷ்யா விதித்திருந்த தடை நீக்கப்பட்டமையானது அந்த நட்புறவை வெளிக்காட்டும் ஒரு உதாரணமாகும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தமது டுவிட்டர் கணக்கில ஜனாதிபதி நேற்று முன்தினம்



இதனைப் பதிவிட்டுள்ளார்.

ரஷ்யாவினால் இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்படும் தேயிலை உள்ளிட்ட விவசாய உற்பத்திகளுக்காக விதித்திருந்த தடை நீக்கப்பட்டமையை அடுத்தே ஜனாதிபதி இந்த பதிவை இட்டுள்ளார்.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை உள்ளிட்ட விவசாய பொருட்களுக்காக விதிக்கப்பட்டிருந்த இறக்குமதி தடையை எதிர்வரும் 30 ஆம் திகதியுடன் நீக்குவதற்கு ரஷ்யா நேற்று முன்தினம் தீர்மானித்தது.

குறிப்பாக தேயிலைக்காக விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்குவது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த இலங்கையின் தொழில்நுட்பக் குழு கடந்த 24ஆம் திகதி ரஷ்யா சென்றிருந்தது.

அவர்கள் ரஷ்ய அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்து தடை நீக்கம் தொடர்பில் ரஷ்யா அறிவித்ததாக பெருந்தோட்டத் துறை அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

இதனிடையே ரஷ்யாவில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் எஸ்பெஸ்டர் உற்பத்திகள் மற்றும் மூலப்பொருட்கள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக 5 அமைச்சுக்களை சேர்ந்த நிபுணர்கள் குழு ஒன்று நேற்று முன்தினம் ரஷ்யாவின் மொஸ்கோ நோக்கி பயணமானமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

மெல்போர்ன் டெஸ்ட் 1ஆம் நாள்

# சதமடித்து தூள் கிளப்பினார் வோர்னர்

# ‘பொக்சிங் டே’யில் ஆஸி ஆதிக்கம்



நடப்புச் சம்பியனான அவுஸ்திரேலியாவுக்கு சாதகமான மெல்போர்ன் ஆடுகளத்தில் இங்கிலாந்து மீண்டும் ஒரு நீண்ட போராட்டத்துக்குத் தயாராக, வோர்னரின் அட்டகாசமான சதத்துடன் அவுஸ்திரேலிய அணி முதல் நாள் ஆட்டத்தில் 3 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 244 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி, அங்கு 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் மூன்று போட்டிகளில் வென்ற அவுஸ்திரேலிய அணி ஏற்கெனவே தொடரை கைப்பற்றிவிட்டது.

இந்நிலையில் நான்காவது டெஸ்ட் நேற்று மெல்போர்னில் (பொக்சிங் டே) ஆரம்பமாகியது. நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்ரீவ் ஸ்மித் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். அவுஸ்திரேலிய அணியில் காயத்தில் அவதிப்படும் ஸ்ரார்க்கிற்குப் பதில் ஜக்சன் பேர்ட் வாய்ப்பு பெற்றார். இங்கிலாந்து அணியில் வேகப் பந்துவீச்சாளர் ரொம் குரான் அறிமுக வாய்ப்பு பெற்றார்.

### ஸ்மித் அரை சதம்

அவுஸ்திரேலிய அணிக்கு பான்கிராப்ட், வோர்னர் ஜோடி சிறப்பான ஆரம்பம் கொடுத்தது. முதல் விக்கெட்டுக்கு 122 ஓட்டங்கள் சேர்த்தபோது, பான்கிராப்ட் (26) ஆட்டமிழந்தார். இருப்பினும், வோர்னர் தொடர்ந்து எதிரணிக்கு நெருக்கடி கொடுத்தார். அபாரமாக விளையாடிய அவர் டெஸ்ட் அரங்கில் 21ஆவது சதம் கடந்தார்.

அண்டர்சன் ‘வேகத்தில்’ வோர்னர் (103) ஆட்டமிழந்தார். கவாஜா (17) விரைவில் திரும்ப சற்று பதற்றம் ஏற்பட்டது. பின், இணைந்த ஸ்மித், ஷோன் மார்ஷ் ஜோடி நிதானமாக விளையாடியது. ஸ்மித் 22ஆவது அரை சதம் எட்டினார்.

முதல் நாள் ஆட்ட நேர முடிவில், அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்கு 244 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஸ்மித் (65), ஷோன் மார்ஷ் (31) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

### அதிர்ஷ்டம்

இப்போட்டியின் 41வது ஓவரின் 5ஆவது பந்தை குரான் வீசினார். இதை வோர்னர் தூக்கி அடிக்க, பிரோட் பிடித்தார். ஒரு ஓட்டங்களில் சத வாய்ப்பை இழந்த ஏமாற்றத்தில் வோர்னர் ‘பெவிலியன்’ திரும்பிக் கொண்டிருந்தார். ஆனால், ‘டிவி ரீப்ளேயில்’, குரான் ‘கிரீஸை’ தாண்டி கால் வைத்து பந்துவீசியது தெரியவர, ‘நோபோல்’ என அறிவிக்கப்பட்டது. இந்த அதிர்ஷ்டம் கைகொடுக்க, களத்திற்கு திரும்பிய வோர்னர் அடுத்த பந்திலேயே சதம் அடித்து தனது வழக்கமான ‘ஸ்டைலில்’ துள்ளிக்குதித்தார்.

### 2

டெஸ்ட் அரங்கில், ஆரம்ப வீரராக குறைந்த இன்னிங்ஸில் 21 சதம் அடித்த 2ஆவது வீரர் என்ற பெருமையை அவுஸ்திரேலியாவின் ஹைடனுடன் பகிர்ந்து கொண்டார் வோர்னர். இருவரும் 126 இன்னிங்ஸில் இந்த இலக்கை எட்டி உள்ளனர். முதலிடத்தில் இந்தியாவின் கவாஸ்கர் (97) உள்ளார்.

### 6000

நேற்று வோர்னர் 99 ஓட்டங்கள் எடுத்தபோது, டெஸ்ட் அரங்கில் 6 ஆயிரம் ஓட்டங்களை எட்டினார். இதன்மூலம், அதிவேகமாக இந்த இலக்கை எட்டிய 4ஆவது அவுஸ்திரேலிய வீரர் என்ற பெருமையை கிரெக் சப்பலுடன் (129 இன்னிங்ஸ்) பகிர்ந்து கொண்டார். முதல் மூன்று இடங்களில் பிரட்மன் (69), ரிக்கி பொண்டிங் (125), ஹைடன் (126) உள்ளனர்.

### 100

நேற்று வோர்னரை ஆட்டமிழக்கச் செய்த இங்கிலாந்தின் அண்டர்சன் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக தனது 100வது விக்கெட்டை வீழ்த்தினார். ஒட்டுமொத்தமாக, ஒரே அணிக்கு எதிராக இப்படி சாதனை நிகழ்த்தி இருந்த 37ஆவது பந்துவீச்சாளரானார். ஆஷஸ் டெஸ்ட் அரங்கில் இந்த இலக்கை எட்டிய 8ஆவது இங்கிலாந்து பந்துவீச்சாளரானார். இப்பட்டியலில் முதல் இடத்தில் இயன் பொதம் (32 டெஸ்ட், 128 விக்.) உள்ளார்.

### 88172

கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு அடுத்த நாள் தொடங்கும் போட்டி ‘பொக்சிங் டே’ டெஸ்ட் என அழைக்கப்படும். இந்த சிறப்புமிக்க போட்டியின் நேற்றைய முதல் நாள் ஆட்டத்தை 88,172 ரசிகர்கள் கண்டு களித்தனர்.

### கறுப்பு ‘பேட்ஜ்’

நேற்று முன்தினம் அவுஸ்திரேலிய விக்கெட் காப்பாளர் ரிம் பெய்னின் மாமனார் தோமஸ் மேக்ஸ் உயிரிழந்தார். இதற்கு அஞ்சலி செலுத்தும் விதமாக, அவுஸ்திரேலிய வீரர்கள் தங்களின் கைகளில் கறுப்பு ‘பேட்ஜ்’ அணிந்திருந்தனர்.

### ஸ்மித் ‘ராசி’

அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்மித்திற்கு மெல்போர்ன் மைதானம் ராசியானது. இங்கு இவர் விளையாடிய கடந்த மூன்று டெஸ்ட் போட்டிகள் முறையே 192, 134*, 165* ஓட்டங்கள் எடுத்துள்ளார். தற்போதும், 65 ஓட்டங்களுடன் உள்ளார்.

## சுவர்க்கவாயில் திறப்பு விழா

அகில இலங்கை யாழ். நல்லூர் நாவலர் வீதி, மடத்தார்பதி சீரடி சாயி மந்திர் ஆலயத்தின் சுவர்க்கவாயில் திறப்பு நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சுவர்க்கவாயில் திறப்பு நிகழ்வை முன்னிட்டு சீரடி பாபாவுக்கு நாளை வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு யாக பூசைகள் ஆரம்பமாகி இரவு 10 மணிக்கு மூலவருக்கு விசேட அலங்கார பூஜைகள் இடம்பெறவுள்ளதுடன் நள்ளிரவு 12 மணிக்கு சுவர்க்கவாயில் தரிசனம் இடம்பெற்று பிரசாதம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ம-78)

---

மேற்கிந்தியத் தீவுகளுடனான ஒரு நாள் தொடர்

# மீண்டும் வேகங்கள் ஜொலிக்க

## தொடரை முழுமையாக சுவீகரித்தது நியூசிலாந்து



நியூசிலாந்தின் வேகங்கள் மீண்டும் அசத்த மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான 3ஆவது ஒரு நாள் போட்டியில் ‘டக்வொர்த் லீவிஸ்’ விதிப்படி 66 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து வெற்றி பெற்றது.

நியூசிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள், அங்கு 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்றது. முதலிரண்டு போட்டியில் வென்ற நியூசிலாந்து ஏற்கெனவே தொடரை கைப்பற்றிவிட்ட நிலையில், 3ஆவதும் இறுதியுமான போட்டி நேற்று கிறைஸ்ட் சேர்ச்சில நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற நியூசிலாந்து பொறுப்பு தலைவர் ரொம் லேதம் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு காட்ரெல் ‘வேகத்தில்’ தொல்லை கொடுத்தார். இவரது பந்துவீச்சில் வொர்கர், புரூம் தலா 2 ஓட்டங்களில் சிக்கினர். முன்றோ 21 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

நியூசிலாந்து அணி 19 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 83 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது மழை குறுக்கிட்டது. சுமார் 5 மணி நேரத்திற்குப்பின், தலா 23 ஓவராக போட்டி மாற்றப்பட்டது. லேதம் 37 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

நியூசிலாந்து அணி 23 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 131 ஓட்டங்கள் எடுத்தது. களத்தில் ரோஸ் ரெய்லர் (47), நிக்கோல்ஸ் (18) இருந்தனர்.

### சொதப்பல் ஆரம்பம்

பின், ‘டக்வொர்த் லீவிஸ்’ விதிப்படி மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு 23 ஓவர்களில் 166 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

ஆரம்பத்திலேயே ‘வேகங்கள்’ போட்டுத்தாக்கினர். ஹென்றி பந்துவீச்சில் ஹெய்ல (4), சாய் ஹோப் (2) ஆட்டமிழந்தனர். போல்ட் வேகத்தில் ஹெட்மயர் (0), ஷைகல் ஹோப் (2), ஜேசன் மொஹமட் (1) திரும்பினர்.

முன்னணி 5 வீரர்கள் ஒற்றை இலக்கில் ஆட்டமிழக்க, மேற்கிந்தியத் தீவுகள் அணி 4 ஓவர்களில் 9 ஓட்டங்கள் மட்டும் எடுத்து திணறியது. சான்ட்னர் ‘சுழலில்’ ராவ்மென் பாவெல் (11) சிக்கினார். அணித் தலைவர் ஹோல்டர் (34) ஆறுதல் கொடுத்தார்.

இறுதியில், மேற்கிந்தியத் தீவுகள் அணி 23 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 99 ஓட்டங்கள் மட்டும் எடுத்து வீழ்ந்தது.

பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பில் அதிகபட்சமாக போல்ட், சான்ட்னர் ஆகியோர் தலா 3, ஹென்றி 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதன் மூலம், நியூசிலாந்து தொடரை 3-0 என முழுமையாக வென்று கிண்ணத்தை சுவீகரித்தது.

போட்டியின் ஆட்ட நாயகன், தொடர் நாயகன் விருதுகளை நியூசிலாந்து அணியின் ரோஸ் ரெய்லர், ட்ரென்ட் போல்ட் ஆகியோர் கைப்பற்றினர்.

# நான் எந்தக் கட்சியையும் நாடிச் செல்லவில்லை



## என்னுடைய ஒத்த கருத்துடையவர்கள் தமிழ் மக்கள் பேரவையினர்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெளிவுபடுத்தல்

(யாழ்ப்பாணம்)

என் கட்சி என்ன? என்னைப் பொறுத்த வரையில் எனக்கென்று கட்சி ஒன்றில்லை. என்னுடைய ஒத்த கருத்துடையவர்கள் தமிழ் மக்கள் பேரவை என்ற நாமத்துடன் ஒரு மக்கள் இயக்கமாகப் பரிணமித்துள்ளார்கள். நான் எந்தக் கட்சியையும் நாடிச் செல்லவில்லை. எந்தக் கட்சியின் ஆண்டு சந்தாப் பணத்தைக்கட்டி விடுபவனும் அல்ல. எந்தக் கட்சியும் என்னைத் தமது கூட்டங்களுக்கு அழைத்து வரவுமில்லை. கட்சி அரசியல் எதுவும் வேண்டாம் என்றிருந்த என்னை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளின் ஐந்து கட்சிகள் சேர்ந்த தலைவர்கள் ஒருங்கே வந்து வலிந்து கேட்ட போது மறுக்க முடியாமல் அரசியலில் கால் வைத்தேன். நான் சேர முன்வந்தது அந்த ஐந்து கட்சிகள் சேர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுள்ளேயே என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். வாரம் ஒரு கேள்விக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் பதிலளித்து வருகிறார். இந்த வாரம்

கேள்வி: நீங்கள் உங்கள் கட்சிக்குக் கட்டுப்பட்டு நடக்கின்றீர்கள் இல்லை என்ற குற்றச்சாட்டு இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் முன்வைக்கப்பட்டுள்ளது. உங்கள் நடவடிக்கைகள் மீண்டும் வன்முறையைத் தோற்றி விடுமோ என்ற பயம் தெற்கில் எழுந்துள்ளது. உங்கள் பதில் என்ன?

பதில்: என் கட்சி என்ன? என்னைப் பொறுத்த வரையில் எனக்கென்று கட்சி ஒன்றில்லை. என்னுடைய ஒத்த கருத்துடையவர்கள் தமிழ் மக்கள் பேரவை என்ற நாமத்துடன் ஒரு மக்கள் இயக்கமாகப் பரிணமித்துள்ளார்கள்.

நான் எந்தக் கட்சியையும் நாடிச் செல்லவில்லை. எந்தக் கட்சியின் ஆண்டு சந்தாப் பணத்தைக் கட்டி விடுபவனும் அல்ல. எந்தக் கட்சியும் என்னைத் தமது கூட்டங்களுக்கு அழைத்து வரவுமில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டமொன்று திருகோணமலையில் சில வருடங்களுக்கு முன்னர் நடந்த போது 8 பேர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. அதன்பின் அக் குழுவிற்கு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை.

கட்சி அரசியல் எதுவும் வேண்டாமென்றிருந்த என்னை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளின் ஐந்து கட்சிகள் சேர்ந்த தலைவர்கள் ஒருங்கே வந்து வலிந்து கேட்ட போது மறுக்க முடியாமல் அரசியலில் கால் வைத்தேன். நான் சேர முன்வந்தது அந்த ஐந்து கட்சிகள் சேர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுள்ளேயே. அப்போது அது பதிவு செய்யப்படாத ஒரு அரசியல் கூட்டமைப்பு என்பது கூடத் தெரியாதிருந்தது.

சேர்ந்த போது தான் பலதும் வெளிவந்தன. ஆனால் முன்னர் வன்முறை சாராத கட்சி என்ற வகையில் இயற்கையாகவே இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் தான் எனது தொடர்புகள் சார்ந்திருந்தன. 2013 ஆம் ஆண்டின் தேர்தல் விஞ்ஞாபனம் எனக்குத் தரப்பட்டது. அதில் உள்ள கொள்கைகள் எனக்குச் சரியெனப்பட்டன. எனவே அதனை அடிப்படையாகக் கொண்டு என் அரசியல் வாழ்க்கைப் பயணத்தை மேற்கொண்டேன். ஆனால் வெகுவிரைவில் ஒன்றை உணர்ந்து கொண்டேன். விஞ்ஞாபனக் கொள்கைகளுக்கும் விரவியிருந்த யதார்த்த நிலைக்கும் இடையில் பாரிய விரிசல் இருந்ததை நான் உணர்ந்தேன். கொள்கைகள் மக்களுக்கு. ஆனால் அரசியல் கொடுக்கல்-வாங்கல்கள் கட்சித் தலைமைப்பீடங்களுக்கே என்பது தான் யதார்த்தமாக இருந்தது. இந்தக் கொடுக்கல்- வாங்கல்கள் அல்லது அவற்றோடு சம்பந்தப்பட்ட முடிவுகள் எந்த வித கூட்டுக் கருத்துப் பரிமாற்றத்தின் அடிப்படையில் எடுக்கப்படவில்லை என்பதையும் கண்டு கொண்டேன். நடைமுறை நகர்வுகள் எவ்வாறு அமைந்தனவோ அவற்றை முன்வைத்தே தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அங்கு சுயநலமே கட்சித் தலைமைப் பீடத்தால் கருத்துக்கெடுக்கப்பட்டது என்பதையும் உணர்ந்து கொண்டேன். உதாரணத்திற்கு தேர்தல் விஞ்ஞாபன சிந்தனைக்கேற்ப இனப்படுகொலை சம்பந்தமான பிரேரணை கொண்டுவரப்பட்டு எமது வடமாகாண சபையால் 10/02/2015 இல் ஏகமனதாக ஏற்கப்பட்ட போது கட்சித் தலைமைத்துவம் அதிர்ச்சி அடைந்ததை நான் கண்டேன். அது சம்பந்தமான தலைமைத்துவக் கருத்துக்கள் முன்னுக்குப் பின் முரணாக அமைந்ததையும் கண்டு கொண்டேன். பின்னர்தான் அறிந்து கொண்டேன் சிலருக்கு வரவிருந்த சுயநல வரவுகள் சில அந்தப் பிரேரணையால் பறிபோனதென்று.

நாங்கள் மக்களிடம் வாக்கு கேட்கும் போது எமது கொள்கைகளை முன்வைத்தே கேட்கின்றோம். என்னைப் பொறுத்த வரையில் அவற்றை மாற்றி, குறைத்தோ கூட்டியோ நாங்கள் அரசாங்கத்திடம் எமது கோரிக்கைகளை முன்வைப்பது என்றால் அது மக்களின் கருத்துக்கிசைவாக நடைபெற வேண்டும். ஆகக் குறைந்தது கூட்டமைப்பின் கட்சித் தலைவர்களின் கருத்தொருமிப்பின் அடிப்படையில் அவ்வாறான முரண்பட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட வேண்டும். ஏனென்றால் நாங்கள் மக்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள். அவர்கள் நலம் சார்ந்தே நாங்கள் அரசியல் ரீதியாக நடந்துகொள்ள வேண்டும். தான்தோன்றித்தனமாக சுயமாகக் கருதி நடவடிக்கைகளை எடுக்கக் கூடாது.

ஆனால் அவ்வாறு தலைமையே கூட்டுக் கட்சியின் கொள்கைகளை உதாசீனம் செய்யும் போது ஒருவர் என்ன செய்ய வேண்டும்? ஒன்று வெளியேற வேண்டும். வெளியேறினால் உதாசீனம் செய்து நடந்து கொள்பவர்கள் கை ஓங்கிவிடும். இது எமது மக்களையே பாதிக்கும். மக்கள் பெருவாரியாக என்னைத் தேர்ந்தெடுத்த போது இலங்கைத் தமிழரசுக் கட்சியினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் ஒட்டு மொத்த கொள்கைகளின் அடிப்படையில்தான் தேர்ந்தெடுத்தார்கள். அவற்றிலிருந்து ஒரு கட்சியின் தலைமைத்துவம் வழுக முற்படும் போது கட்சியின் நடவடிக்கைகளை மக்கள் சார்பாக மாற்ற எத்தனிப்பதே எமது கடமை என்று உணர்ந்தேன்.

கட்சித் தலைமைத்துவம் கட்சிக் கொள்கைகளை மாற்றும் போது உபயோகிக்கும் கருவிதான் கட்சி ஒழுக்கம் என்ற பிரம்பு. "நாங்கள் சொல்வதை நீங்கள் செய்யுங்கள். இல்லையேல் அடுத்த முறை உங்களுக்குக் கட்சித் துண்டு கிடைக்காது" என்பார்கள் அல்லது "நாங்கள் சொல்வதை நீங்கள் மக்களுக்கு எடுத்துச் சென்றீர்கள் என்றால் அடுத்த முறை உங்களுக்குத் துண்டு நிச்சயம்" என்பார்கள். அவ்வாறு கூறி உறுப்பினர்களைச் சதி வேலைகளில் ஈடுபடுத்தியமையும் உண்டு. தலைமையுடன் முரண்பட்டால் கட்சி ஒழுக்கத்தை மீறியமைக்குக் காரணம் கேட்பார்கள். இந்தப் பின்னணியில்தான் உங்கள் கேள்விக்கு நான் பதிலளிக்க வேண்டும்.

நான் என் கட்சியை அடையாளப்படுத்துங்கள் என்று ஏற்கனவே உங்களிடம் கேட்டுள்ளேன். இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குக் கட்டுப்பட்டு நான் நடக்கவில்லை என்று கூறும் போது அதே கட்சியின் கொள்கைக்குக் கட்டுப்படாத கட்சித் தலைமைத்துவத்துக்கு நான் என்ன பதில் கூற முடியும்? என்னை கட்சிக் கூட்டங்களுக்கு அழைத்திருந்தால் எமது முரண்பாடுகள் பற்றிக் கூறியிருப்பேன். அது நடைபெறாததால் பொதுவெளியில் கொள்கை ரீதியான விடயங்களை வெளிப்படையாக மக்களுக்குக் கூறுவதே எமது கடமை என்று நான் நினைத்தேன். அதையே செய்தும் வருகின்றேன்.

தவறிழைக்கும் கட்சித் தலைமைப்பீடம் தங்களைச் சரியான வழிக்கு மாற்றாமல் என்னைக் குறை கூறுவது விசித்திரமாக இருக்கின்றது. தற்போதைய உள்ளூராட்சித் தேர்தலுக்கு எந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தை முன் வைத்து இலங்கைத் தமிழரசுக் கட்சி வாக்குக் கேட்கின்றது என்பதைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். அப்பொழுது தான் கட்சித் தலைமைத்துவத்திடம் சில கேள்விகளை மக்கள் கேட்கலாம். அதாவது எமக்கு ஒன்றைக் கூறி அதற்கு மாறாக அரசாங்கத்துடன் நீங்கள் நடந்து கொள்ளும் நடவடிக்கையின் பின்னணி என்ன? நெருக்குதல்கள் காரணம் எனின யாரால் ஏற்படுத்தப்பட்ட நெருக்குதல்கள்? என்று இன்னோரன்ன கேள்விகளை மக்கள் கேட்க வழிவகுக்க வேண்டும். அதை விட்டு விட்டு "நாம் தான் தலைமை! நாம் முடிவெடுத்து விட்டோம். அது வழி நடவுங்கள் அல்லது சீட்டுமில்லை சிறப்புமில்லை" என்று கூறுவது ஜனநாயகம் ஆகாது. அவ்வாறான நடவடிக்கைகள் தமிழ் மக்களின் நலம் சாராது. ஆகவே தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்திற்கு நான் கூறும் பதில் பல தடவைகள் சிறை சென்ற போது நீங்கள் கொண்டிருந்த உறுதியான கொள்கைகளில் இருந்து நீங்கள் வழுவி விட்டீர்களா? ஏன்? பிறழ்வான கொள்கைகளுக்கு என்னைப் பணியச் செய்வதில் உங்களுக்கென்ன இலாபம்? உங்கள் கொள்கைகளைப் பழையபடி உறுதியாக எடுத்தியம்பி நிலையான தமிழரசுக் கட்சிக் கொள்கைகளுக்கு நீங்கள் இன்னமும் விசுவாசமாக இருக்கின்றீர்கள் என்று பகிரங்கமாக அறிவியுங்கள். இடைக்கால அறிக்கையின் போதாமை பற்றிப் பிரஸ்தாபியுங்கள். எவ்வெவற்றை நாங்கள் அரசியல் ரீதியாகப் பெறவேண்டும் என்பதைப் பகிரங்கமாக அறிவியுங்கள். அவை கட்சியின் 2013 ஆம் ஆண்டின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு ஏற்புடையதாக இருந்தால் நான் கட்சி கூறுவதற்குக் கட்டுப்படுவேன்.

அடுத்து மீண்டும் வன்முறை வெடிக்கும் சாத்தியம் பற்றியது.

உண்மையைக் கூறினால் வன்முறை வெடிக்கும் என்று கூறுவதின் அர்த்தம் ஒருவர் மிரட்டினால் அடங்கிப் போங்கள் என்பதுதான். நாம் கூறி வருவது எமக்குத் தெரிந்த உண்மை. உண்மையைக் கூறப் பின் நின்றால் பொய்மைக்கு நாம் இடமளிக்க வேண்டி வரும்.

சரித்திர ரீதியாக சிங்கள மொழி 6ஆம் 7ஆம் நூற்றாண்டுகளிலேயே பிறந்தது என்றேன். எனவே அதற்கு முன்னைய மக்களைச் சிங்கள மக்கள் என்று நாம் எவ்வாறு அழைக்க முடியுமென்று கேள்வி கேட்டேன். சிங்கள மொழி பேசுவதால்தான் ஒரு குழு மக்கள் சிங்கள மக்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டார்கள். அந்த மொழியே ஒரு காலத்தில் இல்லாதிருந்த போது அம் மக்கள் அந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்று எவ்வாறு அடையாளப்படுத்த முடியும்? இதுதான் யதார்த்தம். இது தான் உண்மை. நாங்கள் இது வரையில் இதைக் கூறவில்லை. இப்பொழுது இதை நான் கூற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதைப் பொறுக்க மாட்டாதவர்கள் தான் என்னைப் பைத்தியம் என்கின்றார்கள். பயங்கரவாதி என்கின்றார்கள். பகைவனாகப் பார்க்கின்றார்கள்.

அடுத்து நான் சமஷ்டியைக் கோருவதால் வன்முறை வெடித்துவிடும் என்று பயமுறுத்துகின்றார்கள். இப்பொழுது சிங்கள மக்களிடையே படிப்பறிவுடையவர்கள் சமஷ்டியைச் சரியென ஏற்றுக்கொண்டு வருகின்றார்கள். பின் எதற்கு இந்த பயம்? ஒரு விடயம் புரியாமல் இருக்கும் போது உணர்ச்சிவசப்பட்டு நாங்கள் அதை இதைக் கூறிவிடுகின்றோம். ஆனால் புரிந்துணர்வு ஏற்படும் போது ஆற அமர சிந்திக்கத் தொடங்குகின்றோம்.

சமஷ்டி ஒரு பூச்சாண்டி அல்ல. அது பிரிவினை அல்ல. மாறாக மக்களைச் சேர்க்கும் ஒரு அரசியல் உபாயம் என்பதை நாங்கள் சிங்கள மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். எங்களுள் சிங்களம் தெரிந்தவர்கள் இதைச் சிங்கள பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். சிவாஜிலிங்கமும் நானும் இதைச் செய்கின்றோம். அதே போல் சம்பந்தனும் சுமந்திரனும் சிங்களம் தெரிந்தவர்கள் என்ற முறையில் சிங்கள மக்களுக்கு சமஷ்டியின் தேவையையும் அரசியல் ரீதியான பொருத்தத்தையும் எடுத்துக் கூற முன்வர வேண்டும். எம்மவருள் சிலர் "அது எப்படி சமஷ்டியைக் கேட்பது சிங்களவர்கள் அதற்கெதிரே" என்று கூறுகின்றார்கள். அவர்கள்தான் தெற்கில் இருந்து கொண்டு சிங்கள மக்கள் தலைவர்களை உசுப்பேற்றி விடுகின்றார்கள்.

இவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் வடகிழக்கு இணைப்பை விட்டுக்கொடுத்து, தாயகத்தை விட்டுக் கொடுத்து, சுய நிர்ணய உரிமையை விட்டுக் கொடுத்து, சமஷ்டியை விட்டுக்கொடுத்து ஒரு சில எலும்புத் துண்டுகளுக்காகக் குறைந்த ஒரு தீர்வைப் பெற்று விடலாம். எலும்புத் துண்டுகள் எமது அப்போதைய சுயநலப் பசியைத் திருப்திப்படுத்தக் கூடும். ஆனால் நாளடைவில் நடக்கப் போவதென்ன? எமது தனித்துவம் அழிந்து விடும். மீண்டும் மீண்டும் எமது மக்கள் வெளிநாடுகள் நோக்கிச் செல்வார்கள்.

இப்பொழுது எமது வட மாகாண சபையில் இருவர் இருக்கும் இடத்தில் சபையின் பாதி அவர்களின் மக்கள் என்ற நிலை ஒரு இருபது வருடங்களுக்குள்ளேயே ஏற்பட்டு விடும்.

இன்று பறங்கியர் பற்றி பேசும் போது நாம் கடந்த காலத்தைச் சுட்டியே பேசுகின்றோம். ஐம்பது வருடங்களின் பின்னர் எம்மைப் பற்றியும் கடந்த காலத்திலேதான் வைத்துப் பேசுவார்கள். "இருந்தார்கள் இப்பொழுதில்லை. ஒரு சிலரே ஆங்காங்கே உள்ளனர்" என்பார்கள். இந்த நிலை வர ஒருசில எலும்புகளைப் பெற்று கொள்கைகளை விட்டுக் கொடுப்பதுதான் சரி என்று இந்தத் தெற்கத்தையத் தமிழர்கள் நினைக்கின்றார்களா? இந்த நிலை வர வேண்டும் என்பது தான் தெற்கத்தைய சிங்களவர் எதிர்பார்ப்பா? அப்படியானால் அது இனப்படுகொலை என்ற கருத்தினுள் அடங்கும் என்பதை அவர்கள் அறிவார்களா?

வன்முறை வெடிக்கும் என்பது சம்பந்தமான எனது பதில் "வன்முறை வரும்" என்பது எம்மைப் பயமுறுத்தும் ஒரு செயல். போர் வெடித்ததால் எமது நாடு எவ்வாறான உயர் கடன்களைப் பெறவேண்டியிருந்தது என்பதைத் தெற்கு அறியும்.

அவர்களின் இராணுவம் செய்த அட்டூழியங்களை உலகம் அறியும். ஆகவே எமது சிங்கள அரசியல்வாதிகள் வன்முறை வெடிக்க விடமாட்டார்கள். இன்னுமொரு 1983 வந்தால் இலங்கையின் பெயர் உலக அரங்கில் நாறும். அதையும் மீறி அவ்வாறு வெடித்தால் வெடிக்கட்டுமே. நாம் இதுகாறும் கூறி வந்த உண்மையை உலகம் அறிந்து கொள்ளும். உணர்ந்து கொள்ளும். எமது மக்கள் இதுகாறும் பட்ட பாட்டிற்கு மேலதிகமாக நாங்கள் எதைச் சந்திக்கப் போகின்றோம்? வன்முறை வெடிக்கும் என்பது சுயநல வாதிகளின் பயமே ஒழிய அதில் உண்மை இல்லை. இந்தக் கூற்று தெற்கில் இருந்து வருவதில் இருந்து அதன் சுயநலப் போக்கைப் புரிந்து கொள்ளலாம். தெற்கில் கொழும்பில் சொகுசாக வாழ்பவர்கள் தான் இவ்வாறான கருத்துக்களை வெளியிடுகின்றார்கள்.

ஆகவே எமது கட்சித் தலைமைகள் தாங்கள் நிலையை எமது மக்கள் சார்பாக அவர்களுடன் இணைந்து உருவாக்க முன்வருவார்களா! என்னைக் கட்டுப்படுத்து வதிலும் பார்க்க தம்மை நேர் வழிக்கு மாற்றிக் கொள்வார்களா! என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# சுற்றுலாப்பயணிகள் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசு நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப்பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குரிய அறிவுப்பூர்வ நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சுற்றுலா பொலிஸ் பிரிவிற்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். குறித்த நிகழ்வில் சுற்றுலா மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்கவும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



## பருத்தித்துறை பிரதேசசபை,புலோலி உப அலுவலகம்

## ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்

பருத்தித்துறை பிரதேசசபை புலோலி உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 2 சாளம்பை வீதி ஆதன இல.21/2 இல் இவ்வாதனம் அமைந்துள்ளது. உறுதிப்படி வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம் கட்டைவேலி கோயிற்பற்று, பருத்தித்துறை பிரதேசசபை, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு, புலோலி மேற்கு J/410 கிராம சேவையாளர் பிரிவு மழுவராயர் குறிச்சியிலுள்ள விழுவியோடை எனும் பெயருள்ள நிலப்பரப்பு முருகேசு கதிரமலைக்கந்தன் ஆகிய இவரால் தனது பிதா காலஞ்சென்ற ஆறுமுகம் முருகேசு என்பவரால் வந்த முதுசம் என 17161/23.01.2017 நொத்தாரிசு பொ.குமாரசாமி அவர்களால் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்துகை உறுதி மூலம் உரிமை கோரப்பட்டு கதிரமலைக்கந்தன் கபிலன் என்பவருக்கு நொத்தாரிசு பொ. குமாரசாமி அவர்கள் முகதாவில் நிறைவேறிய 17342 ஆம் இலக்க 04.01.2017 ஆம் திகதிய அறுதி மூலம் தமக்குச் சொந்தம் என தெரியப்படுத்தி எமது பருத்தித்துறை பிரதேசசபை புலோலி உப அலுவலக ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாட்களிற்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது கதிரமலைக்கந்தன் கபிலன் எனும் பெயருக்கு பெயர் மாற்றம் செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் இப்பெயர் மாற்றத்தால் வரும் விளைவுகளுக்கு பிரதேசசபை பொறுப்பாகாது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
பருத்தித்துறை பிரதேசசபை,
புலோலி.


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 54 செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L/ அரசதொழில்
தொ.இ: B/7286

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் செவ் 7இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Dipolma in Eng/ அவுஸ்ரேலியா
தொ.இ: B/7292

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
செவ் 1 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: A/L கட்டார்
தொ.இ: B/7295

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 20
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: B.Eng, MSc/ பொறியியலாளர் டுபாய்
தொ.இ: B/7296

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 23 செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: நூலக விஞ்ஞானம்/அரசதொழில்
தொ.இ: G/6201

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 45 செவ் 1 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/6205

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 55 செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BA
தொ.இ: G/6211

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 23 செவ் 8 இல்
உயரம்: 155cm
தகைமை/தொழில்: BA/ஆசிரியர்
தொ.இ: G/5685

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



## காலுறை (Socks) பாவனையாளர்களுக்கு அரிய வாய்ப்பு!




கடந்த 30 ஆண்டுகளாக தரச்சிறப்பு மிக்க காலுறைகள் (Socks)

Silver shield Socks

பாடசாலை மாணவர்களுக்கும்
அலுவலக ஊழியர்களுக்கும்
சகல தரத்திலும் சகல அளவுகளிலும்

1 இற்கு 1 இலவசம்

10.01.2018 வரை மட்டுமே

பாடசாலைகளுக்கும் வியாபாரிகளுக்கும்
விசேட விலைக்கழிவு

விபரம் பெறுவதற்கு

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம், 303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். 021 222 5392


# இலங்கைத் தொழில் முயற்சியாளர் விருது வென்றுள்ள தினேஸ் உற்பத்திகள்-2017

யாழ்ப்பாணம் மானிப்பாய் நகரை தலைமையகம் மற்றும் தொழிற்சாலையினைக் கொண்டுள்ள "தினேஸ் வெதுப்பகம்" 2017ஆம் வருடத்திற்கான 22ஆவது இலங்கைத் தொழில் முயற்சியாளர் விருது போட்டியில் இரண்டு விருதுகளை வென்றுள்ளது. இலங்கை வர்த்தக கைத்தொழில் நிறுவனங்களின் சம்மேளனத்தினால் (Federation of Chambers of Commerce and Industry of Srilanka-FCCISL) கடந்த 15ஆம் திகதி கொழும்பு ஸ்ரீமாவோ குமாரத்ந சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பிரமாண்டமாக இடம்பெற்ற மேற்படி விருதளிப்பு நிகழ்வில் இவ்விருதுகள் வழங்கப்பட்டன. அதிகளவு போட்டி மற்றும் பல்வேறு படிநிலைகளை கடந்து அதிக புள்ளிகளுடன் தேசிய ரீதியில் வெண்கல விருதினையும், மாகாண ரீதியில் வெள்ளி விருதையும் தனதாக்கியுள்ளது.

மேற்படி விருதுகளுக்கான விண்ணப்பம் கடந்த வைகாசி மாதம் நாடளாவிய ரீதியில் கோரப்பட்டதுடன், நாட்டின் அனைத்து மாகாணங்களிலிருந்தும் ஏராளமான விண்ணப்பங்கள் விருதுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அவ்வகையில் வடமாகாணத்தினைச் சேர்ந்த பல்வேறு பிரிவுகளைக் கொண்ட தொழில் முயற்சியாளர்கள் தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்திருந்தனர். தொழில் முயற்சியின் வகை, அளவு, வியாபார புரள்வு, கணக்காய்வு அறிக்கைகள், தொழிலாளர் எண்ணிக்கை மற்றும் தொழிலாளர் நல வசதிகள், உற்பத்தி நடைமுறைகள் மற்றும் முகாமைத்துவம், பெற்றுள்ள தரச் சான்றுகள், அரச மற்றும் சமூகப் பொறுப்புக்கள் போன்ற பல்வேறு பிரதான காரணிகள் கருத்திற்கொள்ளப்பட்டதுடன் கள வெளிப்பு மற்றும் இறுதிச் சுற்று நேர்முகத் தேர்வின் பின்னர் புள்ளிகள் வழங்கப்பட்டன.

இதனடிப்படையில் ஏனைய விண்ணப்பங்களை பின்தள்ளி நடுத்தர வகையில் (Medium Scale) மேற்படி இரண்டு விருதுகளை தினேஸ் வெதுப்பகம் வென்றுள்ளது. வடக்கின் உணவு தயாரிப்பு-வெதுப்பக உற்பத்தி துறையில் 1982 ஆம் வருடம் தடம்பதித்த "தினேஸ் வெதுப்பகம்" கடந்த 35 வருடங்களுக்கும் மேலாக தனக்கென ஓர் நிலையான சந்தைப்பங்குடன் அதிகளவு வாடிக்கையாளர்களையும் கொண்டுள்ளது. "என்றும் ஒரே தரம் (Always Constant In Quality)" எனும் தாரக மந்திரத்திற்கமைவாக, வெதுப்பக துறையில் உயர்தரம் மிக்க உணவுத் தயாரிப்புக்களை வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்பு மற்றும் சுவையறிந்து வழங்குகின்றது.




மேலும் உணவு பாதுகாப்பு முகாமைத்துவ நடைமுறைகளுக்கான சர்வதேச தர உத்தரவாத சான்று (ISO 22000) உற்பத்தி நடைமுறை பேண்தகு சான்றளிப்பு மற்றும் HACCP ஆகிய தர உத்தரவாதங்களையும் தினேஸ் வெதுப்பகம் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
மேற்படி நிகழ்வின் பிரதம அதிதியாக இலங்கை ஜனாதிபதி "அதிமேதகு மைத்திரிபால சிறிசேன" அவர்கள் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

"தினேஸ் - வடக்கின் சுவை"

(முகம்)

# மன்னார் பிரதான பாலத்தடி கடலேரியில் சுனாமி 13 ஆம் ஆண்டு நினைவேந்தல்



சீறிப்பாய்ந்த சுனாமிப் பேரலையினால் காவு கொள்ளப்பட்ட உறவுகளின் 13 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று செவ்வாய்க் கிழமை காலை மன்னாரில் நினைவு கூறப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட கலை இலக்கிய பண்பாட்டு கழகத்தின் இயக்குநர் மோகன்ராஜ் தலைமையில் மன்னார் பிரதான பாலத்தடி கடலேரி பகுதியில் குறித்த நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இதன் போது கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் போது உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் குறித்த நினைவேந்தல் நிகழ்வு இடம் பெற்றது.

குறித்த அஞ்சலி நிகழ்வில் தீபம் ஏற்றப்பட்டு மலர் தூவி உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன் போது அருட் தந்தை நேரு அடிகளார், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.(2-4)








## தேசிய பாதுகாப்பு தின நிகழ்வில்

# ஆழிப்பேரலையில் காவுகொள்ளப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது





(மன்னார்)

தேசிய பாதுகாப்பு தின நிகழ்வு நேற்று செவ்வாய்க் கிழமை காலை மன்னார் சாந்திபுரம் சிறுவர் பூங்காவில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகு ஏற்பாடு செய்திருந்த குறித்த நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள்.மன்னார் பிரதேசச் செயலாளர் என்.பரமதாசன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர். மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் உட்பட பொது மக்கள்.பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது சுனாமி அனர்த்தத்தின் போது உயிர் நீத்த மக்களின் 13 ஆம் ஆண்டு நினைவுகூரப்பட்டதோடு. அஞ்சலி உரைகளும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-4)

## தண்டுவான் கிராம காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் நிர்மூலம்

# இருவர் கைது

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள தண்டுவான் கிராம காட்டுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றை பொலிஸார் சுற்றி வளைத்து 200. லீற்றர் கசிப்புக் கோடாவுடன். கசிப்பு 26. லீற்றரையும் மற்றும் கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்களை கைப்பற்றிய பின்னர் கசிப்பு உற்பத்தி நிலையத்தை நிர்மூலமாக்கியதுடன் சம்பவ இடத்தில் வைத்து 2 சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளதாக ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு 11. மணியளவில்நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது.

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து. ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் உத்தரவுக்கமைய தண்டுவான் கிராம காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் அடிப்படையில் 02. சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன், கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# ஆழிப்பேரலையில் உயிர்நீத்த உறவுகளுக்கு வவுனியாவில் நினைவேந்தல் அனுஷ்டிப்பு





(நெளுக்குளம்)

13ஆவது ஆழிப்பேரலை நினைவு தினம் வவுனியா, பூந்தோட்டம் ஆலய பரிபாலன சபையால் சுனாமி நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபியில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

பூந்தோட்டம் நரசிங்கர் ஆலய பரிபாலன சபையின் ஏற்பாட்டில் 2004ஆம் ஆண்டு சுனாமியினால் உயிரிழந்த உறவுகள் நினைவாக இலங்கையில் முதன் முதலாக சுனாமி நினைவாக வவுனியாவில் அமைக்கப்பட்ட பூந்தோட்டம் சுனாமி நினைவுத் தூபியில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

ஆலய பரிபாலனசபைத் தலைவர் எஸ்.புலேந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ் அஞ்சலி நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், கே.கே.மஸ்தான், முன்னாள் வடமாகாண சபை சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம்.வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி. லிங்கநாதன், தியாகராசா. முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விநோதராதலிங்கம், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள், மதகுருமார் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை இந் நிகழ்வுகளின் பின்னர் சிறுவர்களுக்கான சிறுவர் பூங்காவை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் நித்தியானந்தனால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-250)

## திறப்புவிழா செய்து ஐந்து மாதங்கள்: வெடிப்புக்கள் ஏற்பட்டு பாலம் சேதம்



(மல்லாவி)

கண்டாவளை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட தருமபுரம் பகுதியில் பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் இருந்து தருமபுரம் பிரதேச வைத்திய சாலைக்கு அருகாமையால் கல்மடுக் கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட பாலத்தை அண்மித்த பகுதிகளில் திறப்பு விழா செய்து 5 மாதங்கள் முடிவதற்குள் கனரக வாகனங்கள் போக்குவரத்து செய்ய முடியாது வெடிப்புகள் ஏற்பட்டு சேதமடைந்துள்ளதாக வீதியைப் பயன்படுத்தும் ஐந்து கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

பல இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட பாலத்தை அண்டிய பகுதிகளில் வெடிப்புக்கள் ஏற்பட்டு சேதமடைந்துள்ளது.

இதனால், பாலத்தின் ஊடாக கனரக வாகனங்கள் இரண்டு, கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கல்மடுக் கிராமத்திற்கு போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் புளியம் பொக்கணைச் சந்தி ஊடாக வட்டக்கச்சி செல்லும் வீதியில் ஏழு கிலோ மீற்றர் தூரத்திற்கு பயணித்த பின்னரே கல்மடு. இராமநாதபுரம். புதுக்காடு உட்பட ஐந்து. கிராமங்களுக்கு செல்லும் நிலையில். பண விரயமும். நேர விரயமும் ஏற்படுவதாக கிராம மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதேவேளை. இந்த வீதியால் கனரக வாகனங்கள் பயணிப்பதை தடை செய்யும் எச்சரிக்கை பலகையும் காட்சிப் படுத்தப்படாமையால் இரவு நேரங்களில் புதிதாக ஊருக்குள் பொருட்களை ஏற்றிப் பயணிக்கும் கனரக வாகனங்கள் விபத்துக்குள்ளாகும் அபாயநிலை காணப்படுவதாகவும் மேற்படி கிராம மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனவே, துறைசார்ந்த அதிகாரிகள் இது விடயத்தை கவனத்தில் கொண்டு மிக விரைவாக பாலத்தினை செப்பனிட நடவடிக்கை மேற்கொண்டு உதவ வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை ஒன்றையும் முன்வைத்துள்ளனர். (2-15)

# புதுக்குடியிருப்பில் ஆழிப்பேரலை அஞ்சலி நிகழ்வு



முல்லைத்தீவில் ஏற்பட்ட ஆழிப் பேரலையால் காவு கொள்ளப்பட்ட மக்களை புதைத்த இடங்களில் ஒன்றாகிய புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மக்கள் நினைவாக அமைக்கப்பெற்ற நினைவாலயத்தில் 13 ஆம் ஆண்டு வணக்க நிகழ்வு நேற்று நடைபெற்றுள்ளது.

உயிர்நீத்த மக்களின் நினைவாக அமைக்கப் பெற்ற நினைவு தூபி முன்றலில் உயிரிழந்த மக்களின் உறவினர்கள்,வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் ஆகியோர் கலந்துகொண்டு பொதுச்சுடர் ஏற்றி மலர்தூவி சுடர்கள் ஏற்றி வணக்கம் செலுத்தியுள்ளார்கள். (2-281)

# யாழ். பல்கலைக்கழகத்திலும் நேற்று நினைவேந்தல்



சுனாமி பேரலை அனர்த்தத்தின் 13 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்றன. (படங்கள்:- உ.சாளின்)

## சுவர்க்கவாயில் ஏகாதசி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய சுவர்க்க வாயில் ஏகாதசி உற்சவம் நாளை மறுதினம் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் துவாதசி உற்சவம் மறுநாள் சனிக்கிழமையும் இடம்பெறும் என ஆலய ஆதீன மற்றா சபையினர் அறிவித்துள்ளனர். (இ-7)

## தெய்வீகக் கலையரங்கு இன்று

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழவன் காடு கலா மன்றத்தின் ஏற்பாட்டில் தெய்வீகக்கலையரங்கு இன்று புதன்கிழமைமாலை5மணியளவில்காரைநகர்கிழவன்காடுகலா மன்ற மனோன்மணி கலையரங்கில் இடம்பெறும். (இ-10)

## தெல்லிப்பழையில் நினைவேந்தல்



தேசிய பாதுகாப்பு தினத்தினை முன்னிட்டு 2014ம் ஆண்டு சுனாமி அனர்த்தம் காரணமாக இறந்தவர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் சிவஸ்ரீ தலைமையில் நேற்று நடைபெற்றது. (இ-7-104)

## தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட அனலைதீவு, புளியங்கூடல், ஊர்காவற்றுறை பொது நூலகங்களின் தேசிய வாசிப்புமாத இறுதிநாள் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

அனலைதீவு பொது நூலகத்தின் இறுதி நாள் நிகழ்வு இன்று முற்பகல் 10 மணியளவில் நூலகர் திருமதி. தர்மினா செந்தூரன் தலைமையில் அனலைதீவு பொது நூலகத்திலும், புளியங்கூடல் பொது நூலகத்தின் இறுதிநாள் நிகழ்வு நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நூலக தலைமை உப அலுவலக பொறுப்பதிகாரி அ.பி.ம.மெடோனா தலைமையில் புளியங்கூடல் பொது நூலகத்திலும், ஊர்காவற்றுறை பொது நூலகத்தின் இறுதிநாள் நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் பிரதேச சபையின் செயலாளர் தலைமையில் ஊர்காவற்றுறை பொது நூலக மண்டபத்திலும் நடைபெறும் எனவும் அனலைதீவு பொது நூலகத்தின் இறுதிநாள் நிகழ்வு நேற்றையதினம் நிறைவு பெற்றது எனவும் ஊர்காவற்றுறை பிரதேச சபையினரால் விடுக்கப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்களுக்கு மட்டக்களப்பில் அஞ்சலி



(கொழும்பு)

சுனாமி பேரனர்த்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் வகையில் நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் நேற்று அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆழிப் பேரலையினால் அதிகளவிலானவர்கள் உயிரிழந்த கல்லடி, திருச்செந்தூர் பகுதியில் நேற்றுக் காலை அஞ்சலி நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டன.

இதில் பல நூற்றுக் கணக்கான பொது மக்கள் கலந்து கொண்டனர். (இ-7)

## கல்முனையில் சுனாமி நினைவுதினம் அனுஷ்டிப்பு

(கொழும்பு)

கல்முனை - மாமாங்கம் மைதானத்திலுள்ள சுனாமி நினைவுத்தூபியில் சுனாமி நினைவுதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

கல்முனை கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் 596 பேர் சுனாமியால் உயிரிழந்திருந்தனர். சுனாமியில் தமது உறவுகளை இழந்தோரும், பெருந் திரளான பொது மக்களும் இந்த சுனாமி நினைவு தினத்தில் அஞ்சலி செலுத்தினர். (இ-7)





## அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பள நிலுவைகள் ஜனவரியில் வழங்கப்படும் -இ.த.ஆ.ச.தகவல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண அதிபர்கள், ஆசிரியர்களுக்கு இது வரை வழங்கப்படாதிருந்த சம்பள நிலுவைகள் ஜனவரி மாதம் வழங்கப்படும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் உறுதிப்படுத்தியுள்ளார்.

நீண்டகாலம் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு வழங்கப்படாதிருந்த பெருந்தொகை சம்பள நிலுவைகள் வழங்கப்படவேண்டும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடக்கு மாகாண ஆளுநர் உள்ளிட்ட அனைவரிடமும் வேண்டுகோள் விடுத்திருந்தது. அதன் அடிப்படையில் முதற்கட்டமாக ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்களுக்கு சம்பள நிலுவைகள் வழங்கப்பட்டன.

போதிய நிதியில்லாததால் கடமையில் உள்ளவர்களுக்கு ஜனவரிமாதம் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் ஜனவரி மாதம் அனைத்து அதிபர்கள், ஆசிரியர்களுக்குமான சம்பள நிலுவைகள் வழங்குவதற்கான நிதி தற்போது கிடைத்துள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

இதற்காகப் பாடுபட்ட அனைவருக்கும் சங்கம் நன்றி தெரிவித்துக் கொள்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## தரம்- 6 மாணவர் அனுமதி குறித்து மாணவர்களுக்கு வேம்படியில் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 161 வெட்டுப்புள்ளிக்குமேல் பெற்ற மாணவிகளுக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் அனுமதித்தல் தொடர்பாக 31.12.2017 முற்பகல் 10 மணிக்கு பெற்றோர்களுக்கான கூட்டம் நடைபெறும். அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்ந்து 08.01.2018 இற்கு முன்னர் தாங்கள் அனுமதியைப் பெற்று உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்வதாக அதிபர் அறிவித்துள்ளார். (இ-7)



சங்கானை பிரதேச செயலக பண்பாட்டுப் பெருவிழா பனிப்புலம் மறுமலர்ச்சிக் கழக மண்டபத்தில் சங்கானை பிரதேச செயலர் பிறேமினி பொன்னம்பலம் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சு.முரளிதரன் கலந்து கொண்டார். இதில் "பனுவில்" நூல் வெளியிட்டு வைக்கப்பட்டதோடு நல்லூர் சின்னத்தம்பி புலவரின் பறாளை விநாயகர் பள்ளு நூல் பண்டிதர் பொன்னம்பலவாணரின் உரையில் மீள் பதிப்புச் செய்து வெளியிட்டு வைக்கப்பட்டது.

(படங்கள்:-சுட்டுடை செய்தியாளர்)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## திருக்கோயில் மரங்களின் மருத்துவப் பயன்கள்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India

(சென்றவாரத் தொடர்ச்சி)

இலுப்பை

1.இலுப்பை இலையை மார்பகத்தில் வைத்துக் கட்டி வர தாய்ப்பால் சுரப்பு மிகும்.

2.இலுப்பைப்பூ 50 கிராம், அரை லீற்றர் நீரிலிட்டு 200 மி.லீ. ஆகக் காய்ச்சி வடிகட்டி காலை மட்டும் ஒரு மாதங்கள் சாப்பிட்டு வர மதுமேகம் தீரும். 50 மி.லீ. ஆக நாளுக்கு இரண்டு அல்லது மூன்றுவேளை குடித்து வர இருமல், பித்த கும்தாகம் ஆகியவை தீரும்.

3.பூவை வதக்கி ஒத்தடம் கொடுத்துவர விதை வீக்கம் தீரும்.

4.மரப்பட்டை 50 கிராம் ஒரு லீற்றர் நீரிலிட்டு கால் லீற்றர் ஆகக் காய்ச்சி வடிகட்டிக் காலை, மாலை குடித்து வர மதுமேகம் தீரும்.

5.பச்சை பட்டையுடன் சிறிது கசகசா சேர்த்தரைத்து உடலில் தடவி வைத்திருந்து குளிக்கச் சொறி, சிரங்கு ஆறும்.

6.இலுப்பை நெய்யை வெதுவெதுப்பாகச் சூடு செய்து தடவி வைத்திருந்து வெந்நீர் ஒத்தடம் கொடுக்க இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி ஆகியவை தீரும்.

7.பிண்ணாக்கைச் சுட்டுப் பொடித்துத் தேங்காய் எண்ணெயில் கலந்து பூசக் கடுவன், புண், கரப்பான் ஆகியவை தீரும்.

8.10 கிராம் பிண்ணாக்கை நீர்விட்டு அரைத்து 50 மி.லீ.நீரில் கலக்கித் தற்கொலைக்காக நஞ்சுண்டவர்களுக்கு கொடுக்க வாந்தியாகி நஞ்சு முறியும்.

9.பிண்ணாக்கை அரைத்துக் குழம்பி அனலில் வைத்துக் களியாகக் கிளறி இளஞ் சூட்டில் கட்டிவர விதை வீக்கம் 4.5 தடவைகளில் தீரும்.



கடம்பு

1.இலைச்சாறு 30 மி.லீ. கொடுக்க வயிற்றுப்போக்கு நிற்கும்.

2. 20கிராம் கடம்ப இலையைக் குறுக அரிந்து அரை லீற்றர் நீரிலிட்டு நன்கு கொதிக்க வைத்து வாய் கொப்பளிக்க வாய்ப் புண், தொண்டைப் புண் ஆகியவை தீரும்.

3.கடம்பம்பட்டை 50 கிராம் இடித்து ஒரு லீற்றர் நீரிலிட்டு கால் லீற்றராகக் காய்ச்சிக் காலை, மாலையாக 125 மி.லீ. குடித்துவர என்புக் காய்ச்சல், குளிர்க்காய்ச்சல் தீரும்.

4.கடம்பம் பட்டையை இடித்து துணியில் ஒட்டிவிட்டு அனலில் வதக்கி ஒத்தடம் கொடுத்துக் கட்டிவர வாதப் பிடிப்புக்கள் தீரும்.

6.வித்துடன் சமன் மிளகு சேர்த்து எலுமிச்சம் பழச் சாற்றினால் மெழுகு பதமாய் அரைத்து வைத்துக் கொண்டு சுண்டைக் காயளவு காலை, மாலை சாப்பிட்டுவர இந்திரியப் பலவீனம் குணப்படும்.

7.விதைப் பொடியை நாசியில் உறிஞ்சத் தலைவலி நீங்கும். விதையை இஞ்சிச் சாற்றில் உரைத்துக் குழந்தைகளுக்குக் கொடுக்க வாந்தியாகி நீர்க்கோவை தீரும்.

காட்டாத்தி

1.உலர்ந்த காட்டாத்தி இலை அல்லது பூ 20 கிராம் 200 மி.லீ. நீரிலிட்டு 100 மி.லீ. ஆகக் காய்ச்சி இரண்டு அல்லது மூன்று வேளையாகக் குடித்துவர சீதக் காய்ச்சல் குணமாகும்.

2.காட்டாத்திப்பூ, வில்வவேர்ப்பட்டை, கோரைக் கிழங்கு, வெட்பாலை அரிசி, வெள்ளி லோத்திரப்பட்டை, இலவங்கப் பட்டை இவற்றைச் சமன் அளவாக எடுத்து உலர்த்திப் பொடித்து சமனெடைச் சர்க்கரைப் பொடி கலந்து வைத்துக் கொண்டு வேளைக்கு 5 கிராம் மோரில் கலக்கிக் காலை, மாலை கொடுத்துவரச் சீதக் கழிச்சல், நீர்த்த கழிச்சல், நீர்த்தக் கழிச்சல் ஆகியவை குணமாகும்.

3. காட்டாத்தி விதையைக் காடியில் அரைத்துப் பற்றுப் போட கழ் நச்சுப் புண்கள் ஆறும்.

4.காட்டாத்திப்பட்டை அரிசி கழுவிய நீரில் அரைத்து பற்றுப் போடக் கட்டி, வீக்கம், கண்டமாலைப் புண்கள் ஆகியவை தீரும்.

5. பட்டையைச் சிதைத்து நீரிலிட்டுக் கொதிக்க வைத்து வடித்து வாய் கொப்பளித்து வரப் பல்வலி, வாய்ப்புண் ஆகியவை குணமாகும்.

6. 40 கிராம் காட்டாத்திப்பட்டையைப் பஞ்சுபோல் இடித்து அரை லீற்றர் நீரிலிட்டு 125 மில்லியாகக் காய்ச்சி 40 மி.லீ. ஆகக் காலை, மதியம், மாலை கொடுத்துவர மண்ணீரல் வீக்கம் தீரும். வயிற்றுப்போக்கு, பசியின்மை ஆகியவை குணமாகும். குடற்புழுக்கள் மடியும்.

குருந்து

1. 20 மி.லீ. குருந்தம்பழச் சாற்றில் 2 கிராம் வெடியுப்பைக் கரைத்து உடம்பில் தடவி வைத்திருந்து குளிக்கச் சொறி, சிரங்கு ஆகியவை தீரும்.

2. 30 மி.லீ. பழச்சாற்றில் சிறிது உப்பிட்டு 20 மி.லீ. நீர் கலந்து மாலை தோறும் குடித்து வர வாந்தியுடன் கூடிய வயிற்று வலியும் தலைவலியும் தீரும்.

3. பழத்தைத் தணலிட்டுப் பதமாக வாட்டிப் பிழிந்த சாறு 30 மி.லீயுடன் தேன் கலந்து ஒவ்வொரு தேக்கரண்டி அடிக்கடி கொடுத்துவர இருமல் தீரும்.

4. பழத்தோலிலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெயுடன் சம அளவு விளக்கெண்ணெய் கலந்து பூசிவர ஆண்குறி, பெண்குறி ஆகியவற்றில் காணும் வெடிப்பு, நமைச்சல், வாதவலி ஆகியவை தீரும்.

5. பழத்தை அரிந்து உப்பிட்டு ஊறுகாயாகப் பாகப்படுத்தி உண்டுவரச் செரியாமை நீங்கிப் பித்தம் சமனப்படும்.

நெல்லி

நெல்லி இலைக்கொழுந்தை அரைத்து 25 கிராம் அளவுக்கு மோரில் கலந்து காலை, மாலை கொடுக்கச் சீதபேதி குணமாகும்.

2. இலையை நீரிலிட்டு கொதிக்க வைத்து வாய் கொப்பளிக்க வாய்ப்புண் தீரும்.

3.நெல்லிக்காய்ச்சாறு 15 மி.லீ., தேன் 15 மி.லீ., எலுமிச்சை சாறு 15 மி.லீ. கலந்து மாலை மட்டும் சாப்பிட்டு வர மதுமேகம் முற்றிலும் தீரும்.

4. 15 கிராம் நெல்லிக்காயை இடித்து அரை லீற்றர் நீரிலிட்டு 200 மி.லீ.தேன் கலந்து 3 வேளையாக நான்கு நாட்கள் சாப்பிட மிகு பித்தம் தணியும்.

5. நெல்லி வற்றலும் பச்சைப்பயறும் வகைக்கு 20 கிராம் ஒரு லீற்றர் நீரிலிட்டு 200 மி.லீ. ஆகக் காய்ச்சி வடித்து 100 மி.லீ.ஆகக் காலை, மாலை சாப்பிட்டு வரத் தலைச்சுற்றல், கிறுகிறுப்புடன் கூடிய இரத்தக் கொதிப்பு ஆகியவை தீரும்.

6. நெல்லிப் பழச்சாறு, பொன்னாங்காணிச்சாறு, குமரிச்சாறு, சிறுகீரைச்சாறு, ஆவின்பால் வகைக்கு ஒரு லீற்றர், செவ்விளநீர் 1லீற்றர், நல்லெண்ணெய் ஒன்றரை லீற்றர் இவற்றுடன் அதிமதுரம், கோஷ்டம் ஏலம், குராசாணி ஓமம், பச்சிலை, பூலாங்கிழங்கு, கஸ்தூரி மஞ்சள், சாதிக்காய், சாதிப்பத்திரி, திரிகடுகு, திரிபலை, இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, பூச்சாந்து, சோம்பு, வால்மிளகு வகைக்கு 5 கிராம் பாலில் அரைத்துக் கலந்து சிறு தீயில் எரித்துப் பதமுறக் காய்ச்சி வடிகட்டி வாரம் இருமுறை தலையில் தேய்த்து முழுகிவர கண்நோய் 96, மாலைக்கண், கண்காசம், கை கால் எரிச்சல், பித்த வெட்டை, பித்த வாயு, பித்த மயக்கம், உடம்பெரிச்சல் ஆகியவை தீரும்.

7. 2கிலோ நெல்லி வற்றல் 4 லீற்றர் நீரில் போட்டு அரை லீற்றராகக் காய்ச்சி இறுத்து அரை கிலோ சர்க்கரை சேர்த்துப் பாகாக்கி அதில் திரிகடுகு வகைக்கு 80 கிராம், கிராம்பு, ஏலம், வெள்ளைக் குங்கிலியம், கர்ப்பூரம், வாய்விளங்கம், அதிமதுரம், சுவகை நீறு, கொத்தமல்லி, சீரகம், ஓமம் இவற்றை வகைக்கு 10 கிராம் பொடித்துச் சேர்த்து கிளறி அரை லீற்றர் நெய் சேர்த்துப் பிசைந்து வைத்துக் கொண்டு காலை, மாலை 10 கிராம் அளவுகளைத்துப் பாலருந்தி வர மேகச் சூடு, கணச்சூடு, எலும்பைப் பற்றிய காய்ச்சல், என்புருக்கி, இருமல், ஈளை, காசம், சுயம், வாயு, பீனிசம், பொருமல் அனைத்தும் தீரும்.

8.நெல்லி வேர்ப்பட்டையைத் தேனில் உரைத்துத் தடவ நாக்குப் புண் குணமாகும். (முற்றும்)





அம்பாறை - காரைதீவு பகுதியில் சுனாமி நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. குறித்த நிகழ்வு காரைதீவு பகுதியில் பொது அமைப்புக்களின் அனுசரணையுடன் நேற்று இடம்பெற்றது. இதில், சுனாமியால் உறவுகளை இழந்தோரும், பெருந்திரளான பொதுமக்களும் கலந்து கொண்டு சுனாமியால் உயிரிழந்தோருக்கு சுடரேற்றி தமது உறவுகளை நினைத்து கண்ணீர் சிந்தினர்.

# பாரதம்

# பாகிஸ்தானுக்கு இந்தியா பதிலடி

## 3 பாக்.படையினர் பலி!



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் அத்து மீறிய துப்பாக்கிச்சூட்டுக்கு இந்திய இராணுவம்அளித்தபதிலடி தாக்குதலில் பாகிஸ்தான் வீரர்கள் 3 பேர் பலியாகினர்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி எல்லையில் தாக்குதல் நடத்துவதை பாகிஸ்தான் இராணுவம் வாடிக்கையாகக் கொண்டுள்ளது. பாகிஸ்தான் இராணுவத்தின் இத்தகைய தாக்குதலுக்கு இந்திய இராணுவமும் தக்க பதிலடி கொடுக்கிறது. அந்த வகையில் நேற்று முன்தினம் அத்துமீறிய தாக்குதலில் ஈடுபட்ட பாகிஸ்தான் துருப்புக்கு இந்திய இராணுவம் பதிலடி கொடுத்தது.

எல்லைக் கட்டுப்பாட்டு பகுதியிலுள்ள ருக் சக்ரி செக்டாரில், இரு தரப்பும் மாறி மாறி துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்டது. இந்தியாவின் பதிலடியில் பாகிஸ்தான் படையினர் மூன்று பேர் உயிரிழந்தனர். பாகிஸ்தான் ஊடகங்கள் இந்த செய்தியை வெளியிட்டுள்ளன. மேலும், இந்திய இராணுவம் தான் முதலில் அத்துமீறி துப்பாக்கிச்சூடு நடத்தியதாகவும் பாகிஸ்தான் ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பாகிஸ்தான் இராணுவம் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் இந்திய இராணுவ மேஜர் உட்பட 4 வீரர்கள் பலியாகினர். இந்த சம்பவம் நடைபெற்ற சில தினங்களில் மேற்கண்ட சம்பவம் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-6)

# தி.மு.கவுக்கு வாக்குக் குறைந்தது குறித்து முழுமையாக ஆய்வு செய்யப்படும் - ஸ்டாலின்

(சென்னை)

ஆர்.கே.நகர் தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க.வுக்கு வாக்கு குறைந்தது குறித்து முழுமையாக ஆய்வு செய்யப்படும் என்று மு.க. ஸ்டாலின் தெரிவித்தார்.

தி.மு.க. செயல் தலைவரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஆர்.கே.நகர் தொகுதி இடைத்தேர்தலில் பணத்தை வாரி, வாரி இறைத்த இருதரப்பில் ஒரு தரப்பு வெற்றி பெற்றிருக்கும் நிலையில் ஜனநாயகத் தேர்தல் களத்தை நியாயமான முறையில் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு சந்திக்க வேண்டும் என்கிற உறுதியுடன், தி.மு.க. ஜனநாயக நெறிகளையும், கோட்பாடுகளையும் பின்பற்றி செயற்பட்டதற்கு கிடைத்துள்ள பரிசுதான், ஆர்.கே. நகரில் கிடைத்துள்ள பின்னடைவு.

2 அணிகளாய்ப் பிரிந்து நின்றவர்கள் கொட்டிக் கொடுத்த தொகையினால், தி.மு.க. வேட்பாளரின் டெபாசிட் தொகையும் பறிபோயிருக்கிறது.

தி.மு.க.வின் இடைத் தேர்தல் தோல்வியைப் பார்த்து எக்காளமிடுபவர்கள், ஏளனம் செய்பவர்கள் இந்தத் தேர்தலில் நடந்த அத்துமீறல்களையும் துஷ்பிரயோகங்களையும் மறைப்பதற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ துணைபோகிறார்கள். காரணம், ஆர்.கே.நகரில் தோற்றது தி.மு.க அல்ல. இந்தியாவின் பெருமை எனக் கொண்டாடப்படும் மிகப் பெரிய ஜனநாயகம்.

விலை கொடுத்து வாங்கப்பட்ட இந்த வெற்றி என்பது அவர்களுக்கு வெகுமானமல்ல. பெரிய அவமானம். அதே நேரத்தில், வாக்காளர்களுக்குப் பணம் கொடுத்து வாக்குகளுக்கு விலை பேசக்கூடாது என்ற ஜனநாயகத்தின் அடிப்படை கொள்கையை கடைப்பிடித்த தி.மு.க. தோல்வியடைந்திருப்பது இலட்சிய ரீதியான தன்மானம்.

வெற்றி பெற்றால் வெறி கொண்டு ஆடுவதுமில்லை, தோல்வி கண்டால் துவளுவதுமில்லை என்பதே தலைவர் கலைஞர் நமக்குக் கற்றுத் தந்துள்ள அரசியல் பாடம். இமயமே சரிந்தாலும் நிலைகுலையாமல் நெஞ்சுறுதியுடன் நிற்கும் தி.மு.க. எனும் பேரியக்கத்திற்கு இடைத்தேர்தல் சறுக்கல்கள் சாதாரணமானவை.

இன்னும் சில மாதங்களில் பொதுத்தேர்தல் வர வேண்டும் என்கிற மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறுவதற்கான வாய்ப்பு உருவாகியுள்ள நிலையில், அதில் தி.மு.க.வின் வெற்றி உறுதியாக எழுதப்பட்டுள்ளதால், எப்படியாவது அதனைத் தகர்த்துவிட வேண்டும் என இடைத்தேர்தல் முடிவுகளை கொண்டு தி.மு.க.வை பலவீனப்படுத்த நினைக்கும் ஆதிக்க சக்திகளைக் கண்டு சிறிதும் மயங்கிட வேண்டியதில்லை. (இ-5)



# உலகம் மு

# போர்க் க

## போப் பிரான்சிஸ் கவலை



(வாடிகன்சிட்டி )

**உலகம் முழுவதும் இன்று போர்க் காற்று வீசிக்கொண்டிருக்கிறது. சிறு குழந்தைகளின் முகத்தில் தெரியும் வேதனை என்னை மிகவும் பாதிக்கிறது. எனவே போர்ப் பதற்றத்தைத் தணிக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் என போப்பாண்டவர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.**




வாடிகன் நகரிலுள்ள செயின் பீற்றர் சதுக்கத்தில் போப்பாண்டவர் பிரான்சிஸ் நேற்று முன்தினம் கிறிஸ்துமஸ் சிறப்பு பிரார்த்தனை நடத்தினார்.

அதில் இலட்சக்கணக்கானோர் கலந்து கொண்டனர். அவர்கள் மத்தியில் போப்பாண்டவர் பிரான்சிஸ் உரை நிகழ்த்தினார். அப்போது அவர் தெரிவிக்கையில்,

உலகம் முழுவதும் இன்று போர்க் காற்று வீசிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக மத்திய கிழக்கிலும், ஆபிரிக்காவிலும் பதற்றம் நிலவி வருகிறது. அதில் பாதிக்கப்படும் சிறு குழந்தைகளின் முகத்தில் தெரியும் வேதனை மிகவும் பாதிக்கிறது.

# ஏமனில் சவுதிக் கூட்டுப்படையின் தாக்குதலில் 71 பொதுமக்கள் பலி



(ஏமன்)

ஏமனில் நிலைகொண்டுள்ள ஹூத்தி போராளிகள் மீது சவுதி கூட்டுப்படையினர் நடத்திய வான்தாக்குதல்களால் கடந்த 48 மணித்தியாலங்களில் 71 பொது மக்கள் உயிரிழந்தனர். இந்த வான் தாக்குதல்களில் பெரும்பாலானவை ஏமன் தலைநகர் சனாவை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஏமன் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதல்களால் 3 சிறுவர்கள் மற்றும் 2 பெண்கள் உட்பட 11 பேர் உயிரிழந்தனர். சனா நகரின் மேற்கு பிரதேசத்தில் இடம்பெற்ற மற்றும் ஒரு தாக்குதலில் 8 பேர் உயிரிழந்தனர்.

இதேவேளை, ஞாயிற்றுக்கிழமை முதல் ஏமன் முழுவதிலும் இடம்பெற்ற 51 தாக்குதலில் 11 சிறுவர்கள் உட்பட 48 பேர் மரணித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஏமனில் சவுதி அரசின் ஆதிக்கம் காரணமாக ஏமனுக்கான மனிதாபிமான உதவி நடவடிக்கைகள் தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-8)

# வெளிநாடு

# ழுவதும் ாற்று!

எனவே, போர்ப் பதற்றத்தைத் தணிக்க இறைவனை பிரார்த்திக்கிறேன்.

பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் இடையே அமைதியை ஏற்படுத்த வேண்டும். மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தினால் மட்டுமே சாத்தியமாகும்.

கொரிய தீபகற்பத்தில் நிலவும் முரண்பாடுகளை களைய வேண்டும். அப்போது தான் பரஸ்பரம் நம்பிக்கை மேம்படும். மேலும், சிரியா, ஏமனில் நடக்கும் உள்நாட்டுப் போர் குறித்து கவலை தெரிவித்த போப் ரோஹிங்யா முஸ்லிம்கள் விவகாரம் குறித்தும் பேசினார்.

சமீபத்திய பங்களாதேஷ், மியன்மாருக்கு வந்த பயணத்தை நினைவு கூர்ந்த போப், சர்வதேச சமூகம் தனது பிராந்தியத்தில் வசிக்கும் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு அளிப்பதை உறுதி செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தினார். (இ-8)

## வெனிசுவெலா நாட்டுத் தூதுவர்களை வெளியேற்றி பதிலடி கொடுத்த கனடா

(ஒட்டாவா)

கனடா மற்றும் பிரேஸில் தூதர்களை நாட்டை விட்டு வெனிசுவெலா வெளியேற்றிய நிலையில், அந்நாட்டு தூதரக அதிகாரிகளை முற்றாக கனடா வெளியேற்றி பதிலடி கொடுத்துள்ளது.

தென் அமெரிக்க நாடான வெனிசுவெலாவில் சில மாதங்களுக்கு முன்னதாக எதிர்க்கட்சிகள் அங்கம் வகிக்கும் தேசிய சபையை கலைத்து விட்டு புதிதாக அரசியல் சாசன சபையை ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ அமைத்தார். முழுக்க முழுக்க ஆளும் கட்சியே இந்த சபையில் அங்கம் வகிப்பதாக கூறி எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தின. இதனால், ஏற்பட்ட கலவரத்தில் 120-க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

ஜனாதிபதி மதுரோவின் இந்த நடவடிக்கைக்கு அமெரிக்கா, கனடா உள்ளிட்ட




நாடுகள் கண்டனம் தெரிவித்ததோடு சில தடைகளையும் விதித்தன.

கனடாவில் உள்ள வெனிசுவெலா தூதரக அதிகாரிகள் ஊழல் மற்றும் மனித உரிமைகளை மீறியதாக கூறி அந்நாட்டு அரசு அவர்களுக்கு சில தடைகளை விதித்தது.

கடந்த வாரம் திடீரென கனடா தூதர் க்ரைப் கோவாலிக் மற்றும் பிரேசில் தூதர் ரை பெரைரா ஆகிய இருவரும் நாட்டை விட்டு வெளியேறுமாறு வெனிசுவெலா அரசியலமைப்பு சபையின் தலைமை பொறுப்பில் இருக்கும் டெல்சி ரோட்ரிக்ஸ் உத்தரவிட்டார்.

தூதரக அதிகாரிகளுக்கான சட்டதிட்டங்களை மேற்கண்ட இருவரும் ஒழுங்காக கடைப்பிடிக்க வில்லை எனவும், வெனிசுவெலாவின் உள் விவகாரங்களில் தலையிட்டார்கள் என்றும் அவர்கள் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

இந்நிலையில், வெனிசுவெலாவின் நடவடிக்கைக்கு பதிலடி கொடுக்கும் விதமாக அந்நாட்டு தூதர் வில்மர் பாரி யெண்டோஸ் பெர்னாண்டஸ் மற்றும் தூதரக அதிகாரி ஏஞ்சல் ஹெர்ரேரா ஆகியோரை நாட்டை விட்டு வெளியேற கனடா உத்தரவிட்டுள்ளது.

வில்மர் பாரியெண்டோஸ் தற்போது வெளிநாட்டு சுற்றுப் பயணத்தில் உள்ள நிலையில், அவர் மீண்டும் கனடாவுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் என்று கனடா வெளியுறவுத் துறை அமைச்சர் கிறிஸ்டியா ப்ரீலாண்ட் தெரிவித்தார்.

வெனிசுவெலாவில் ஜனநாயக விரோத அரசு நடைபெற்றுவருவதாகவும், பிராந்திய நட்பு நாடுகளின் துணையுடன் அதை எதிர்ப்பதற்கான அழுத்தத்தை நாங்கள் தொடர்ந்து வழங்குவோம் என்றும் ப்ரீலாண்ட் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)

## ஊழலால் 25 ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்ற முன்னாள் ஜனாதிபதி மனிதாபிமான அடிப்படையில் விடுதலை

(லிமா)

பெரு நாட்டில் மனித உரிமை மீறல் மற்றும் ஊழலில் ஈடுபட்டதாக 25 ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்ற முன்னாள் ஜனாதிபதியை தற்போதைய ஜனாதிபதி மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்துள்ளார்.

பெரு நாட்டின் ஜனாதிபதியாக கடந்த 1990 முதல் 2000ஆம் ஆண்டு வரை பதவி வகித்தவர் ஆல்பெர்டோ புஜிமோரி. அந்நாட்டில் அப்போது தலைவிரித்தாடிய மாவோயிஸ்டுகளின் ஆதிக்கத்தை இவர் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கியதாக ஒரு தரப்பினர் இன்றும் கருதுகின்றனர். மேலும், அங்கு கோலோச்சி வந்த இடதுசாரி இயக்கத்தினரை ஈவிரக்கமின்றி கொல்லவும் இவர் உத்தரவிட்டார்.

இந்நிலையில், ஆல்பெர்டோ புஜிமோரி தனது பதவிக் காலத்தில் ஆட்சி அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி இலஞ்சம் வாங்கியதாக தொடரப்பட்ட ஒரு வழக்கில் கடந்த 2007ஆம் ஆண்டு அவருக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கொலைப்படையினரை ஏவி மனிதாபிமானமற்ற முறையிலும், மனித உரிமைகளை மீறிய வகையிலும் தனது அரசியல் எதிரிகளை கொன்று குவித்ததாக தொடரப்பட்ட வழக்கில் கடந்த 2009ஆம் ஆண்டில் அவருக்கு 25 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

சுமார் பத்தாண்டுகளாக சிறையில் அடைப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி ஆல்பெர்டோ புஜிமோரிக்கு தற்போது வயது 79. குறைவான இரத்த அழுத்தம், மற்றும் தடுமாற்றமான இதய துடிப்பினால் மிகவும் மோசமான உடல்நிலையில் இருக்கும் அவரை சிறையிலிருந்து விடுதலை செய்து சிகிச்சை அளிக்க அரசு உதவிட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

இதற்கிடையில், பெரு நாட்டின் தற்போதைய ஜனாதிபதி பெட்ரோ பாப்லோ குக்ஸின்ஸ்கி என்பவருக்கு எதிராக சமீபத்தில் ஊழல் புகார்கள் கிளம்பின.

இதனால், ஜனாதிபதி பதவியிலிருந்து அவர் தகுதி நீக்கம் செய்யப்படும் சூழல் உருவானது. இந்த ஆபத்தில் இருந்து அவரை காப்பாற்ற முன்னாள் ஜனாதிபதி ஆல்பெர்டோ புஜிமோரியின் ஆதரவாளர்களான பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வந்தனர்.

இதற்கு அவர்கள் ஒரு நிபந்தனை விதித்தனர். உடல்நலக் குறைவால் சிறையில் அவதிப்படும் முன்னாள் ஜனாதிபதி ஆல்பெர்டோ புஜிமோரியை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என்பது அவர்களின் கோரிக்கையாக இருந்தது.

இதையடுத்து, ஆல்பெர்டோ புஜிமோரிக்கு பொது மன்னிப்பு வழங்கி ஜனாதிபதி பெட்ரோ பாப்லோ குக்ஸின்ஸ்கி நேற்று முன்தினம் உத்தரவிட்டார். சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட அவர் அந்நாட்டின் தலைநகரான லிமா நகரில் உள்ள பிரபல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகி வருகின்றன. (இ-8)

### அ.தி.மு.கவிலிருந்து ஒரு செங்கல்லைக் கூட யாராலும் உருவ முடியாது-ஓ.பன்னீர்செல்வம்

(சென்னை)

அ.தி.மு.கவில் பிளவுகள் ஏதும் இல்லை. நாங்கள் ஒற்றுமையாக உள்ளோம். அ.தி.மு.கவிலிருந்து ஒரு செங்கல்லையும் யாராலும் உருவ முடியாது என ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடந்த அ.தி.மு.க. ஆலோசனை கூட்டத்திற்கு பிறகு செய்தியாளர்களிடம் பேசிய துணை முதல்வர் பன்னீர்செல்வம்,

துரோகிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். தி.மு.கவும் தினகரனும் கூட்டணி சேர்ந்து அ.தி.மு.கவை வீழ்த்த நினைத்தனர்.

ஆனால் தி.மு.க. டெபாசிட் கூட வாங்க முடியவில்லை. என்னை கட்சியில் சேர்த்துவிட்டது தினகரன் என அவர் கூறுகிறார். அவர் கூறுவது அனைத்துமே பொய்தான்.

1980ஆம் ஆண்டிலிருந்து நான் கட்சியில் இருக்கிறேன். வார்டு செயலாளர் தொடங்கி படிப்படியாக செயலாளர் வரை உயர்ந்து பின்னர் ஜெயலலிதா சிட் வழங்கியதால் எம்.எல்.ஏ ஆகி அமைச்சரானேன். ஆனால் தினகரன் 1998ல் தான் மக்களவை தேர்தலில் நின்றார். தினகரனை விட 18 ஆண்டுகள் அரசியலில் நான் சீனியர். ஆனால் அவர் என்னை அரசியலில் வளர்த்துவிட்டதாக தினகரன் கூறுகிறார்.

தினகரன் கூறுவது எல்லாமே பொய்தான். அந்தந்த நேரத்தில் என்ன தேவையோ அதை பேசிவிட்டு போகிறவர்தான் தினகரன். சாதாரணமாக உட்கார்ந்து பேசிக்கொண்டு இருக்கும்போதுகூட ஒரு முகத்தை நான் பார்த்திருக்கிறேன். இன்னொரு முகம் இருக்கு. அதை தேவைப்படும் போது நான் காட்டுவேன் என தினகரன் கூறுவார்.

ஜெயலலிதா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றபோது யாருக்கும் அனுமதியில்லை. அவருக்கு நோய் தொற்று ஏற்படும் என்பதால் பார்க்க அனுமதிக்கவில்லை. ஆனால் அமைச்சர்கள் யாரும் அவரை பார்க்கவில்லை.

ஜெயலலிதாவின் சிகிச்சை வீடியோவை விசாரணை ஆணையத்தில் கொடுக்க வேண்டியது தானே. அ.தி.மு.கவில் பிளவுகள் ஏதும் இல்லை. நாங்கள் ஒற்றுமையாக உள்ளோம். அ.தி.மு.கவிலிருந்து ஒரு செங்கல்லையும் யாராலும் உருவ முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-8)

## தீவிரவாதி ஹபீஸ் சயீத்தின் அரசியல் கட்சி அலுவலகம்

## லாகூர் நகரில் திறப்பு

(இஸ்லாமாபாத்)

தீவிரவாதி ஹபீஸ் சயீத்தின் புதிய அரசியல் கட்சியான மில்லி முஸ்லீம் லீக் கட்சியின் அலுவலகம் லாகூர் நகரில் திறக்கப்பட்டது.

பாகிஸ்தானை சேர்ந்த 10 தீவிரவாதிகள் கடல் மார்க்கமாக இந்தியாவுக்குள் நுழைந்து மும்பையில் கடந்த 26.11.2008 அன்று குண்டுகளை வெடித்தும், துப்பாக்கியால் சுட்டும் கொடூரத் தாக்குதல்களை நடத்தினர். 166 பேர் கொன்று குவிக்கப்பட்ட இந்த தாக்குதல்களை பாகிஸ்தானில் அமர்ந்து கொண்டு மூளையாக இருந்து செயற்படுத்தியவர், ஹபீஸ் சயீத்.

லஷ்கர் இ தொய்பா என்ற தீவிரவாத இயக்கத்தின் நிறுவனரான இவர், அந்த இயக்கத்துக்குப் பாகிஸ்தானில் தடை விதிக்கப்பட்ட நிலையில், தற்போது ஜமாத் உத் தவா என்ற பெயரில் இயக்கத்தை நடத்தி வருகிறார்.

மேலும், மில்லி முஸ்லிம் லீக் என்ற புதிய கட்சியையும் தொடங்கினார். இந்த கட்சிக்கு அந்நாட்டு தேர்தல் ஆணையம் இன்னும் அங்கீகாரம் அளிக்கவில்லை.

இந்நிலையில், ஹபீஸ் சயீத்தும், அவரது கூட்டாளிகள் 4 பேரும் பாகிஸ்தான் அரசால் கடந்த ஜனவரி மாத இறுதியில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டனர். அவரும், அவரது இயக்கத்தினர் 37 பேரும் வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டோரின் பட்டியலில் சேர்க்கப்பட்டனர்.

இந்த நிலையில் ஹபீஸ் சயீத் மீதான பாகிஸ்தான் அரசின் பிடி மேலும் இறுகி உள்ளது. அவர் தீவிரவாதி தான் என பாகிஸ்தான் அரசு ஒப்புக்கொண்டிருப்பதை உறுதிப்படுத்தும் வகையில், அவரது பெயர் தற்போது தீவிரவாத தடுப்பு சட்ட பட்டியலின் 4ஆவது அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அரசால் கடந்த 2014-ம் ஆண்டு சர்வதேச தீவிரவாதியாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ள ஹபீஸ் சயீதின் தலைக்கு ஒரு கோடி டொலர் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

தன்னை சர்வதேச தீவிரவாதியாக பிரகடனப் படுத்திய அறிவிப்பை திரும்ப பெற வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையில் ஹபீஸ் சயீத் சார்பில் சமீபத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பல மாதங்களாக வீட்டுக்காவலில் சிறை வைக்கப்பட்டிருந்த ஹபீஸ் சயீத் சமீபத்தில் விடுதலை செய்யப்பட்டார். இந்நிலையில், பாகிஸ்தான் பாராளுமன்றத்துக்கு அடுத்த ஆண்டு நடைபெறும் தேர்தலில் மில்லி முஸ்லிம் லீக் கட்சி போட்டியிடும் என ஹபீஸ் சயீத் அறிவித்துள்ளார்.

இந்த கட்சியை அந்நாட்டு தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்ய ஹபீஸ் சயீத் விண்ணப்பித்திருந்தார். ஆனால், அந்த தேர்தல் ஆணையம் கடந்த ஒக்டோபர் மாதம் நிராகரித்து விட்டது. தேர்தல் கமிஷனின் முடிவை எதிர்த்து இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றில் ஹபீஸ் சயீத் வழக்கு தொடர்ந்துள்ளார்.

இந்த வழக்கின் மீதான விசாரணை நடைபெற்று வரும் நிலையில் ஹபீஸ் சயீத்தின் புதிய அரசியல் கட்சியை பதிவு செய்ய பாகிஸ்தான் அரசின் உள்துறை அமைச்சகம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றில் பாகிஸ்தான் உள்துறை அமைச்சகம் எழுதியுள்ள கடிதத்தில் ஹபீஸ் சயீத்தின் கட்சிக்கு அங்கீகாரம் அளித்தால் அரசியலில் வன்முறையும், தீவிரவாதமும் தலை தூக்கும் என்பதால் தேர்தல் ஆணையம் அக்கட்சிக்கு அங்கீகாரம் அளிக்கக்கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், லாகூர் நகரில் 120ஆவது பாராளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் மில்லி முஸ்லிம் லீக் கட்சியின் அலுவலகத்தை நேற்று முன்தினம் ஹபீஸ் சயீத் திறந்து வைத்தார்.

கடந்த செப்டம்பர் மாதம் இந்த தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் ஹபீஸ் சயீத்தின் மில்லி முஸ்லிம் லீக் கட்சியின் ஆதரவுடன் சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்ட காரி யாகூப் ஷேக் என்பவர் 5,822 (4.59 சதவீதம்) வாக்குகளை பெற்று நான்காவது இடத்துக்கு வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் கட்சி அலுவலகத்தை திறந்துவைக்க வந்திருந்த ஹபீஸ் சயீதை அவரது ஆதரவாளர்கள் மலர்களை தூவி சிறப்பான முறையில் வரவேற்றனர். அங்குள்ள பாட்டா சாஹெப் நர்கா அருகாமையில் உள்ள பகுதி மக்களின் குறைகளை அவர் கேட்டறிந்ததாக பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-8)

# மகிந்த வேறு கட்சியின் தலைவராக முடியாது

## சு.க.அமைச்சர் அமரவீர தெரிவிப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையினை வகித்துக்கொண்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வேறு கட்சியின் தலைமைப் பொறுப்பினை ஏற்றுக்கொள்ள முடியாது.

அவ்வாறு செயற்பட்டால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டிவரும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்தார். கட்சியின் கொள்கைக்கு அமையவே அனைவரும் செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசகரும் சிரேஷ்ட உறுப்பினருமான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமை பொறுப்பை ஏற்கப்போவதாக கூறப்படும் நிலையில் இது குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் ஆலோசகருமாக இருக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வேறு கட்சிக்கு தலைமை தாங்குகிறார் என எந்தவித உத்தியோகபூர்வ தகவலும் கிடைக்கவில்லை. பொதுஜன முன்னணியின் எந்தவொரு பொறுப்பையும் அவர் இதுவரையில் வகிக்கவில்லை. எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்தவர் ஒருவர் கட்சியின் கொள்கைக்கும் தலைமைத்துவத்திற்கும் முரணான வகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்க் கட்சியின் அங்கத்துவத்தை ஏற்றுக்கொண்டால் அவர் யாராக இருந்தாலும் அவருக்கு எதிராக கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு முரணாகவும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை விமர்சிக்கும் நடவடிக்கைகளை எடுக்கும் நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நபர்கள் பிரதிநிதித்துவப் படுத்தினால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். இதில் மாற்றுக் கருத்து இல்லை. முன்னாள் ஜனாதிபதிக்கும் இந்த விதிமுறை பொருந்தும். எனவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அங்கத்துவத்தை வைத்துக் கொண்டு வேறு ஒரு முரண்பாடான கட்சிக்கு தலைமை பொறுப்பை வகிக்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கை உற்பத்திகள் மீதான கண்காணிப்பு அதிகரிக்கப்படும்

## ரஷ்ய விலங்குகள் கண்காணிப்பு அமைப்பு தெரிவிப்பு

(மொஸ்கோ)

இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தாவர உற்பத்திகளின் மீதான கண்காணிப்பு அதிகரிக்கப்படும் என்று ரஷ்யாவின், விவசாய மற்றும் விலங்குகள் கண்காணிப்பு அமைப்பான, Rosselkhoznadzor இன் தலைவர், சேர்ஜி டாங்வேர்ட் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேயிலை உள்ளிட்ட விவசாய விளைபொருட்கள் மீதான தற்காலிக தடை நீக்கப்பட்டுள்ளமை தொடர்பாக, ரஷ்யாவின் ஸ்புட்னிக் நாளிதழுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர்,

இலங்கையிலிருந்து அனைத்து தாவர உற்பத்திகளையும் இறக்குமதி செய்வதற்கு கடந்த 18 ஆம் திகதியில் இருந்து Rosselkhoznadzor தடை விதித்திருந்தது.

இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தேயிலைப் பொதியில், தானியங்கள் மற்றும் விதைகளுக்கு ஆபத்தான பூச்சியினமான கப்ரா என்ற வண்டு, கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே, இந்த தடை விதிக்கப்பட்டது.

இந்தப் பூச்சி ரஷ்யாவுக்குள் நுழைந்தால், பல மில்லியன் டொலர் இழப்பு ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களை அடுத்து, இலங்கையில் இருந்து எல்லா தாவர உற்பத்திகளையும் இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்ட தடையை, எதிர்வரும் 30ஆம் திகதியிலிருந்து நீக்க முடிவு செய்துள்ளோம்.

இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்படும் எல்லா தாவர உற்பத்திகளின் மீதான கண்காணிப்பும் அதிகரிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# திருடர்களுக்கு பாதுகாப்பு வழங்குகிறது ஐ.தே.க

## ஜே.வி.பி.தலைவர் அநுர விசனம்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி திருடர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதாக ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டி - பேராதெனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

திருடர்களைப் பிடிப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்கப்பட்ட போதிலும், அவர்கள் திருடர்களை பிடிக்காது அந்த திருடர்களுக்கு பாதுகாப்பு வழங்குகிறார்கள் எனத் தெரிவித்தார்.

மேலும், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் மற்றும் முன்னாள் நிதிய மைச்சர் ஆகியோர் கையை முத்திட்டுள்ள நாணயத்தாள்களை, முறையான சட்டத் திட்டங்களுக்கு அமைய இரத்துச்செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

# நீதிபதியை அச்சுறுத்திய மூவர் கைது

(கொழும்பு)

யாழ்ப்பாண நீதவானை அச்சுறுத்திய சம்பவம் ஒன்று தொடர்பில் மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நீதவான் நீதிபதி பிரதேசத்தில் தமது உத்தியோகபூர்வ வாகனத்தில் பயணித்துக்கொண்டிருந்தபோது, சிலர் வாகனத்தை வழிமறித்து அச்சுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் நீதவானின் பாதுகாப்பு அதிகாரிகள் பொலிஸாருக்கு நேற்று முன்தினம் முறைப்பாடு செய்துள்ளனர். இதனை அடுத்து அச்சுறுத்தியவர்களின் வாகன பதிவிலக்கத்தினைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் மூலம் இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் தம்புள்ளை மற்றும் கம்பஹா பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## அடுத்தவர்களைப் பார்த்தே வாழ்வதா?

சுயமாக எதையும் செய்யத் தெரியாமல் நீ அப்படிச் செய்தாயா? நானும் அப்படியே செய்கிறேன். நீ அப்படிப் பேசினாயா? நானும் அப்படியே பேசுகிறேன் என்று மற்றவர்களைக் பின்பற்றி வாழும் குணம் நமக்கு வேண்டாத ஒன்று. எதிர் வீட்டில் பழைய பிரிஜ் ஒன்றைக் கொடுத்துவிட்டுப் புதிது வாங்கினார்களா? நாமும் அதேபோல் மாற்ற வேண்டும்! அடுத்த வீட்டில் குடும்பத்துடன் டூர் போனார்களா? நாமும் அதேபோல் போக வேண்டும்.

நல்லா இருக்கே இந்த பாண்ட். எங்கே வாங்கினாய்? எனக்கு இதேமாதிரி ஒன்று வாங்கனும். உறவுக்காரருடைய மகளுக்கு கல்யாணம் பேசிட்டாங்க! நாமும் நம்ம பொண்ணுக்கு உடனே முடிக்கனும்! என்றெல்லாம் மற்றவர்களின் வாழ்க்கையைப் பார்த்து அங்குல அங்குலமாகப் பின்பற்றுகிறவர்கள் சில விடயங்களை உணர்வது நல்லது.

பிரிட்ஜை மாற்றுவது என்பதை மட்டும் மையமாகக் கொண்டு சிந்திக்காமல் மற்ற கண்ணோட்டங்களையும் சிந்திக்க வேண்டும். நம் பிரிட்ஜ் இன்னும் உழைக்கும். அதற்குள் ஏன் மாற்ற வேண்டும்? இந்தக் கூடுதல் பணத்திற்கு எங்கே போவது? அப்புறம் யார் தவணை கட்டுவது? என்பன போன்ற துணைக் கேள்விகளும் கூடவே எழுப்பப்பட வேண்டும்.

அவர்கள் டூர் போய்விட்டுத் திரும்பியதும் படுகிற பொருளாதாரச் சிரமங்களும் உடம்புக்கு ஆகாமல் வந்து படுக்கையில் படுகிற பாடுகளும் நம் கண்களுக்குத் தெரிவதில்லை. டூர் மட்டும் தான் தெரிகிறது.

நண்பர் வாங்கின பாண்ட் நன்கு உழைக்கிறதா? அல்லது கொஞ்ச நாளிலெல்லாம் அதை வாங்கியதற்காக வருத்தப்படுகிறாரா? என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

உறவுக்காரர் வீட்டில் திருமணம் என்பதற்காக இவர்களும் அவசர அவசரமாக மாப்பிள்ளை பார்த்து (சரியாகக்கூட விசாரிக்காமல் பணமும் போதிய அளவு கையில் இல்லாமல்) பெண்ணைப் பிடித்துப் பாழுங் கிணற்றில் தள்ளுவதா?

மற்றவர்களைப் பார்த்துக் கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்கள் உலகில் நிறைய. ஆனால் நம் பலம், பலவீனம், சூழ்நிலை இவற்றையெல்லாம் பற்றிக் கவலைப்படாமல் மற்றவர்கள் மாதிரியே செய்வேன் என்று இறங்கி எக்குத்தப்பாய் மாட்டிக் கொள்ளக் கூடாது. அவர்கள் நிலைமைகள் வேறு, நம் நிலைமைகள் வேறு.

அடுத்தவர்களைப் பார்த்து வாழ்கிறவர்களுக்கு இன்னொரு சங்கடமும் காத்திருக்கிறது. அவர்களைப் போலவே நாமும் நடந்து கொள்ள முடியாதபோது அது நம் மனப் புலம்பல்களை அதிகமாக்குகின்றது. நம்முடைய இயலாமைகள் நமக்குப் பெரிதாகவும் பூதாகரமாகவும் ஆசி வெறுப்பும் சலிப்பும் அதிகமாகின்றன. சே! என்ன வாழ்க்கையிது! என்று விரக்தி வருகிறது. அவர்களைப் பார்க்கும் போதெல்லாம் உள்ளுக்குள் கபகப என்று எரிவதைப் போல் இருக்கிறது.

இவ்வளவு செயற்கையான கஷ்டங்கள் நமக்குத் தேவையில்லை. அடுத்தவர்களைப் பார்த்து வாழ்கிறவர்களுக்கு இன்னும் இரு கேள்விகள் காத்திருக்கின்றன. நமக்கு நாமே சுயகுழப்பும் கொடுத்துக் கொள்ளாமல் இப்படி நிழலாகவே வாழ எவ்வளவு நாள் உத்தேசம்? சுயமாகச் சிந்திக்கத் தொடங்குவது எப்போது?

நம்மைப் பார்த்து மற்றவர்கள் வாழக் கற்றுக் கொள்ளும் அளவுக்கு எப்போது உயருவதாக எண்ணம்?

**லேனா தமிழ்வாணன்**

# வெள்ளை வானில் கடத்தப்பட்டவர்கள் கன்சைட் முகாமில் வதைக்கப்பட்டனரா?

## படுபாதகச் செயல்களுடன் தொடர்புடைய மூவர் குறித்து தீவிரவிசாரணை







(கொழும்பு)

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இடம் பெற்ற வெள்ளை வான் கடத்தல் சம்பவங்கள், காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுடன் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னா கொட, முன்னாள் கடற்படை பேச்சாளர் டி.கே.பி. தஸநாயக்க மற்றும் தற்போது மரண தண்டனை கைதியாகவுள்ள முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தன ஆகியோர் ஒன்றிணைந்து செயற்பட்டுள்ளமையை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளில் வெளிப்படுத்தியுள்ளனர்.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேர், கேகாலையைச் சேர்ந்த சாந்த சமரவிக்ரம, இப்பாகமுவையைச் சேர்ந்த பிரதீப் ஆகியோரின் கடத்தல்கள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைவாகவே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இம்மூவருக்கும் இடையிலான தொடர்பு குறித்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். அத்துடன் இவ்வாறு கடத்தப்பட்டவர்கள் கன்சைட் எனும் நிலத்தடி சிறைக் கூடங்களிலேயே தடுத்து வைக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருக்கலாம் எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவு சந்தேகிக்கின்றது.

குறிப்பாக 5 மாணவர் கடத்தல் விவகாரத்தில் கடற்படை முன்னாள் ஊடகப் பேச்சாளர் தசநாயக்க, முன்னாள் தளபதி கரன்னாகொட ஆகியோர் பொறுப்புக் கூற வேண்டும் என்பதற்கான சான்றுகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஏற்கனவே கண்டறிந்திருந்தனர்.

இந் நிலையில் கேகாலை மேல் நீதிமன்றில் இடம் பெறும் வழக்கொன்றின் பிரதிவாதியான சாந்த சமரவிக்ரம, இப்பாகமுவ பகுதியை சேர்ந்த பிரதீப் ஆகியோர் கன்சைட் முகாமில் இருந்தமைக்கான ஆதாரங்களை குற்றப் புலனாய்வுப் பிரிவு கண்டுபிடித்து கோட்டை நீதவானுக்கு அறிக்கையும் சமர்ப்பித்துள்ளனர்.

இதில் கேகாலை சாந்த சமரவிக்ரம, அலவ்வ பொலிஸார் கைது செய்யப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெறும்போது தப்பியோடியதாக பொலிஸ் தரப்பில் அப்போது கூறப்பட்டது. எனினும் தற்போது காணாமல் போயுள்ள சாந்த எவ்வாறு வைத்தியசாலையில் இருந்து தப்பி, அதி பாதுகாப்பு வலயமான கன்சைட் நிலத்தடி முகாமுக்குள் வந்தார் என கேள்வி எழுப்பும் குற்றப் புலனாய்வுப் பிரிவு அது தொடர்பில் விசாரணை செய்கின்றது.

அத்துடன் கன்சைட் முகாமில் இருந்ததாக கூறப்படும் தற்போதும் காணாமல் போயுள்ள பிரதீப் என்பவர் யார் என்பதை அண்மையில் குற்றப் புலனாய்வுப் பிரிவு கண்டறிந்துள்ளது.

இப்பாகமுவ பிரதீப் என அறியப்பட்ட குறித்த நபர், கொகரல்ல பொலிஸ் பிரிவில் தேவவரம, பக்கல இப்பாகமுவ எனும் முகவரியில் வசித்த விதாரன ஆரச்சிகே தொன் பிரதீப் நிஷாந்த என்பதை குற்றப் புலனாய்வுப் பிரிவு கண்டுபிடித்துள்ளது.

அவர் காணாமல் போனமை தொடர்பில் கொகரல்ல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு உள்ள நிலையில், டிப் வண்டியில் வந்தோரால் அவர் கடத்திச் செல்லப்பட்டதாக அவரது குடும்பத்தினர் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வாக்கு மூலம் வழங்கியுள்ளனர்.

அலவ்வை, கொகரல்ல பொலிஸ் நிலையங்கள் குருநாகல் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் காரியாலயத்துக்கு உட்பட்டு நிர்வாகம் செய்யப்பட்ட நிலையில் இக் கடத்தல்கள் இடம்பெற்ற போது, முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தனவே குருநாகல் மாவட்டத்துக்கு பொறுப்பான பொலிஸ் பிரதானியாக செயற்பட்டுள்ளார்.

அத்துடன் 5 மாணவர் கடத்தல் விவகாரம் வெளிப்படுத்தப்பட காரணமாக இருந்த, முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட தனது தனிப்பட்ட விவகாரம் தொடர்பில் லெப்டினன் கொமாண்டர் சம்பத் முனசிங்கவுக்கு எதிராக முதலில் முறையிட்டதும் வாஸ் குணவர்தனவிடமாகும். பின்னரேயே அது பொலிஸ்மா அதிபரால் சி.ஐ.டிக்கு மாற்றப்பட்டிருந்தது.

இந் நிலையிலேயே கரன்னாகொட, தஸநாயக்க மற்றும் வாஸ் குணவர்தன ஆகியோர் ஒன்றாக இந்த வெள்ளை வான் கடத்தல்கள் தொடர்பில் செயற்பட்டனரா, அவ்வாறு வெள்ளை வானில் கடத்தப்படுவோர் கன்சைட் நிலத்தடி முகாமில் தடுத்து வைக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு சந்தேகிக்கின்றது.

இந் நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளை, குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன, பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுதத் நாகஹமுல்ல ஆகியோரின் மேற்பார்வையில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஷானி அபேசேகரவின் வழி நடத்தலின் கீழ் கொள்ளை பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வா தலைமையிலான குழுவினர் முன்னெடுத்துள்ளனர். (இ-7)

## சுனாமியால் உயிரிழந்தோருக்கு மலையக மக்கள் நேற்று அஞ்சலி







(ஹற்றன்)

சுனாமி ஆழிப்பேரலை இடம்பெற்று நேற்றுடன் 13 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு உயிரிழந்தவர்களை நினைவு கூரும் வகையில் மலையக மக்கள் தமது அஞ்சலியை செலுத்தினர்.

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி இலங்கையின் வரலாற்றில் மிகவும் துயரகரமான நிகழ்வாக காலை 9.25க்கு ஆழிப்பேரலை அனர்த்தம் இடம்பெற்றது.

இவ் அனர்த்தத்தில் உயிர் நீத்த இலங்கை உறவுகளுக்கு தமது அஞ்சலியை மலையக மக்களும் செலுத்தினர்.

ஹற்றன் பொலிஸார், நகர வர்த்தகர்களின் ஏற்பாட்டில ஹற்றன் புத்தர் சிலைக்கு முன்னால் இடம் பெற்ற அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளில் ஹற்றன் நகரில் உள்ள வங்கி ஊழியர்கள், நகர வர்த்தகர்கள், சாரதிகள் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் என அனைவரும் கலந்து கொண்டனர். (இ-7)

## மண்முனையிலும் அஞ்சலி





(ஏறாவூர்)

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஒந்தாச்சிமடத்தில் சுனாமி பேரலையினால் உயிர் நீத்த உறவுகளின் 13 ஆம் ஆண்டு நிறைவையொட்டி அஞ்சலி செலுத்தும் நிகழ்வு அக் கிராம மக்களின் ஏற்பாட்டில் கிராமத் தலைவர் சந்தணம் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந் நிகழ்வானது இக் கிராமத்திலிருந்து உயிர் நீத்த 44 உறவுகளின் நினைவாக கடற்கரை வீதியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபி முன்பாக நடைபெற்றது.

இந் நிகழ்வில் மதகுருமார், பொதுமக்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர், சமுர்த்தி உத்தியோகத்தர் சங்கங்கள் அமைப்புக்களை சார்ந்த பிரதிநிதிகள்பலரும் கலந்து கொண்டனர். (இ-7)

# தென்னைப்பயிர்ச்செய்கையில் பசளைப் பிரயோகமும் அவற்றின் முக்கியத்துவமும்



தென்னைக்கு பசளையிடல் தொடர்பாக தென்னைச்செய்கை யாளர்கள் மத்தியில் ஏன், என்ன, எப்படி, எப்போது பசளையிடல் வேண்டும் என்ற பல்வேறான கேள்விகள் எழலாம். இவ்வாறான பல கேள்விகளுக்குரிய தீர்வாக இக்கட்டுரை அமையும் என எதிர்பார்க்கின்றேன்.

தென்னை ஓர் பல்லாண்டு த்தாவரமாகும். இது ஏறத்தாள 50 வருடங்கள் வரையில் சிற ப்பான பலனைத்தரவல்லது.

இது நாருரு வேர்த்தொகுதி யினைக் கொண்டிருப்பதனால் அதன் அகத்துறிஞ்சும் அதாவது நீரை, போசணைப் பதார்த்த ங்களை (பசளைகளை) உறி ஞ்சும் வேர்த்தொகுதியானது குறிப்பிட்ட பிரதேசத்திற்குள் எல்லைப்படுத்தப்பட்டிருக்கும். இப் பகுதியானது பசளை வட்டம் எனப்படும்.

இப்பசளை வட்டமானது ஒவ் வொரு வருடமும் ஒரு அடி அல் லது 1.5 அடி அதிகரித்துச் செல் வதுடன் தென்னைக்கு பாளை வரும் போது அப்பசளை வட்ட மானது 6 அடி சுற்று வட்டத்திற் குள் காணப்படும். பாளை வந்த திலிருந்து அம்மரம் 60 வயதில் ஓயும் போது இவ் 6 அடி சுற்று வட்டத்திலுள்ளேயே இப் பசளை வட்டம் காணப்படும்.

அத்துடன் தென்னையினது பல்வேறுபட்ட உடற்தொழிலியற் செயற்பாடுகள் நிகழ்வதானால் காலப்போக்கில் அச்சுற்று வட் டார போசணைப்பதார்த்தங்கள் நிறைவடைந்து விடும்.

தென்னையின் எல்லாப்பகு திகளும் பொருளாதார முக்கியத் துவம் வாய்ந்தவை. அதாவது தென்னை ஓலை, உரிமட்டை, தென்னை மட்டை, பாளை, தேங்காய் போன்றவை பொரு ளாதார பெறுமதி உடையதா கையால் அவை மீள்சுழற்சிக்கு ள்ளாகும் தன்மை மிகக்குறை வானதாகவே காணப்படுகின் றன.

இவ் அட்டவணை 1 ஆனது வருடத்திற்கு 3000 தேங்கா ய்கள் காய்க்கும் ஒரு ஏக்கர் விஸ்தீரணமான தென்னங் காணியில் எவ்வாறு போசணை ப்பதார்த்தங்கள் தென்னையின் வெவ்வேறு பகுதிகளினால் அகற் றப்படுகின்றன என்பதனைக் காண்பிக்கின்றது.

அதாவது வருடத்திற்கு 160 kg யூரியாவும், 71 kg எப்பா வலை பாறை பொசுபேற்றும், 279 kg MOP உம், 232 kg டொல மைற்றும் அகற்றப்படுகின்றன.

இதனைவிட தென்னங்கா

அட்டவணை 1:- வருடத்திற்கு 3000 தேங்காய்கள் காய்க்கும் 01 ஏக்கர் விஸ்தீரமாண தென்னங்காணியில் தென்னையின் வெவ்வேறு பகுதிகளினால் போசணைப் பதார்த்தங்கள் அகற்றப்படுதல்.

| பகுதி | அகற்றப்படும் அளவு (Kg/ac/year) | | | |
|---|---|---|---|---|
| | N | P | K | Mg |
| பூந்துணர் | 7.9 | 1.9 | 16.3 | 3.2 |
| தென்னைமட்டை | 33.4 | 3.3 | 43.6 | 20.3 |
| தேங்காய் | | | | |
| இளநீர் | 0.3 | 0.1 | 3.3 | 0.1 |
| சிரட்டை | 1.8 | 0.1 | 3.1 | 0.2 |
| தேங்காய்சொட்டு | 19.9 | 2.8 | 10.5 | 1.6 |
| உரிமட்டை | 10.6 | 1.2 | 63.2 | 2.5 |
| மொத்தம் | 73.9 | 9.3 | 139.9 | 27.9 |

| Equivalent (Kg) | Urea - 160 | ERP - 71 | MOP - 279 | Dolamite - 232 | |
|---|---|---|---|---|---|

ணிகள் இலைதவில் மண்ணரிப் பிற்கு உள்ளாவதனாலும், தென் னையின் பசளை வட்டப்பகுதி யிலுள் பரந்திருக்கும் களைகளி னாலும் கணிசமான போசணைப் பதார்த்தங்கள் அகற்றப்படுகின் றன. தென்னையினால் போசணைப் பதார்த்தங்கள் அகற்றப்படுதலா னது தென்னைக்கான இடப்பொ ருத்தப்பாட்டு வரைபடத்திற்கு ஏற்ற மாதிரியும், தென்னையின் வயதிற் கேற்பவும், காலநிலை வேறுபாடு களிலும் தங்கியுள்ளது.

இடப்பொருத்தப்பாட்டு வரைபட த்திற்கமைய எவ்வாறு போசணை அகற்றப்படுகின்றது என்பதனை அட்டவணை 2 தெளிவாக்குகின் றது.

தென்னையின் வயதிற்கேற்ப போசணைப் பதார்த்தத்தின் தேவையினைப்பார்க்கையில் இளம் மரத்திற்கு நைதரசன் (N) அதிகமாகவும் அதற்கடுத்ததாக பொசுபரசு (P) பின்னர் பொட்டா சியம் (K) உம் தேவைப்படுகி ன்றன. அதாவது N>P> K >Mg என்ற ஒழுங்கிலும் முதிர் மரத்திற்கு பொட்டாசியம் (K) அதிகமாகவும் , அடுத்ததாக மக னீசியம் (Mg) உம் பின்னர் N உம் தேவைப்படுகின்றன. அதா வது K >Mg>N>P என்ற ஒழுங் கமைப்பில் காணப்படுகின்றன.

தென்னைக்குரிய பசளைக ளைப் பார்க்கையில் அசேதனப் பசளை, சேதனப்பசளை என இரு பிரதான பிரிவுகள் காணப்படுகி ன்றன. இவ் அட்டவணை 3 ஆனது தென்னைக்குரிய அசே தனப்பசளை மூலகங்களைக் காண்பிக்கின்றது.

அட்டவணை 2 இடப்பொருத்தப்பாட்டு வரைபடத்திற்கமைய போசணை அகற்றப்படுதல்

| - 75-110 or more(palm/year) | | பேறுகள் விளைச்சல் 55-75 or more(palm/year) | |
|---|---|---|---|
| land suitability classes S1-S3 | | Land suitability classes S4 – S5 | |
| போசணை | அகற்றப்படுதல் (g/palm/year) | போசணை | அகற்றப்படுதல் (g/palm/year) |
| N | 740 | N | 434 |
| P | 118 | P | 95 |
| K | 1553 | K | 1248 |
| Mg | 213 | Mg | 143 |
| Ca | 330 | Ca | 256 |
| Fe | 7.4 | Fe | 6.0 |
| Mn | 4.0 | Mn | 3.6 |
| Zn | 2.8 | Zn | 1.7 |
| Cu | 0.8 | Cu | 0.6 |
| B | 1.6 | B | 1.0 |

இளம் மரங்களுக்கு இரசா

அட்டவணை 3 தென்னைக்குரிய அசேதனப் பசளை மூலகங்கள்

| போசணை | பசளை மூலங்கள் | | போசணை % |
|---|---|---|---|
| Nitrogen - N | Urea | $CO(NH_2)_2$ | 46% |
| Phosphorus - P | Rock phosphate | | |
| | Imported Rock phosphate | [illegible] | $P_2O_5$ 27.5% |
| | Eppawala Rock phosphate | | $P_2O_5$ 30% |
| | Tipple super phosphate | $Ca(H_2PO_4)_2$ | $P_2O_5$ 46% |
| Potassium - K | Muriate of Potash | KCl | $K_2O$ 60% |
| | Sulphate of Potash | $K_2SO_4$ | $K_2O$ 50% |
| Magnesium - Mg | Dolomite | $CaCO_3.MgCO_3$ | MgO 20% |
| | Kiserite | $MgSO_4.H_2O$ | MgO 24% |

யனப்பசளை 6 மாதங்களுக்கு ஒரு தடவையும் முதிர் மரங்களுக்கு வருடாந்தமும் பிரயோகிக்கப்படல் வேண்டும். தென்னங்கன்று நடுகை செய்யும் போது அடிப்பசளையாக சேதன, அசேதனப் பசளைகளை கலந்து பிரயோகிப்பது தான் சிறந்தது. அதாவது மாட்டெரு 10 kg அல்லது கோழி எரு 10 kg அல்லது ஆட்டெரு 5 kg உடன் அசேதனப் பசளையினைச் சேர்த்து பாவிக்கலாம். இதில் அசேதனப்பசளையானது நேரடிப்பசளை அல்லது பசளைக்கலவை என உள்ளது. அடியுரமாக பாவிக்கும் இப்பசளைகள் அட்டவணை 4 இல் காட்டப்படுகின்றன.

தென்னையினது வயதிற்கேற்ப நேரடிப்பசளை, அல்லது பச ளைக்கலவை எவ்வாறு பிரயோகிக்கப்படுகின்றது என்பதனை அட்டவணை காண்பிக்கின்றது.

அட்டவணை 4 தென்னைக்கு அடியுரமாக பாவிக்கும் பசளைகள்

நேரடிப் பசளை

| பசளை | அளவு (g) |
|---|---|
| Urea | 250 |
| TSP | 350 |
| MOP | 250 |
| Dolomite | 1000 |

பசளைக் கலவை

| பசளை | அளவு (g) |
|---|---|
| இளயரக் கலவை (YPM) | 850 |
| Dolomite | 1000 |

அட்டவணை 5 இளம் தென்னைகளுக்கான நேரடி பசளை அல்லது பசளைக்கலவை பிரயோகம்

| பசளை | மரத்தினது வயது வருடங்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| | 06 மாதம் | 01 - 1.5 வருடங்கள் | 02 – 2.5 வருடங்கள் | 3 - 3.5 வருடங்கள் | 4 வருடங்கள் – காய்க்கும் வரை |
| | அளவு (g) | | | | |
| Urea | 150 | 235 | 305 | 375 | 470 |
| TSP | 150 | 200 | 300 | 360 | 400 |
| MOP | 130 | 235 | 305 | 375 | 470 |
| Dolomite | 500 | 500 | 500 | 500 | 500 |

பசளைக் கலவை

| பசளை | மரத்தினது வயது வருடங்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| | 06 மாதம் | 01 - 1.5 வருடங்கள் | 02 - 2.5 வருடங்கள் | 3 - 3.5 வருடங்கள் | 4 வருடங்கள் – காய்க்கும் வரை |
| | அளவு (g) | | | | |
| இளயரக் கலவை(YPM) | 540 | 670 | 850 | 1,110 | 1,340 |
| Dolomite | 500 | 500 | 500 | 500 | 500 |

அட்டவணை 6 ஆனது முதிர் மரங்களுக்கு எவ்வாறு நேரடிப் பசளை, அல்லது பசளைக்கலவை பிரயோகிக்கப்படுகின்றது என்பதனைக் காண்பிக்கின்றது.

அட்டவணை 6 முதிர் தென்னைக்கான நேரடி பசளை, அல்லது பசளைக்கலவை பிரயோகம்

நேரடிப் பசளை

| பசளை | அளவு g) |
|---|---|
| Urea | 800 |
| TSP | 400 |
| MOP | 1,600 |
| Dolomite | 1,000 |

பசளைக் கலவை

| பசளை | அளவு (g) |
|---|---|
| முதிர் மரக் கலவை(APM) | 2,800 |
| Dolomite | 1,000 |

தென்னைகளின் வயதிற்கே ற்ப பசளை வட்டமானது வேறு படுகின்றது. கீழ்வரும் அட்ட வணை 7 ஆனது பசளை வட் டம் எவ்வாறு வேறுபடுகின்றது என்பதனைக் காண்பிக்கின்றது.

(தொடரும்....)

ஈஸ்வரன் சற்குணன்

# ஜனாதிபதி தேர்தலில் நான் தோற்கவில்லை சர்வதேசத்தால் தோற்கடிக்கப்பட்டேன்

## மகிந்த ராஜபக்ஷ விளக்கம்



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் நான் தோற்கவில்லை. சர்வதேச சக்திகளால் தோற்கடிக்கப்பட்டேன். இன்றும் எனக்கே மக்கள் செல்வாக்கு உள்ளது என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரசியல் அமைப்பின் மூலம் நாட்டினை துண்டாடும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அனைவரும் எம்முடன் கைகோர்க்க வேண்டும்.

இந்த அரசாங்கத்தை வீழ்த்தும் போராட்டத்தில் தலைமை தாங்க நாம் தயார் எனவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் மக்கள் சந்திப்பு நேற்று முன்தினம் ஹோமாகம பிரதேசத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட போதே, அவர் இதனைக் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் வென்று கொடுத்த சுதந்திரத்தை இந்த மூன்று ஆண்டுகளில் அரசாங்கம் நாசமாக்கியுள்ளது. நாம் முன்னெடுத்த அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் அனைத்துமே இன்று கைவிடப்பட்டுள்ளன. சர்வதேச நாடுகளுக்கு நிலங்களை விற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு எமது வளங்களை வழங்கியும் அதில் வரும் பணத்திலேயே அரசாங்கம் தனது செலவுகளை பார்த்துக்கொள்கின்றது. நாம் மோசடிகளை செய்தோம், களவுகளை செய்தோம், மக்களின் சொத்துக்களை சூறையாடினோம் என கூறி ஆட்சிக்கு வந்த நபர்கள் எம்மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் தொடர்பில் எந்தவொரு ஆதாரத்தையும் வெளிபடுத்த முடியாது தடுமாறி வருகின்றனர். மாறாக இவர்கள் பட்டப்பகலில் கொள்ளையடித்து வருகின்றனர்.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு மாதத்தில் மத்திய வங்கியில் கொள்ளையடித்தனர். இன்றுவரையில் குற்றவாளிக்கு தண்டனை வழங்க முடியாது குற்றவாளிகளை காப்பாற்றி வருகின்றனர். ஜனாதிபதி குற்றவாளியை தண்டிக்க விசாரணை நடத்தினால் பிரதமர் அதனை தடுக்கின்றார். உண்மையான குற்றவாளிகள் யார் என்பது இன்று மக்களுக்கு தெரிந்துள்ளது. எம்மை குற்றவாளிகள் எனக் கூறி எம்மை பழிவாங்க நினைக்கும் நபர்களே உண்மையான குற்றவாளிகள். ஆகவே இவர்களை வீழ்த்தும் போராட்டத்தை நாம் முன்னெடுக்க வேண்டும்.

எமது ஆட்சியில் இந்த நாடு தன்னிறைவு பொருளாதார வளர்ச்சி கண்ட நாடாக மாற்றம் பெற்றது. விஷம் இல்லாத உணவுகளை நாம் உற்பத்தி செய்தோம். விவசாயிகளுக்கு விஷம் இல்லாத உரங்களை வழங்கினோம். எனினும் இன்று அனைத்துமே மாற்றம் கண்டுள்ளது. அரிசி, பருப்பு என அனைத்துமே சர்வதேச நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றது. அனைத்தையும் சர்வதேச நாடுகளில் பெற்றுக்கொண்டு எமது விவசாயிகளின் வயிற்றில் அடிக்கும் வகையில் இந்த அரசாங்கம் செயற்படுவது கண்டிக்கத்தக்கது.

மறுபுறம் புதிய அரசியல் அமைப்பினை உருவாக்கி இந்த நாட்டினை துண்டாடும் சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வடக்கு-கிழக்கு இணைப்பு, அவர்களுக்கு அதியுச்ச அதிகாரங்கள் என அனைத்தும் வழங்கி இந்த நாட்டினை பிளவுபடுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். ஆகவே இந்த நாடு பிளவுபட வேண்டுமா அல்லது இணைந்து செயற்பட வேண்டுமா என்பதை இந்த நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும். ஆகவே இந்த நாடு பிளவுபடுவதை விரும்பாத சகலரும் இம்முறை தேர்தலில் எம்முடன் கைகோருங்கள்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி மக்களின் ஆதரவை பெற்று வருகின்ற நிலையில் எமது மக்கள் எதனை விரும்புகின்றனரோ அதையேநாமும் செய்ய வேண்டும் மக்கள் விரும்பாத எதையும் நாம் முன்னெடுக்க தயாராக இல்லை.

ஆகவே மக்களுக்காக தலைமை தாங்க நாம் தயாராகவே உள்ளோம். நான் கடந்த ஜனாதிபதி தேர்தலில் தோற்கவில்லை, சர்வதேச சக்திகளின் மூலமாக தோற்கடிக்கப்பட்டேன். ஆகவே இந்த நாட்டினை நேசிக்கும் மக்கள் தொடர்ந்தும் எம்முடன் உள்ளனர் என்பது மீண்டும் ஒருமுறை நிரூபணமாகி வருகின்றது. எனவே இந்த அரசாங்கத்தை வீழ்த்தும் பயணத்தில் அனைவரும் ஒன்றிணைவோம். இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் ஆதரவை பெற்று எமது பலத்தினை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இருந்தே உறுதிப்படுத்துவோம் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1288

Search for people, places and things

### பிரதாப்



ஆயிரம் தடவை
நான்
அழுதாலும்
ஆயிரம்
வழிகளில்
என்னைச்
சிரிக்க
வைப்பவன்
என் நண்பன்

### லக்ஷனா



உடலில்
சுமந்து
உயிரைப்
பகிர்ந்து
உருவம்
தந்த
தெய்வம்
அம்மா!

### அருட்செல்வி



பொருட்களைப்
பயன்படுத்திவிட்டு
தூக்கி வீசுவது
போல் மனிதர்களை
தூக்கி வீசாதீர்கள்.
மனிதர்களுக்கு
மனதுடன் கூடிய
உயிர்
இருக்கிறது

### கமலினி

ஹலோ யாராவது என்ர
காதலியைப் பார்த்தீங்களா



### கரிகரன்



சில
சந்தர்ப்பங்களில்
தான் ஒரு
சிலரின் வாழ்க்
கையில் நமக்
கான
இடம் என்ன
என்பது
புரிய வருகிறது

### கீர்த்தி



இனி
எப்படி
சார்ஜ்
குறையும்
என்று
பார்க்கிறேன்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# புறக்கணிப்புக்கு தயாராகும் தபால் துறை பணியாளர்கள்

(கொழும்பு)

இன்று தொடக்கம் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக தபால் தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது.

தபால் திணைக்களத்துக்கு புதியவர்களை இணைத்துக்கொள்வது தொடர்பில் கொள்கை ஒன்றை வகுப்பதாக வழங்கப்பட்ட வாக்குறுதி தொடர்ந்தும் நிறைவேற்றப்படாமல் இருப்பதற்கு எதிர்ப்பு தெரவித்து தொழிற்சங்க நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக தபால் தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டின் சகல மாவட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டு பிரதான நகரங்களில் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக முன்னணியின் ஏற்பாட்டாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

இதற்கு அமைவாக எதிர்வரும் 28ஆம் திகதிக்குப் பின்னர் ஏதாவது ஓர் தினத்தில் பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தபால் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படுமானால், வாக்காளர் அட்டை விநியோகம் உள்ளிட்ட பல விடயங்களுக்கு பாதிப்புக்களின் பொறுப்பை அரசாங்கம் ஏற்க வேண்டும் எனவும் தபால் தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது. (இ-7)




கேலிச்சித்திரம்

# ஐ.தே.கவுடன் இணையேன்

## கெஹலிய மறுப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியுடன் இணையப்போவதாக வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது என ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட சிலர் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து கொள்ளவுள்ளனர் என அமைச்சர் ஹரிசன் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அநுராதபுரத்தில் வைத்து தெரிவித்திருந்தார்.

அமைச்சர் ஹரிசனின் கருத்திற்கு பதிலளிக்கும் வகையிலேயே, கெஹலிய ரம்புக்வெல இதனை தெரிவித்துள்ளார்.

அத்துடன், வசீம் தாஜுதீனின் கொலைச்சம்பவம் தேர்தல் காலங்களின் போது எவ்வாறு பிரபல்யம் அடைகின்றதோ, அதனை போன்றே தனக்கு இவ்வாறான கருத்துக்களை கூறி தேர்தல் காலங்களில் சேறு பூச, தேசிய அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது என அவர் தெரிவித்தார். (இ-7)

# ஹெரோயினுடன் யாத்திரிகர்கள்

(கொழும்பு)

சிவனொளிபாதமலைப் பகுதியில் சட்டவிரோத போதைப் பொருட்கள் வைத்திருந்ததாக தெரிவித்து யாத்திரிகர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்றுமுன் தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.


மின்நேரிய அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் இருவர் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதை தொடர்ந்தே நல்லதண்ணி பொலிஸார் அவர்களை சோதனைக்குட்படுத்தியுள்ளனர்.

இதன்போது அவர்களிடமிருந்து 160 மில்லிகிராம் ஹெரோயின் போதை பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ஜப்பான் காணியமைச்சருடன் அமைச்சர் ஹக்கீம் சந்திப்பு

(கொழும்பு)

ஜப்பான் நாட்டின் காணி, அடிப்படை வசதிகள், போக்குவரத்து மற்றும் உல்லாசப் பயணத்துறை அமைச்சர் கெய்ச்சி இசீ (Keiichi Ishii) தலைமையிலான குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.



இவர்கள் நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீமை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது உத்தேச ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டே வடிகாலமைப்புத் திட்டம், கண்டி கழிவுநீர் முகாமைப்படுத்தல் திட்டம், களுகங்கை உவர்நீர் தடுப்பு மற்றும் நீர் வழங்கல் திட்டங்கள் தொடர்பாகவும், திருகோணமலை நகர மற்றும் துறைமுக அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் பல்வேறு முக்கிய நீர் விநியோகத் திட்டங்களுக்கும் சுகாதார பாதுகாப்பு, மற்றும் கழிவுநீர் முகாமைப்படுத்தல் முதலான திட்டங்களுக்கு ஜப்பான் உதவி வருவதோடு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் ஜப்பானுக்கு மேற்கொண்ட விஜயத்தின் மூலம் ஜப்பானினால் வழங்கப்படும் உதவிகள் விரைவுபடுத்தப்பட்டிருப்பதாகவும் இலங்கை ஜப்பான் நட்புறவு நீண்டகாலமாக இருந்து வருவதாகவும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். (இ-7)

# போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவருக்கும் பதவிகள்

## அமைச்சர் எஸ்.பி. உறுதி

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் தேசிய அபிவிருத்தித் திட்டங்களின் கிராமங்களின் பிரதிநிதியாக நியமிக்கப்படுவார்கள் என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

நாளைமறுதினம் 29 ஆம் திகதி ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு இதற்கான நியமனங்களை வழங்குவார்.

மேலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தற்போது மீண்டும் ஐக்கியமாகியுள்ளதாகவும் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார். (இ-7)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பில் நிதிமோசடி; இருவர் கைது!

(கொழும்பு)

கம்பஹா பகுதியில் வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பெற்று தருவதாக தெரிவித்து நிதி மோசடி செய்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடமிருந்து 61 கடவுச்சீட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இருவரும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பெற்று தருவதாக தெரிவித்தே இவ்வாறு நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# நீரில் மூழ்கி மூவர் பலி!

(கொழும்பு)

மாரவில - கடுனேரிய கடற்பகுதியில் குளிக்கச் சென்ற இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இவர்கள் இந்த விபத்துக்கு முகம் கொடுத்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இந்த சம்பவத்தில் மாரவில - கடுனேரி பகுதியைச் சேர்ந்த 35 மற்றும் 47 வயதான இருவரே பலியாகியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மாரவில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, வெலிகந்த - அசேலபுரம் பகுதி ஆற்றில் நீராடச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

வெல்லவாய - ஆனபல்லம பகுதியைச் சேர்ந்த 38 வயதான ஒருவரே இவ்வாறு பலியாகியுள்ளதாக தெரிவித்தனர். (இ-7)

# 850 குடும்பங்கள் வெளியேற்றம்

(கொழும்பு)

கொழும்பு காலிமுகத் திடல் பகுதியில் அமைந்துள்ள பேரவெவையை அண்மித்து சட்டவிரோதமான முறையில் தங்கியிருந்த சிலர் அப்பகுதியிலிருந்து அகற்றப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, குறித்த பகுதியில் தங்கியிருந்த 850 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அப்பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வெளியேற்றப்பட்டவர்களுக்கு மாற்று இடங்கள் வழங்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் ஜகத் முனசிங்க தெரிவித்தார். (இ-7).

# உரத்தட்டுப்பாட்டுக்கு மாத இறுதிக்குள் தீர்வு

(கொழும்பு)



நாட்டில் ஏற்பட்டுள்ள உரத்தட்டுப்பாட்டுக்கு இந்த மாத இறுதிக்குள் தீர்வு பெற்று கொடுக்கப்படும் என விவசாய துறை அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் - தம்புத்தேகம பிரதேசத்தில் நேற்று இடம் பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் வைத்து அவர் இதனை தெரிவித்தார். எதிர் வரும் 30 ஆம் திகதி உரத்தை ஏற்றிய கப்பல் ஒன்று நாட்டுக்கு வரவுள்ளது. அதன் பின்னர் சகல மாவட்டங்களுக்கும் தலா 3000 மெற்றிக்தொன் உரம் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

# 'தலபூட்டுவா' கொலை சந்தேகநபர்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைப்பு

(கொழும்பு)

கல்கமுவே "தல பூட்டுவா" யானையை கொலை செய்தமை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள 9 சந்தேக நபர்களை எதிர்வரும் ஜனவரி 9ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையில் மஹவை மேலதிக நீதவான் மற்றும் மேலதிக மாவட்ட நீதவான் ரசிக மல்லவாரச்சி மூலம் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த கொலைக்காக பயன்படுத்தியதாக சந்தேகிக்கப்படும் துப்பாக்கியை அரசாங்க இரசாயன பரிசோதகருக்கும் கொலை செய்யப்பட்ட யானையின் சதை பகுதியை டீ.என்.ஏ. பரிசோதனைக்காக பொரளை ஜீன்டெக் நிறுவனத்திற்கும் வழங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களின் தொலைபேசி உரையாடல் பதிவுகளை இரகசிய பொலிஸாருக்கு வழங்குமாறு சம்பந்தப்பட்ட தொடர்பாடல் நிறுவனகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ரஜரட்டை பல்கலைக்கழகத்தின் மிகிந்தலை வளாகம் திறப்பு

(கொழும்பு)

ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மிகிந்தலை வளாகம் கல்வி நடவடிக்கைகளுக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. நேற்று முதல் குறித்த வளாகம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் வேகமாக பரவிய வைரஸ் தொற்று காரணமாக மறு அறிவித்தல் வரை கால வரையறையின்றி மூடப்பட்டது.

இந்நிலையில் வைரஸ் தொற்று தொடர்பில் முழுமையான ஆய்வு நிறைவு பெற்றுள்ளதாகவும், மாணவர்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை என வைத்தியர்களால் அறிவிக்கப்பட்டுள்ளமையைத் தொடர்ந்து மீண்டும் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக விஞ்ஞான பீடத்தின் நிறைவு பெறாத பரீட்சைகள் இன்று முதல் நேர அட்டவணைக்கு அமைவாக நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வாக்காளர் இடாப்பில் பெயர்கள் இல்லாதோர் வாக்களிக்க முடியாது



(கொழும்பு)

நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வாக்காளர் இடாப்பில் வாக்காளருக்கான பெயர் இடம்பெறாதோர் வாக்களிக்க முடியாதென்று தேர்தல்கள் மேலதிக ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்தார்.

மலையகம் ,வடக்கு,கிழக்கு உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்தோர் தொழில் நிமித்தம் காரணமாக கொழும்பு உள்ளிட்ட நகரப்பகுதிகளில் வசித்து வருகின்றனர்.

இவர்கள் முன்னர் பதிவு மேற்கொண்டிருந்த வாக்காளர் இடாப்பில் போனறே இம்முறை வாக்காளர் இடாப்பில் பதிவுகளை மேற்கொள்ள பலருக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. தற்காலிகமாக வாடகை வீடுகளில் இவர்கள் வசித்து வருகின்றனர்.

வாடகை வீடுகளின் முகவரியின் அடிப்படையில் இம்முறை வாக்காளர் இடாப்பில் பதிவுகளை மேற்கொள்வதற்கு வாடகை வீட்டு உரிமையாளர்கள் இடமளிக்காமையினால் பதிவுகளை மேற்கொள்ள முடியாமல் போனது.

இதனால் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலில் இவர்களின் பெயர்ப்பதிவு இடம்பெறவில்லை.

இவ்வாறானோர் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வாக்களிப்பது தொடர்பாக கேட்ட போதே மேலதிக ஆணையாளர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# குற்றச்சாட்டை நிரூபித்தால் பதவியை தூக்கியெறிவேன்

## சுமந்திரன் சவால்



கொழும்பில் அரசாங்கத்தினால் எனக்கு சொகுசு வீடு வழங்கப்பட்டுள்ளதாக சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறுகின்றார். மற்றுமொரு தரப்பினர் நான் அமைச்சராகி விட்டதாக கூறுகின்றனர்.

இவ்வாறு எனக்கு எதிராக கருத்துக்களை பரப்புவோருக்கு நான் பகிரங்க சவால் விடுகின்றேன். இந்த இரண்டு குற்றச்சாட்டுக்களில் எதையேனும் ஒன்றை நிரூபித்தால் எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை தூக்கி எறிகின்றேன் என தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலம் நெருங்குவதால் தோல்வியடைந்து விடுவோமோ என்ற அச்சத்தினால் சிலர் பொய்களை அவிழ்த்து விடுகின்றனர்.

அமைச்சரானால் உடனடியாக வர்த்தமானியில் அறிவிக்கப்படும். ஆனால் இங்கு அப்படி ஒன்றும் இடம்பெறவில்லை.

ஆகவே எந்த அடிப்படையில் எனக்கு அமைச்சுப்பதவி கிடைத்துள்ளதாக கூறுகின்றார்கள் என கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை, கொழும்பு - 7இல் வெறும் 135 ரூபாய் வாடகைக்கு அரசாங்கம் எனக்கு வீடு கொடுத்திருப்பதாக ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கின்றார்.

எனக்கு எதிரான இந்த குற்றச்சாட்டுக்களில் ஏதேனும் ஒன்றை நிரூபித்தாலும் எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை தூக்கி எறிகின்றேன் என சவால் விடுத்துள்ளார்.

இதேவேளை, சுமந்திரனுக்கு அமைச்சுப்பதவி ஒன்று கிடைத்துள்ளதாக அண்மையில் கருணா ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரனை அமைச்சராக்கி அரச ஊடகம் ஒன்று அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சுனாமியால் பலியானோருக்கு கடலூர் கடலில் பால் ஊற்றி அஞ்சலி செலுத்திய மீனவர்கள்







(கடலூர்)

சுனாமியால் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு கடலூர் தேவனாம்பட்டினத்தில் நேற்று நடந்தது. பலியான தமது உறவினர்களுக்கு கடலில் பாலை ஊற்றி மீனவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி இந்தோனேசியாவிலுள்ள சுமாத்திரா தீவில் கடலுக்கு அடியில் பூகம்பம் ஏற்பட்டது.

இதனால் சுனாமி எனும் ஆழிப்பேரலை எழுந்து கடற்கரையோர பகுதிகளை சூறையாடியது. இந்தோனேசியா, இலங்கை, இந்தியா உட்பட பல்வேறு நாடுகளில் கடற்கரையோரம் வசித்து வந்த 2 இலட்சத்து 30 ஆயிரம் பேர் பலியாகினர். தமிழகத்திலும் சுனாமியால் பல ஆயிரம் பேர் பலியாகினர்.

கடலூர் மாவட்டத்தில் தேவனாம்பட்டினம், தாழங்குடா, சோனாங்குப்பம், சொத்திக்குப்பம், அக்கரைக்கோரி, எம்.ஜி.ஆர். திட்டு, பில்லுமேடு உள்ளிட்ட பல்வேறு மீனவ கிராமங்களை சுனாமி புரட்டிப் போட்டது.

மீனவர்களின் 7 ஆயிரம் கட்டுமரங்கள், பைபர் மற்றும் விசைப்படகுகள், 4 ஆயிரம் மீன் பிடிபடகுகள், 650 ஹெக்டேர் விவசாய நிலங்கள், 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் முற்றிலும் சேதமடைந்தன.

தேவனாம்பட்டினத்தில் நடைபயிற்சிக்கு வந்தவர்களை கடல் அலை இழுத்து சென்றது. சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஏராளமானோர் பலியாகினர்.

இதேபோல் கடலூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் சுனாமியின் கோரத் தாண்டவத்தில் 610 பேர் பலியாகினர்.

எங்கும் சோகமயமாக காட்சியளித்தது. சுனாமி பேரலை தாக்கி 13 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில் தமிழக கடலோரங்களில் அதன் சோக நினைவுகள் இன்றும் அகலவில்லை.

இந்நிலையில் சுனாமியால் பலியானவர்களுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி கடலூர் தேவனாம்பட்டினத்தில் நேற்று நடந்தது. தேவனாம்பட்டினம் அரசு கலைக்கல்லூரி அருகே மீனவர்கள் திரண்டனர். அங்கிருந்து அவர்கள் கடற்கரைக்கு மௌன ஊர்வலம் சென்றனர்.

பூக்கூடைகளையும், பால் குடங்களையும் ஏந்தியபடி சென்றனர். நெஞ்சத்தில் சோகத்தையும், கண்களில் கண்ணீரையும் சுமந்தபடி ஆண்கள், பெண்கள் என ஏராளமானோர் இதில் கலந்து கொண்டனர்.

பின்னர் சுனாமியில் பலியான தங்கள் உறவினர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கடலில் பாலை ஊற்றினர். கூடைகளில் கொண்டு வந்த பூக்களை கடலில் தூவினர்.

கடற்கரையில் 5 நிமிடம் மௌனமாக அமர்ந்திருந்தனர். சுனாமியில் பலியான தங்களது குடும்பத்தினரை நினைத்து கற்பூரத்தை ஏற்றி வழிபட்டனர்.

இதையடுத்து சுனாமியில் இறந்தவர்களுக்கு நினைவாக உருவாக்கப்பட்ட நினைவுத் தூண் உள்ள பகுதிக்கு சென்று மலர் வளையம் வைத்து கண்ணீர் சிந்தினர்.

மீனவர்கள் மட்டுமல்லாமல் பொதுமக்கள், அரசியல் கட்சியினர், தொண்டு நிறுவனத்தினர் உட்பட ஏராளமானோர் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர். மாவட்ட நிர்வாகம் சார்பிலும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இறந்தவர்களை நினைத்து பெண்கள் ஒப்பாரி வைத்து கதறித்துடித்தனர்

சுனாமி நினைவு தினத்தை முன்னிட்டு கடலூர் மாவட்ட மீனவர்கள் நேற்று மீன் பிடிக்க செல்லவில்லை. இதனால் படகுகள் அனைத்தும் கடற்கரையோரம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

சுனாமியில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் கடலூர் மாவட்டத்தில் பலர் தங்களது வீடுகளில் பலியானவர்களின் படத்தை வைத்து விளக்கேற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

13 ஆண்டுகளுக்கு முன்பு சுனாமி எங்களை சூறையாடியது. இன்று ஒக்கி புயல் வேதனையை தந்துள்ளது. எங்களுக்கு விடிவு காலம் எப்போது?" என்பதை இறைவன்தான் கூற வேண்டும் என்றனர்.

கடல் மேல் பிறக்க வைத்தாய்... எங்களை கண்ணீரில் மிதக்க வைத்தாய்... என்று எம்.ஜி.ஆர். பாடிய பாடல் தான் நினைவுக்கு வருகிறது.

சுனாமி நினைவு தினத்தையொட்டி நேற்று கன்னியாகுமரி கடற்கரையில் உள்ள சுனாமி நினைவு பூங்காவில் கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் அஞ்சலி செலுத்தினார்.

மணக்குடி, கொட்டில்பாடு, குளச்சல் பகுதிகளில் உள்ள கல்லறை தோட்டங்களில் ஏராளமான பெண்கள் மெழுகுவர்த்தி ஏற்றியும், மலர்களை தூவியும் அஞ்சலி செலுத்தினர். (இ-8)

# சிறுவர் அரங்கம்

## பூனை பிரபு

முன்னொரு காலத்தில் உழவன் ஒருவன் பூனை ஒன்றை வளர்த்து வந்தான். கிழடாகிப் போன அந்தப் பூனையால் எலிகளைப் பிடிக்க முடியவில்லை.

இந்தப் பூனையால் எந்தப் பயனும் இல்லை. இதைக் காட்டில் விட்டு விடுவோம் என்று நினைத்தான் அவன். அப்படியே அதைக் காட்டில் விட்டுவிட்டு வந்தான்.

அங்கே உலவிக் கொண்டிருந்தது பூனை. பெண் நரி ஒன்று அதைப் பார்த்தது.

"ஐயா! தாங்கள் யார்? இப்பொழுது தான் தங்களை முதன் முறையாகப் பார்க்கிறேன்" என்று கேட்டது அது.

"நான் பூனை பிரபு" என்று கம்பீரமாகச் சொன்னது பூனை.

அதன் அழகிலும் கம்பீரத்திலும் மயங்கியது நரி. "ஐயா! என்னைத் திருமணம் செய்து கொள்ளுங்கள். உண்மையுள்ள மனைவியாக நான் நடந்து கொள்வேன். உங்கள் விருப்பங்களை எல்லாம் நிறைவேற்றி வைப்பேன்" என்றது.

பூனையும் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டது. இரண்டிற்கும் திருமணம் நடந்தது.

தான் சொன்னபடியே நடந்தது நரி. தனியே சென்று கோழிக் குஞ்சுகளைப் பிடித்து வரும் பூனைக்கு உணவைக் கொடுக்கும். சில சமயம் அது பட்டினியாகவே கிடக்கும்.

ஒரு நாள் உணவு தேடச் சென்றது நரி. வழியில் அதை முயல் ஒன்று சந்தித்தது.

"நண்பனே! உன் வீட்டிற்கு நான் வரலாம் என்று இருக்கிறேன். எப்பொழுது வருவது?" என்று கேட்டது முயல்.

"என் வீட்டிற்கு வரும் எண்ணத்தை விட்டுவிடு. அங்கே பூனை பிரபு இருக்கிறார். அவர் கொடூரமானவர். உன்னைக் கண்டால் ஒரு நொடியில் கொன்று தின்று விடுவார்" என்றது நரி.

அங்கிருந்து ஓடிய முயல் வழியில் ஓநாயைச் சந்தித்தது. "உனக்குச் செய்தி தெரியுமா? நரியின் வீட்டில் பூனை பிரபு இருக்கிறாராம். அவர் மிகக் கொடூரமானவராம். யாரையும் கொன்று தின்று விடுவாராம்" என்றது அது.

இந்த விந்தையான செய்தியைப் பன்றியிடம் சொன்னது ஓநாய். பன்றி இதைக் கரடியிடம் சொன்னது.

முயல், ஓநாய், பன்றி, கரடி நான்கும் ஒன்றாகக் கூடின.

"எப்படியாவது பூனை பிரபுவை



நாம் பார்க்க வேண்டுமே?" என்றது கரடி.

"உயிரின் மீது உனக்கு ஆசை இல்லையா?" என்று கேட்டது முயல்.

"எனக்கு நல்ல வழி ஒன்று தோன்றுகிறது. நாம் நால்வரும் சேர்ந்து பெரிய விருந்திற்கு ஏற்பாடு செய்வோம். பூனை பிரபுவையும் நரியையும் விருந்திற்கு அழைப்போம்" என்றது ஓநாய்.

எல்லோரும் இதற்கு ஒப்புக் கொண்டனர்.

மேசையின் மேல் விதவிதமான உணவுப் பொருட்கள் பரிமாறப்பட்டன.

"யார் சென்று பூனை பிரபுவை அழைப்பது?" என்ற சிக்கல் எழுந்தது.

"எனக்கு தூங்கி வழிகின்ற முகம். நான் சென்று எப்படி அழைப்பேன்?" என்று மறுத்தது பன்றி.

"எனக்கு அதிக வயதாகி விட்டது. உடல் நலமும் சரியில்லை" என்றது ஓநாய்.

"ஏதேனும் ஆபத்து என்றால் என்னால் வேகமாக ஓட முடியாது" என்றது கரடி.

மூன்றும் முயலைப் பார்த்து, "விருந்துச் செய்தியை நீதான் சொல்லிவர வேண்டும்" என்றன.

முயல் நடுங்கிக் கொண்டே நரியின் வீட்டை அடைந்தது. நீண்ட நேரம் வெளியிலேயே காத்திருந்தது.

வெளியே வந்த நரி முயலைப் பார்த்து வியப்பு அடைந்தது.

"பன்றி, ஓநாய், கரடி மூன்றும் என்னை இங்கே அனுப்பின. நால்வரும் சேர்ந்து விருந்திற்கு ஏற்பாடு செய்துள்ளோம். உங்களுக்காகவே இந்த விருந்து. நீங்களும் பூனை பிரபுவும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும்" என்றது முயல்.

"நல்லது. நான் விருந்திற்கு வருகிறேன். பூனை பிரபுவும் என்னுடன் வருவார். நாங்கள் வரும் போது நீங்கள் நால்வரும் எங்காவது ஒளிந்து கொள்ளுங்கள். பூனை பிரபு உங்களைப் பார்த்தால் நீங்கள் செத்தீர்கள். விருந்து எங்கே நடக்கிறது?" என்று கேட்டது நரி.

இடத்தைச் சொல்லிவிட்டு ஓட்டம் பிடித்தது முயல். தன் நண்பர்களைச் சந்தித்து நடந்ததைச் சொன்னது அது.

பயந்து போன நான்கும் என்ன செய்வது என்று சிந்தித்தன.

"நான் அந்த மரத்தில் ஏறிக் கொள்கிறேன்" என்றது கரடி.

"அந்தப் புதரில் நான் ஒளிந்து கொள்கிறேன்" என்றது ஓநாய்.

"உன் அருகிலேயே நானும் பதுங்கிக் கொள்கிறேன்" என்றது முயல். "அடர்ந்த அந்த மரங்களுக்குப் பின்னால் நான் மறைந்து கொள்கிறேன்" என்றது பன்றி.

பூனை பிரபுவும் நரியும் வரும் ஓசை கேட்டது. நான்கும் பதுங்கிக் கொண்டன. பலவிதமான உணவுப் பொருட்களைப் பார்த்தது பூனை. அதற்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. "மியாவ், மியாவ்" என்று கத்திக் கொண்டே சாப்பிடத் தொடங்கியது.

(தொடரும்...)

## 12.2017 27 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1703- இங்கிலாந்துக்கு வைன்களை இறக்குமதி செய்வதற்கு போர்த்துக்கீசருக்கு தனியுரிமை வழங்கும் ஒப்பந்தம் இங்கிலாந்துக்கும் போர்த்துக்கல்லுக்கும் இடையில் ஏற்பட்டது.
- 1836- இங்கிலாந்தின் வரலாற்றில் மிக மோசமான புயல் சசெக்ஸ் நகரில் இடம்பெற்றது. 8 பேர் கொல்லப்பட்டனர்.
- 1864- இலங்கையின் முதலாவது தொடருந்து சேவை கொழும்புக்கும், அம்பேபுசைக்கும் இடையில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1911- இந்தியாவின் தேசியப் பண் ஜன கண மன முதன்முதலில் கொல்கத்தா நகரில் இசைக்கப்பட்டது.
- 1915- யாழ்ப்பாணத்தின் முதல் பொது நூலகம் "நகுலேசுவரா நூல் நிலையம்" கீரிமலையில் திறக்கப்பட்டது.
- 1922- ஜப்பானின் ஹோஷோ உலகின் முதலாவது விமானம் தாங்கிக் கப்பலாக பாவிக்கப்பட்டது.
- 1923- ஜப்பானிய மாணவன் ஒருவன் இளவரசர் ஹிரோஹிட்டோவைக் கொல்ல முயற்சித்தான்.
- 1968- சந்திரனுக்கான முதலாவது மனித விண்வெளிப்பயணக் கப்பலான அப்பல்லோ 8 பாதுகாப்பாக பசிபிக் கடலில் இறங்கியது.
- 1978- ஸ்பெயின் 40வருட கால சர்வாதிகார ஆட்சியின் பின்னர் ஜனநாயக நாடானது.
- 2000- யாழ்ப்பாணம், தென்மராட்சி மிருசுவிலில் தமது வீடுகளைப் பார்வையிடச் சென்ற எட்டு பொதுமக்கள் இலங்கைப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 2002- செச்சினியாவில் மொஸ்கோ சார்பு அரச தலைமையகத்தில் இரண்டு குண்டுகள் வெடித்ததில் 72 பேர் கொல்லப்பட்டு 200 பேர் காயமடைந்தனர்.
- 2007- பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ ராவல்பிண்டியில் தற்கொலைக் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார்.

### பிறப்புகள்

- 1571- யோகான்னசு கெப்லர், செருமானியக் கணிதவியலாளர், வானியலாளர் (இ. 1630)
- 1945- டேவிட் ராஜேந்திரன், ஈழத்து வானொலி, மேடை நாடகக் கலைஞர் (இ. 2013)
- 1965- சல்மான் கான், இந்திய நடிகர்

### இறப்புகள்

- 1834- சார்லஸ் லாம், ஆங்கிலேயக் கட்டுரையாளர் (பி. 1775)
- 1914- சார்லஸ் மார்ட்டின் ஹால், அமெரிக்க வேதியியலாளர், பொறியியலாளர் (பி. 1863)
- 1923- அலெக்சாந்தர் கஸ்டவ் ஈபெல், ஈபெல் கோபுரத்தை வடிவமைத்த பிரான்சியக் கட்டடக் கலைஞர் (பி. 1832)
- 1976- வ.நல்லையா, இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (பி. 1909)
- 1999- சாரதாம்பாள், இலங்கைக் கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்ட இலங்கைப் பெண் (பி. 1970)
- 2007- பெனாசிர் பூட்டோ, பாகிஸ்தானின் 11 ஆவது பிரதமர் (பி. 1953)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 250 | 180 | 100 | 160 | 200 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 50 | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 250 | 250 | 300 | 350 |
| தக்காளி | 160 | 200 | 150 | 100 | 160 | 160 |
| [illegible] | 50 | 30 | 40 | 60 | 40 | 50 |
| கோவா | 120 | 140 | 80 | 120 | 120 | 160 |
| கரட் | 140 | 220 | 140 | 160 | 200 | 180 |
| பூசணி | 80 | 60 | 40 | 50 | 30 | 60 |
| புடோல் | 100 | 100 | 60 | 60 | 120 | 140 |
| வாழைக்காய் | 80 | 100 | 65 | 70 | 120 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 350 | 400 | 400 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 120 | 250 | 160 | 180 |
| பாகற்காய் | 350 | 400 | 200 | 280 | 200 | 300 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 100 | 100 | 160 | 180 |
| வற்றாளைக்கிழங்கு | 60 | 100 | 40 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 120 | 200 | 120 | 160 | 140 | 200 |
| [illegible] | 250 | 300 | 200 | 240 | 250 | 240 |
| லீக்ஸ் | 200 | 250 | 140 | 160 | 200 | 240 |
| கறிமிளகாய் | 250 | 250 | 250 | 280 | 280 | 300 |
| முருங்கைக்காய் | - | - | - | - | - | - |
| போஞ்சி | 200 | 250 | 160 | 180 | 200 | 240 |
| [illegible] | 160 | 150 | 150 | 150 | 110 | 180 |
| கீரை - பிடி | 40 | 50 | 50 | 70 | 60 | 50 |
| தேசிக்காய் | 50 | 20 | 40 | 40 | 20 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 120 | 70 | 75 | 75 | 100 |
| [illegible] | 220 | 300 | 200 | 300 | 300 | 500 |
| [illegible] | 350 | - | 300 | - | - | - |
| [illegible] | 100 | - | 60 | 100 | 120 | 140 |
| [illegible] | 50 | - | 40 | 50 | 40 | 40 |
| [illegible] | 15 | - | 15 | 20 | 25 | 35 |
| [illegible] | 80 | - | - | - | 120 | - |

பேச்சில் இனிமை, வன்மையில் தெளிவு, செயலில் உறுதி என்ற மூன்றும் உள்ளவர் எதையும் சாதிக்கலாம். - பாரதி

வலம்புரி
T.P: 021 567 1530
website: www.valampurii.lk

## கம்பவாரிதிக்கு ஒரு மடல்

மதிப்புக்குரிய கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களுக்கு அன்பு வணக்கம். தாங்கள் எழுதிய கட்டுரையை வாசித்தேன். எரிதணலாய் வெந்த மனதுக்கு குளிர்ந்த நீராய் அது இருந்தது.

இது நமக்கு மட்டுமல்ல. இலட்சக்கணக்கான தமிழ் மக்களுக்கும் ஆறுதல் கொடுத்தது. அதற்காகத் தங்களுக்கு முதற்கண் நன்றி கூறிக் கொள்கின்றோம்.

இன்று நம்மிடம் இருக்கக்கூடிய பெரும் பஞ்சம் துணிந்து பேசுவதற்கு ஆளில்லாமைதான். எந்த அநியாயம் நடந்தாலும் ஒன்றில் மௌனமாக இருப்பது அல்லது அநியாயத்துக்கு ஆதரவு தெரிவித்துவிட்டு தப்பிப் பிழைப்பது என்பதே எமது இன்றைய நிலைமையாயிற்று.

எதிர்க்காமல் - கருத்துரைக்காமல் - ஏசினால் அதனைப் பொருட்படுத்தாமல் இருந்துவிட்டு போகின்றவர்களுக்கு வாழத் தெரிந்தவர்கள் என்று நாம் பட்டம் வழங்குகின்ற காலசூழ்நிலையில், அரசியல் தலைமைகள் எப்படியும் நடந்து கொள்ள முடியும் என்ற துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது.

இத்தகைய சூழ்நிலை விடுதலைப் புலிகளின் காலத்திலும் இருந்தது என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

விடுதலைப் புலிகளின் தலைமை சில இடங்களில் தவறுவிட்டபோது அதைச் சுட்டிக்காட்டுவதற்கு நம் புத்திஜீவிகள் முன்வரவில்லை. விமர்சித்தால், ஆலோசனை கூறினால் புலிகள் சுட்டுவிடுவார்கள் என்ற பயம்தான் தவறுகளைச் சுட்டிக்காட்ட முடியாமைக்குக் காரணம் என்று கூறுவோரும் உளர்.

எனினும் உண்மை அதுவன்று. விமர்சிப்பவர்களை, சரியான கருத்துக்களை முன்வைப்பவர்களை விடுதலைப் புலிகளிடம் போட்டுக் கொடுக்கின்றவர்கள் அதிகமாக இருந்ததால் தான் துணிந்து கருத்துரைக்க வல்லவர்கள் ஒதுங்கிக் கொண்டனர்.

இவை முடிந்த கதை. முடிந்ததை மீளவும் கூறுவது கால மினக்கேடு என்பதால், அதனை தவிர்க்க சமகால சூழ்நிலை பற்றி நோக்குவதே பொருத்துடையது.

அந்த வகையில் தாங்கள் கூறியதுபோல தமிழ் அரசியல் தலைமையில் இருக்கக்கூடிய சர்வாதிகாரப் போக்கு எல்லை கடந்து விட்டது.

தமிழ் மக்களுக்கான அரசியல் என்பது மாறி இப்போது ஒரு சிலரின் சொந்த இலாபத்துக்கான அரசியல் என்பதாக நிலைமை மாறிவிட்டது.

இந்த இடத்தில் தாங்கள் துணிந்துரைத்த கருத்துக்கள் தமிழ் மக்களிடையே ஓர் உத்வேகத்தைத் தந்துள்ளது.

மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ என்று சோழ மன்னனைப் பார்த்து கம்பன் கேட்டது போல தாங்கள் எழுதிய கட்டுரையின் கனதி இருந்தது கண்டு புளகாங்கிதம் கொள்ளாமல் இருக்க முடியாது.

அதேவேளை அரசியல் தலைவர்களின் குற்றங்களை துணிந்து உரைத்த தாங்கள் தேர்தல் காலங்களில் மக்களுக்குச் சரியானவர்களை அடையாளம் காட்டவும் முன்வர வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

நம்மைப் பொறுத்தவரை இன்றைய சூழலில் தமிழ் மக்களுக்குப் பொருத்தமான தலைவர் என்றால் அது வடக்கின் முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரனாகமட்டுமே இருக்கமுடியும்.

அரசியல் என்ற சமுத்திரத்தில் அவரின் பயணம் புதியதாக இருந்தாலும் அவரிடம் இருக்கக்கூடிய நேர்மையும் நீதியும் ஆத்ம பலமும் பயணத்துக்கு நிச்சயம் வழிகாட்டும் என்பதால், ஒரு புதிய அரசியல் பரிணாமத்தை அனைத்து தமிழ் அரசியல்வாதிகளின் ஒத்துழைப்போடு உருவாக்க வேண்டும். இதுவே எல்லாவற்றுக்கும் பொருத்தமான நடவடிக்கையாகும்.

இது விடயத்தில் தங்களின் துணிச்சல் மிகுந்த-தகுதிவாய்ந்த கருத்துக்களும் அறைகூவல்களும் நிச்சயம் தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்கக்கூடிய அரசியல் தலைமையை உருவாக்கும் என்பதால், அதற்கு உங்கள் வசிபங்கை வழங்க முன்வாருங்கள்.

# கப்பல் மூலம் சிதம்பரம் செல்வதற்குரிய பயண ஏற்பாடுகளை துரிதப்படுத்துங்கள்

## இந்திய, இலங்கை அரசுகளிடம் இந்து அமைப்புக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

திருவாதிரை தினத்தன்று கப்பல் மூலம் சிதம்பரத்துக்கு செல்வதற்குரிய பயண ஏற்பாடுகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு இந்து அமைப்புக்கள் இலங்கை, இந்திய அரசுகளிடம் கோரிக்கை முன்வைத்துள்ளன.

திருவாதிரை தினத்தன்று சிதம்பரத்துக்கு சென்று வழிபடுவதற்காக கப்பல் மூலம் காங்கேசன்துறையிலிருந்து பயணிப்பதற்கு இந்திய, இலங்கை அரசுகள் ஒப்புதல் வழங்கியுள்ளது.

அந்தவகையில் இலங்கை, இந்திய அரசுகளுக்கு இலங்கை இந்துக்கள் சார்பாக நன்றியை தெரிவிக்கவும், கப்பல் ஏற்பாடுகளைத் துரிதப்படுத்துமாறு கோரிக்கை முன்வைக்கவும் இந்து அமைப்புக்கள் ஒன்றிணைந்து வடமாகாண ஆளுநரின் செயலர் இ.இளங்கோவனையும் யாழ்.இந்தியத் துணைத் தூதர் ஆ.நடராஜனையும் நேற்று அவரவர் அலுவலகங்களில் சந்தித்து கலந்துரையாடியிருந்தன.

இது தொடர்பில் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தம் கருத்து தெரிவிக்கையில்,

திருவாதிரை தினத்தன்று சிதம்பரம் நடராசப் பெருமான் கோயிலுக்கு ஈழத்துச் சைவர்கள் சென்று வழிபடுவதற்கு காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து தமிழகத் துறைகளுக்குக் கப்பல் வழி செல்லும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு கடந்த 2016ஆம்ஆண்டு வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரேயிடம் கேட்டுக் கொண்டேன்.

அதனடிப்படையில் கடந்த 20.12.2016 இல் இலங்கை அரசின் அனுமதி கிடைத்தது. பின்னர் இலங்கை அரசு இந்திய அரசிடம் கேட்டுக்கொண்டதற்கு அமைய கடந்த 21.12.2017 இல் இந்திய அரசின் ஒப்புதல் இலங்கை அரசுக்கு கிடைத்துள்ளது.

திருவாதிரை தினமான ஜனவரி இரண்டாம் திகதிக்கு இன்னும் ஒருவாரகாலமே உள்ளது என்று அதில் பல நாட்கள் விடுமுறை நாட்கள். எனவே இன்னமும் கப்பல் ஏற்பாடுகள் முடிவாகவில்லை.

கப்பல் சேவை ஆரம்பித்தால் அடியார்கள் பயண ஆயத்தங்கள் செய்ய வேண்டிய தேவை உள்ளது. கடவுச் சீட்டு, இந்திய நுழைவுரிமம் (விசா), இந்தியாவின் செலவுக்குரிய தொகை, கப்பல் கட்டணம் என்பன ஏற்பாடு செய்ய வேண்டிய தேவை உள்ளது.

எனவே பயண ஏற்பாடுகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு மேற்குறித்த அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். மேலும் இலங்கைக் கடவுச் சீட்டு வைத்திருப்போர் உடனடியாக இணையவழியாக இந்திய நுழைவுரிமத்துக்கு (விசா) விண்ணப்பித்து ஆயத்தமாக இருக்குமாறும் இலங்கை அரசால் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவித்தல் கிடைத்தவுடன் சிதம்பரத்துக்கு பயணிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இச் சந்திப்பில் மறவன்புலவு க. சச்சிதானந்தம் உள்ளிட்ட யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை, இந்து சமயப் பேரவை, கொழும்பு சிவத்தொண்டர் பேரவை, மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் திருப்பணிச் சபை ஆகியவற்றின் செயலாளர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். (இ-9)

# தேர்தல் பிரசார நடவடிக்கைகள் பெப்ரவரி 7ம் திகதியுடன் நிறைவுக்கு

## மகிந்த தேசப்பிரிய அறிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் எதிர்வரும் பெப்ரவரி 7 ஆம் திகதி நள்ளிரவுக்கு பின்னர் நடை என தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

நள்ளிரவிற்குப் பின்னர் தேர்தல் சட்டங்களை மீறும் வேட்பாளர்களுக்கும் பொலிஸ் பிணை வழங்கப்படமாட்டாது என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

தொகுதிவாரி மற்றும் விகிதாசார முறைகொண்ட கலப்புத் தேர்தல் முறைபடியான உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நாடு தழுவிய ரீதியில் நடைபெறவுள்ளது. 276 பிரதேச சபைகள், 24 மாநகர சபைகள், 41 நகரசபைகளுமாக 341 உள்ளூராட்சி மன்றங்களுக்காக நடைபெறவுள்ள இத்தேர்தலினூடாக 8,356 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

அத்துடன் குறித்த தேர்தலுக்காக நாடு தழுவிய ரீதியில் 13,000 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதுடன் பெரும்பாலான வாக்களிப்பு நிலையங்களிலேயே வாக்கெண்ணும் பணிகளை முன்னெடுப்பதற்கு சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதேவேளை, தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் கடந்த நாட்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த திடீர் சுற்றிவளைப்புகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதுடன் சட்ட மீறல்களில் ஈடுபடுவோரைக் கைதுசெய்து அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

நீதியானதும், நியாயமுமான தேர்தலை நடத்துவதற்கு சட்ட வரம்பிற்குட்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் பொலிஸ் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### இறைவனை அடைய பல வழிகள்



+ பால்யபருவத்தில் மணமகன், மணமகள் பொம்மைகள் வைத்து விளையாடுவர். ஆனால், திருமணம் செய்தவர்கள் பொம்மைக் கல்யாணம் விளையாடும் குழந்தைகளை பரிகசிக்க வேண்டியதில்லை.

+ பொம்மைக் கல்யாணம் என்பது விக்ரக ஆராதனை போன்றது. ஈஸ்வர அனுபூதி வாய்த்தவர்கள் விக்ரக வழிபாட்டை விட்டு விடுவதில் தவறொன்றுமில்லை. மாடிக்கு சென்றடைவது நமது குறிக்கோள் என்றால் அதற்கு பலவழிகள் உள்ளன.

+ கல்லால் அமைந்த படியின் மீது ஏறிச் செல்லலாம். மரப்படியிலும் அதை அடைய முயற்சிக்கலாம். ஏணியிலும் ஏறலாம். மூங்கிலால் சாரம் போட்டும் மாடியை அடையலாம். அதுபோல, கடவுளும் நமக்கு எட்டாத உயரத்தில் இருந்தாலும் அவரை அடைய வழிமுறைகள் பல உள்ளன.

+ எந்த வழிமுறையைப் பின்பற்றினாலும் விடாமுயற்சியை மட்டும் விட்டுவிடக்கூடாது. சிறுகுருவி கடவுளை வழிபடுவது என்பது விடியற்பொழுதிற்கு நிகரானது. விடியற்காலையைத் தொடர்ந்து சூரியோதயம் உண்டாவதைப் போல, அருள்நாட்டத்தைத் தொடர்ந்து கடவுள் காட்சியைக் காணலாம்.

+ மனதை ஈசனிடம் போகும் பண்ணுவதுதான் குறிக்கோள். எக்காரணத்தை முன்னிட்டும் ஈஸ்வர சிந்தனை மனதைவிட்டு அகன்று போய்விடாமல், சிவலிங்கத்தின் மீது கட்டியிருக்கும் ஜலதாரை போன்று மனம் இடைவிடாது ஈசனிடத்திலேயே போய்க் கொண்டிருக்க வேண்டும்.

## ஜோசப் பரராஜசிங்கம் படுகொலையின் சூத்திரதாரிகள் யார் என மக்கள் அறிவர்

(ஏறாவூர்)

ஏவலாளிகள் கிழக்கில் ஆட்சியாளர்களாக இருக்க வேண்டும் என்று நினைத்ததன் விளைவாகவே மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் உயிர் பறிக்கப்பட்டது என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 12 ஆவது நினைவேந்தல் மட்டக்களப்பில் நேற்று முன்தினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ்த்தேசியத்தை உடைத்தெறிந்துவிட்டு அந்த இடத்தில் தங்களது ஏவலாளிகளை எங்களுக்கு எஜமானர்களாக மாற்றி அந்த எஜமானர்கள் எங்களை அவர்களது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும்.

அவர்கள் நினைத்ததை செய்ய வேண்டும் என்பதற்காக செய்யப்பட்ட கொலையாகவே மாமனிதர் ஜோசப்பரராஜசிங்கத்தின் கொலையை நான் கருதுகின்றேன். இந்தப் படுகொலையின் சூத்திரதாரிகள் யார் என்பதை மக்கள் அறிந்துள்ளார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு பிளவுபட்ட பின்னர் யாரை ஆதரிக்க வேண்டும் என கொள்கையோடு தீவிரமாகப் பரிசீலித்து முடிவெடுத்து அதன் வழியாக செயற்பட்டதன் காரணமாக அவரது உயிர் பறிக்கப்பட்டது. மாவையகத்தில் பொதுத் தேர்தலில் அரியம் நடைபெற்ற வெற்றிகரமான தோல் விழாவில் சந்தித்தவர்கள் கிழக்கிலும் ஒரு நாடகத்தை அரங்கேற்றுவார்கள். மக்கள் திரட்சியின் போது அவரது எண்ணத்திற்கு என்ன கிடைக்கும் என்பது அனைவருக்கும் தெரியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கொக்குவில் காமாட்சியை வீழ்த்தி சம்பியன் ஆனது அளவெட்டி மத்தி

நெடியகாடு இளைஞர் வி.க நடத்திய 5 பேர் 6 பந்து பரிமாற்றங்களை கொண்ட மென்பந்து சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நெடியகாடு மைதானத்தில் இடம்பெற்றது. இறுதி போட்டியில் அளவெட்டி மத்தி வி.க எதிர்த்து கொக்குவில் காமாட்சி வி.க.மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய காமாட்சி வி.க 4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 49 ஓட்டங்களை பெற்றது. பந்து வீச்சில் தயாளன் 2 இலக்குகளை கைப்பற்றினார். காமாட்சி சார்பாக துடுப்பாட்டத்தில் நீசன் 24 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அளவெட்டி மத்தி வி.க சயாந்தன் மற்றும் அஜித் ஆகியோரின் அதிரடி துடுப்பாட்டத்தில் 3.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் எந்த விதமான விக்கெட்டுகளையும் இழக்காமல் இலகுவாக வெற்றிபெற்று சம்பியன் ஆனது. துடுப்பாட்டத்தில்



அளவெட்டி மத்தி சார்பாக சயாந்தன் -28,அஜித்- 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். (க)

# வடக்கு மாகாண மகுடம் காற்பந்தாட்ட முடிவுகள்

, மாழுசந்தி சென்.மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில், வடக்கு மாகாண மகுடம் காற்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று நடைபெற்று வருகின்றது.

முதற்சுற்று ஆட்டங்கள் விலகல் முறையில் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து, லீக் ஆட்டங்கள் இடம்பெற்றன. லீக் ஆட்டங்களில் 16 அணிகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, போட்டிகள் இடம்பெற்றன.

லீக் சுற்றில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் நான்கு இடங்களையும் பெற்ற அணிகள் பிளே ஓவ் சுற்றுக்குத் தகுதி பெற்றன.

அந்த வகையில் 8 அணிகள் பிளேஓவ் சுற்றுக்குத் தகுதி பெற்றன. பிளே ஓவ் சுற்றில் 8 அணிகளும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

ஏ குழுவில் பலாலி விண்மீன், திக்கம் இளைஞர், வதிரி டயமன்ஸ், ஊரெழு றோயல் அணிகளும், பி குழுவில் இளவாலை யங்ஹென்றீஸ், நாச்சிக்குடா சென்.மேரிஸ், மன்னார் கில்லறி, மன்னார் அந்தோனியார்புரம் விளையாட்டுக்கழகங்கள் என்பன இடம்பெற்றன.

ஒவ்வொரு குழுவிலும், முதலிரு இடங்களைப் பெற்ற அணிகளுக்கிடையில் போட்டிகள் இடம்பெற்று அந்த அணிகள் நேரடியாக அரையிறுதிக்கு தகுதி பெற்றன.

இளவாலை யங்ஹென்றிஸ் அணி, நாச்சிக்குடா சென். மேரிஸ் அணியை வீழ்த்தியும், திக்கம் இளைஞர் அணி, பலாலி விண்மீன் அணியை வீழ்த்தியும் அரையிறுதிக்கு தகுதி பெற்றன.

தோல்வியடைந்த இரண்டு அணிகளும் இரண்டாவது வாய்ப்புக்காக காத்திருந்தன.

தொடர்ந்து, ஒவ்வொரு குழுவிலும் மூன்றாம் நான்காமிடங்களைப் பெற்ற அணிகளுக்கிடையில் எலிமினேற்றர் போட்டி இடம் பெற்றது. ஊரெழு றோயல் அணி, வதிரி டயமன்ஸ் அணியை வீழ்த்தியும், மன்னார் அந்தோனியார்புரம் அணி வருகை தராமையால் மன்னார் கில்லறி அணி வெற்றி பெற்றது.

வெற்றிபெற்ற அணிகள் அரையிறுதிப் போட்டிக்குள் நுழைவதற்கு இன்னொரு போட்டிக்காக காத்திருக்க, தோல்வியடைந்த அணிகள் சுற்றிலிருந்து வெளியேறின.

இந்நிலையில், மிகுதி இரண்டு அரையிறுதி அணிகளையும் தெரிவு செய்வதற்கான போட்டிகள் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன.

குழு ஏ யில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதவுள்ளது.

குழு பி யில், மன்னார் கில்லறி அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென். மேரிஸ் அணி மோதவுள்ளது. (க-26)

# செந்திரனின் துல்லிய பந்துவீச்சு கரவெட்டி ஞானம்ஸ் சம்பியன்





நெடியகாடு யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்திய மென்பந்தாட்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது.

அணிக்கு 8 ஓவர்கள் கொண்டதாக நடைபெற்றது. இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் கரவெட்டி ஞானம்ஸ்அணியை எதிர்த்து மல்லாகம் ஸ்ரீ முருகன் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் அணி, 8 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஜொனி, நரேன் ஆகியோர் தலா 19 ஓட்டங்களையும், ஜனன், கீதன் ஆகியோர் தலா 12 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் மல்லாகம் அணி சார்பாக, வரன், ஜெனுசன் ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

83 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலளித்தாடிய ஸ்ரீமுருகன் அணி, 8 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 63 ஓட்டங்களை மாத்திரம் பெற்று, 19 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் கவில் 21, சிவா 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஞானம்ஸ் அணி சார்பாக, செந்திரன் 3 விக்கெட்களையும் கைப்பற்றினார். இறுதிப் போட்டியின் நாயகனாக ஞானம்ஸ் அணியின் செந்திரன் தெரிவு செய்யப்பட்டார். (க-26)

# வவுனியா அணியை வீழ்த்தி சென்றலைட்ஸ் அணி வெற்றி



யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் அணி, வவுனியா யுனிபிட் அணியை 45 ஓட்டங்களால் வீழ்த்தியது.

இலங்கை துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில், வட மாகாண துடுப்பாட்டச் சங்கத்தின் ஒழுங்கமைப்பில், யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் அணிக்கும் வவுனியா யுனிபிட் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையிலான 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட துடுப்பாட்ட போட்டியொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற சென்றலைட்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. சென்றலைட்ஸ் அணி, 46.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் பிரியலக்சன் 79 ஓட்டங்களையும், வினோத்குமார் 20 ஓட்டங்களையும், ஜெரிக்துசாந் 23 ஓட்டங்களையும், ஜெனோசன் 18 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் வவுனியா அணி சார்பாக, நுவான் பிரசாத் 3 விக்கெட்களையும், விதுஸ் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

197 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலளித்தாடிய வவுனியா யுனிபிட் அணி, 42.4 ஓவர்களில் 151 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் ருசாந்தன் 41 ஓட்டங்களையும், விதுஸ் 26 ஓட்டங்களையும், உசாந்த் 19 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணி சார்பாக, மயூரன் 8.4 ஓவர்கள் பந்துவீசி 13 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும், ஜெரிக்துசாந் 2 விக்கெட்களையும், அஜைராஜ் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (க-26)

# உதைபந்தாட்ட சம்மேளன மத்தியஸ்தர் பரீட்சை

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் புதிய மத்தியஸ்தர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சை எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. அதிகரித்து வரும் உதைபந்தாட்ட போட்டித் தொடர்களுக்கு ஏற்ற வகையில் மத்தியஸ்தர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், புதிய மத்தியஸ்தர்களை உள்வாங்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதன் நிமித்தம் இந்த மத்தியஸ்தர் பரீட்சை நடைபெறவுள்ளது. இதில் பங்குபற்ற ஆர்வமுள்ளவர்கள், அந்தந்த லீக்குகளின் செயலாளர்கள் அல்லது மத்தியஸ்தர் சங்க செயலாளரிடம் விண்ணப்ப படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி பரீட்சைகளில் கலந்து கொள்ளலாம். (க-26)

# ஆட்டமிழந்த வோணர் சதமடித்த அதிசயம்



ஆஷஸ் டெஸ்டில் டேவிட் வோணர் 99 ஓட்டங்களில் ஆட்டமிழந்து பெவிலியன் திரும்பியபோது, மீண்டும் அழைக்கப்பட்டு சதம் அடித்த ருசிகர சம்பவம் அரங்கேறியுள்ளது.

அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகள், தற்போது 4வது ஆஷஸ் டெஸ்டில் விளையாடி வருகின்றன.

துடுப்பாட்டத்தை தொடங்கிய அவுஸ்திரேலிய அணியின் தொடக்க ஆட்டக்காரர் டேவிட் வோணர், 99 ஓட்டங்களில் டம் குரான் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். பின்னர், பெவிலியனை நோக்கி சென்று கொண்டிருந்த வோணரை, கள நடுவர் திரும்ப அழைத்தார்.

குரான் வீசிய பந்து 'நோபோல்' என்று அறிவிக்கப்பட்டதாலேயே, அவர் திரும்பவும் துடுப்பாட்டத்திற்கு வந்தார்.

இதனைத் தொடர்ந்து விளையாடிய வோணர் தனது 24வது சதத்தை அடித்தார். இதனை ரசிகர்கள் ஆரவாரம் செய்து கொண்டாடினர்.

எனினும் வோணர் 103 ஓட்டங்களில், ஜேம்ஸ் ஆண்டர்சன் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

## ஆழிப் பேரலையால்...

திருகோணமலை மாவட்டத்தில் 984 பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 2975 பேரும் அம்பாறை மாவட்டத்தில் 9051 பேரும் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்த பேரழிவு நடைபெற்ற இடங்களிலும், ஆலயங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டிருந்தன. வடக்கில் உடுத்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய இடங்களிலும், கிழக்கில் அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும் நினைவேந்தல்கள் நடைபெற்றன.

இந்த நினைவு தினங்களை அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் அந்தந்த இடங்களை சேர்ந்த பொதுமக்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

இவ்வாறான அழிவு இனிமேல் நடைபெற கூடாது என நினைவு நிகழ்வுகளில் கலந்துகொண்டோர் கதறி அழுதனர். மேலும் அனைத்து நினைவு நிகழ்வுகளிலும் இயற்கையை வஞ்சிக்காது இயற்கையை நேசிப்போம் என வலியுறுத்தப்பட்டிருந்தது. (ம-4)

## புலம்பெயர் உறவு...

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கொள்கைகளில் உறுதியாக உள்ளோம் என்பது மக்களுக்கு நன்றாக தெரியும். பொதுவாக உள்ளூராட்சி தேர்தல் அபிவிருத்தி சார்ந்த தேர்தலாக கணிக்கப்படும். எல்லா கட்சிகளும் அபிவிருத்தியை பற்றி பேசுவார்கள்.

புலம்பெயர் தமிழர் மட்டத்தில் பலரால் ஆதரிக்கப்படும் அமைப்பாக நாம் உள்ளோம். பொய் பிரசாரங்களுக்கு உள்ளாகும் தன்மை வெளிநாடுகளில் குறைவாக உள்ளது. பொய்களை அம்பலப்படுத்தும் நிலை அங்குள்ளது. அதனால்தான் அவர்கள் ஏற்றுக்கொள்ளும் நிலையில் நாம் உள்ளோம்.

அடிப்படையில் இருந்து அபிவிருத்தி செய்வதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால் உள்ளூராட்சி தேர்தலில் தென்னிலங்கையில் உள்ள நிலையை வைத்து அபிவிருத்தி கணிக்கப்படுகிறது. அடிப்படை வசதி அளிக்கப்படாத நிலையில் தான் நாம் உள்ளோம். எமது பகுதியை அபிவிருத்தி செய்வது கேள்விக்குறியாக உள்ளது. அடிப்படை உரிமைகளுடன் வழங்கப்படுவது தான் அபிவிருத்தி.

புலம்பெயர் தமிழ் மக்களின் ஆதரவு எமக்கு உள்ளது. அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் வடகிழக்கில் ஒருங்கிணைந்த வேலைத்திட்டம் மேற்கொள்ள வெளிப்படை தன்மையான வேட்பாளர்களை நிறுத்தி அவர்களின் உதவியை பெற உத்தேசித்துள்ளோம்.

புலம்பெயர் உறவுகள், போருக்கு பின் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு உதவி செய்கிறார்களே தவிர அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு எதையும் ஒதுக்கவில்லை. ஏனெனில் அவர்களுக்கு நம்பிக்கையான வகையில் எத்திட்டமும் இங்கு இல்லை.

இருக்கும் நிர்வாகங்களில் ஒருவருக்கு ஒருவர் சண்டை பிடித்த வண்ணம் உள்ளார்கள். எனவே தமிழ் தேசிய பேரவை தேர்தல வெற்றி ஊடாக புலம் பெயர் தமிழ் மக்களின் நிதி உதவியை பெரியளவில் பெற்று வேலைத்திட்டம் முன்னெடுக்க உத்தேசித்துள்ளோம்.

அரசின் கட்டமைப்பு புலம்பெயர் தமிழ் மக்களிடம் இருந்து நாம் உதவியை பெற விடப்போவதில்லை. உத்தியோக பூர்வ கட்டமைப்பின் ஊடாக நாம் உதவிகளை பெற்று வேலைத்திட்டங்களை செய்யவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-9)

## சட்டங்களை மீறி...

சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன இதனைத் தெரிவித்தார்.

காலஞ்சென்ற சோமவன்ச அமரசிங்கவினால் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் சேவை கட்சி மற்றும் இராணுவ உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பு என்பன எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது சிறிலங்கா சுதந்திர கட்சியின் வெற்றிக்காக ஆதரவளிக்கப் போவதாக அறிவித்துள்ளன. (ம)

## தபால் மூலமான...

என்றும் கூறியுள்ளார்.

மக்களின் வாக்குகளுடன் இந்த தபால் மூல வாக்குகளும் எண்ணப்பட்டு முடிவுகள் வெளியிடப்படும்.

இதேவேளை, தேர்தல் கண்காணிப்பிற்காக வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட மாட்டார்கள் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார். (ம)

## சுகாதார பரிசோதகர்...

யம் அப்பெண்ணின் பெறுமதியான தங்க சங்கிலியை அபகரித்து சென்றுள்ளனர்.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸில் முறையிட்டதனை தொடர்ந்து பொலிஸார் விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர். (ம-19)

## வாக்காளர் அட்டை...

துள்ளது.

தபால் திணைக்களத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறையை முறைமைப்படுத்துவதாக அதிகாரிகள் பல தடவைகள் கூறினாலும், அதனை செயற்படுத்தாமல் இருப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கு முன்னர் இடம்பெற்ற கலந்துரையாடலில் இரண்டு வாரங்களில் தீர்வு பெற்றுத்தருவதாகக் கூறிய வாக்குறுதியும் தற்பொழுது மீறப்பட்டுள்ளதாக தபால் தொழிற்சங்க கூட்டமைப்பின் இணை அழைப்பாளர் கே.ஆர்.வரணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையை தீர்க்க அதிகாரிகள் தவறும் பட்சத்தில் எதிர்வரும் தேர்தலில் வாக்காளர் அட்டைகள் விநியோகிப்பதில் தடைகள் ஏற்படலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## 2,300 ஆண்டுகள்...

வரலாறு குறித்த சுதந்திர ஆய்வுகளை முன்னெடுத்துவரும் களனி பல்கலைக்கழக மாணவர்களினால் இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பல்கலைக்கழக மாணவரான மொஹான் பிரசாத் லங்காகே குறிப்பிடுகையில், இலங்கையில் இதுவரை யாராலும் கண்டுபிடிக்கப்படாத இரண்டு கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதில் எழுதப்பட்டுள்ள விடயங்களை கொண்டு இது 2300 ஆண்டுகளுக்கு மேல் பழமையான கல்வெட்டு என்பதை கண்டறியக் கூடியதாக உள்ளது.

இந்த கல்வெட்டில் எழுதப்பட்டுள்ள விடயங்களை வைத்து நோக்கும்போது இது அரக்கர்கள் மற்றும் வர்த்தகம் தொடர்பான ஒரு கல்வெட்டாக அமைந்துள்ளது.

இது தொடர்பில் தொல்பொருளியல் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டு, ஆராயப்பட்டது. அதன்மூலம் அரக்கர்கள் தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட முதல் கல்வெட்டு இதுவென்பது அறியக் கிடைத்துள்ளது.

எனவே, தொல்பொருளியல் திணைக்களம் இக்கல்வெட்டு தொடர்பாக விரிவான ஆய்வுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும் என்றார். (ம)

## ஊழல் குற்றவாளி...

படலாம். எனினும் குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைப்பது உறுதி என அரச தொழில் முயற்சி இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாபா அபேவர்தன தெரிவித்தார். குற்றவாளிகளை தண்டிப்பதாக ஜனாதிபதி கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வாராந்த செய்தியாளர் சந்திப்பு கட்சி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். (ம)

## நீதியாக நடந்த...

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் ஊடகங்களின் பொறுப்பு குறித்துத் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக வழிமுறைகள் குறித்த வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் ஆசிரியர்கள் உள்ளிட்டோர் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று தெரிவித்தார்.

### அரசாங்க வைத்திய சங்கம்

# தொடர் பணி நிறுத்த போராட்டத்தில் ஈடுபடப் போவதாக எச்சரிக்கை

(கொழும்பு)

வைத்தியர்களுக்கு வழங்கப்படும் மேலதிக வேலைநேர கொடுப்பனவு இரண்டு வாரங்களுக்குள் சம்பளத்துக்கு ஒப்பாக வழங்கப்படவில்லை எனின் தொடர் பணிநிறுத்த போராட்டத்தில் குதிப்பதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் (GMOA) அறிவித்துள்ளது.

2016ஆம் ஆண்டு அதிகரிக்கப்பட்ட சம்பளத்துடன் தொடர்புடைய வேலைநேர கொடுப்பனவு அதிகரிக்கப்படவில்லை என GMOA இன் செயலாளர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அதிகாரிகளிடம் பல்வேறு சந்தர்ப்பங்களில் கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு வாரங்களில் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், அவ்வாறில்லை எனின் மேற்கொள்ளப்படும் தொழிற்சங்க நடவடிக்கையினால் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு அரசு பொறுப்புக்கூற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மகிந்த காலத்து திருடர்கள் ஐ.தே.கவின் பாதுகாப்பில்

### அசாத் சாலி சாடல்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் செயற்பட்ட திருடர்களை ஐக்கிய தேசியக் கட்சி பாதுகாத்து வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் மற்றும் சட்ட மா அதிபர் திணைக்களங்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் வசம் காணப்படுவதனால் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க கொள்ளையர்களை பாதுகாத்து வருவதாக தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி குற்றம் சுமத்தியுள்ளார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கம் கொழும்பில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அசாத் சாலி ஐக்கிய தேசியக் கட்சிக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்குமிடையில் காணப்படும் இரகசிய உறவு என்னவென்று கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த சந்திப்பின்போதே கடந்த கால ஆட்சியின்போது திருடர்களாக செயற்பட்டவர்களை பிரதமர் ரணில் தலைமையிலான அரசாங்கம் பாதுகாத்து வருவதாக அவர் குற்றம் சுமத்தினார். (ம)

இது தொடர்பாக ஊடக நிறுவனங்களின் ஆசிரியர்கள், ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தும் செயலமர்வு ஒன்று நேற்று காலை அரசாங்க தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தச் செயலமர்வில் உரையாற்றுகையிலேயே தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

தொழிநுட்ப மற்றும் நவீன உலகில் பொது ஊடகங்களை நிர்வகிக்க முடியாது. அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் வெளியிடப்படும் தகவல்களில் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர்.

இவை உண்மைக்கு புறம்பானதாக விருந்த போதிலும் 30 செக்கனுக்கு உட்பட்ட தொலைக்காட்சிகாணொளியாக இருந்த போதிலும் பொது மக்கள் இதனை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்களை மேற்கொள்வர். பொதுமக்கள் தொடர்ந்தும் ஊடகங்களை நம்புகின்றனர்.

ஊடகங்களுக்கு ஒழுக்க விதிமுறை இருக்குமாயின் ஊடக வழிகாட்டல் தேவையற்றது. தேர்தலின் போது பொது மக்களுக்கு ஊடகங்கள் மிகப்பொறுப்புடன் செயற்பட வேண்டும். மக்கள் நலத்தினை கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும் அதற்கான பொறுப்பு உண்டு என்றும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

இனவாதம், மதவாதம், சாதிபேதம் உணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் குரோதமான சொற்களைத் தேர்தல் காலத்தில் பயன்படுத்தக் கூடாது என்றும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

தற்பொழுது ஊர்வலம் செல்ல முடியாது. தேர்தலின் போது இலங்கையில் ஊர்வலம் செல்வதற்கு தடை. இதனைத் திருத்தவேண்டுமாயின் இதற்கான சந்தர்ப்பத்தை வழங்குங்கள் நாட்டின் பிரஜைக்கு கட்சி சார்பாக செயற்படவேண்டாம் என்றும் குறிப்பிட்டார்.

ஊடகக் கருத்து கணிப்பு தொடர்பான செய்திகள் தேர்தல் காலத்தில் முன்னெடுக்கப்படுகின்றது. இதனை வெளியிடுவதாயின் காலம், யார் இதனை மேற்கொண்டார்கள், பெயர் விபரங்கள் ஆகியவற்றை உறுதிப்படுத்தி வெளியிடுவது முக்கியமானதாகும்.

அரச சொத்துக்களை பயன்படுத்தி பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுமாயின் அது தவறானதாகும். சிலர் நிதியுதவி வழங்குவார்களாயின் அது இலஞ்சத்திற்கு உட்பட்ட குற்றமாகும். தேர்தல் காலங்களில் பொருட்களை வழங்குவது இலஞ்ச குற்றமாகும் என்று சுட்டிக்காட்டிய அவர், தேர்தல் சட்டம் பாதுகாக்கப்படவேண்டும் என்பதே எமது நோக்கமாகும் என்றார். வாக்களிப்பு நிலையங்களில் பாதுகாப்பிற்காக பொலிஸ் விசேட அதிரடிப்படையினை நாம் எதிர்பார்த்துள்ளோம்.

வாக்களிப்பு நிலையங்களில் பாதுகாப்பிற்கு நாம் தொண்டர்கள் இருவரை வழங்குமாறு வேட்பாளர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

தேர்தல் பாதுகாப்புடன் இடம்பெறுவது மக்களின் பொறுப்பாகும். வாக்களிப்பதற்கு அடையாள அட்டை முக்கியமானதாகும். தமது அடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாத எவருக்கும் தேர்தல் மத்திய நிலையங்களில் பிரவேசிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்றும் தெரிவித்தார்.

அரசியல் நிகழ்ச்சிகளின் போது பக்கச்சார்பற்ற வகையிலும் நடுநிலையாகவும் செயற்படவேண்டும். ஊடகங்கள் தேர்தல் தொடர்பிலான பெறுபேறுகளில் சுயமான கட்டுப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

பொருட்களை வழங்குவது மூலம் தேர்தலுக்கு வாக்களிக்கக் கட்டாயப்படுத்த கூடாது. அரச நிதியில் பொருட்களை விநியோகித்தல் அல்லது தனியார் நிதியில் பொருட்களை விநியோகித்தல் முதலானவற்றை வேட்பாளர் மேற்கொள்வாராயின் இது முழுமையாகத் தவறான விடயமாகும். தேர்தல் காலத்தில் பொருட்களை விநியோகிப்பது தவறானதாகும். இது வாக்குகளை இலக்குகளைக் கொண்டு முன்னெடுப்பது தவறான நடவடிக்கையாகும்.

போட்டியிடும் அரசியல் கட்சி மற்றும் வேட்பாளருக்கு சிவில் பிரஜைக்கு மற்றும் ஊடகங்களுக்கு நாட்டின் சுதந்திரம் மற்றும் நீதியான பொறுப்பு உண்டு. 2009ஆம் ஆண்டில் ஊடகங்களுக்கு இது தொடர்பில் வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. சட்டத்தினால் நிர்வகிக்காது சுயேட்சையாக நிருவகிக்கப்படுவது முக்கியமானதாகும். பொதுமக்கள் தொடர்பில் வேட்பாளர்கள் நம்பிக்கை கொள்ளவேண்டும். சுயேட்சை குழுக்களுக்கும் ஊடகங்களில் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்த அவர், இந்தத் தேர்தலில் போட்டியிடும் சுயேட்சை வேட்பாளர் குழுக்களை கொழும்புக்கு அழைப்பதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார். (ம)

